
# உதயன்

34 பக்கங்கள்

விலை ரூபா 25.00

www.onlineuthayan.com

சுடர் 28 கதிர் 071 வள்ளுவர் ஆண்டு 2044 தை 23 செவ்வாய்க்கிழமை (05/02/2013) UTHAYAN - A Lively National Tamil Daily

பாகிஸ்தான் படுதோல்வி

23

நீர்மூழ்கிக் கப்பல் அருங்காட்சியகம்

08



பிரான்ஸின் 30 போர் விமானங்கள் அதிரடி

09



தென்கொரியா–அமெ. கடற்போர் ஒத்திகை

10



# வெளியார் தலையீட்டை அனுமதியோம்

## சுதந்திர தின உரையில் ஐ.நா.சாசனத்தையும் சுட்டிக்காட்டினார் ஜனாதிபதி

திருமலை, பெப்.5

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் எந்தவொரு நாடும் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்று ஐ.நாவின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை ஐ.நாவும், இதர நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் என நம்புகின்றேன்.

- இவ்வாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ திருமலையில் நேற்று தெரிவித்தார்.

நாட்டின் இறைமை, ஒருமைப்பாட்டிற்காக பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பல்வேறு குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இவ்வாறான குற்றச்சாட்டுகளுக்கு அபிவிருத்தி மற்றும் நல்லிணக்கமே சிறந்த பதில்களாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

நாட்டின் 65 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டம் திருகோணமலையில் கடும் பாதுகாப்புகளுக்கு மத்தியில் முப்படைகளின் தளபதியும் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று நடைபெற்றது. நிகழ்வில் தேசியக் கொடியை ஏற்றிவைத்து படைகளின் தளபதிகளுக்கு முன்பாக நின்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

பார்க்க பக்கம் 04



சுதந்திர தினத்தில் ஜனாதிபதி தேசியக் கொடி ஏற்றியபோது...

## கூகுளில் சிங்கம்

Google

கொழும்பு, பெப்.5

நாளாந்தம் ஆறு கோடிக்கும் மேற்பட்டோர் பார்வையிடும் உலகப் பிரசித்திபெற்ற 'கூகுள்' இணையத்தளம், அதன் முகப்புச் சின்னத்தை இலங்கையின் தேசியக் கொடியைப் பிரதிபலிக்கும் வகையில் நேற்று வடிவமைத்திருந்தது.

'G' என ஆரம்பமாகும் முதல் எழுத்துக்குள் வாள் ஏந்திய சிங்கத்தின் உருவம் இணைக்கப்பட்டிருந்ததுடன்,

பார்க்க பக்கம் 04

# அமெ. உயர்குழு டில்லியுடன் பேச்சு

## இலங்கை மீதான தீர்மானம் குறித்து இந்தியாவுக்கு விளக்கம்

கொழும்பு, பெப்ரவரி 5

ஜெனிவாவில் அடுத்த மாதம் நடைபெறவுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கூட்டத்தொடரில் இலங்கைமீது அமெரிக்கா கொண்டுவரவுள்ள பிரேரணைக்கு ஆதரவு திரட்டும் வகையில் அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் குழு புதுடில்லிக்கு அவசர பயணம் மேற்கொண்டு அங்கு பேச்சு நடத்தியுள்ளது. இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க உயர்மட்ட அதிகாரிகள் மூவரும் இலங்கைப் பயணம் முடிந்த கையோடு புதுடில்லி சென்று பேச்சுக்களில் ஈடுபட்டனர்.

அந்தப் பேச்சுக்களின் போது ஜெனிவாவில் கொண்டுவரப்படவுள்ள இலங்கை மீதான பிரேரணை குறித்து அமெரிக்க அதிகாரிகள் புதுடில்லிக்கு விளக்கமளித்துள்ளனர் என்று தெரியவருகிறது.

பார்க்க பக்கம் 04

இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையின் நோக்கம், அதற்கு இந்தியாவின் ஆதரவு, தெற்காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பு நிலைமை குறித்து இரு தரப்புப் பேச்சுக்களிலும் ஆராயப்பட்டுள்ளது





## நல்லிணக்கக் கதவுகள் அடைக்கப்பட்டே உள்ளன

### இதுதான் சுதந்திரம் என்கிறார் மனோ

கொழும்பு,பெப்.5

இந்த அரசினால் உருவாக்கப்பட்ட கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் கூட இன்னும் நடைமுறை செய்யப்படவில்லை. நல்லிணக்கத்துக்கான எல்லாக் கதவுகளும் அடைத்து வைக்கப்பட்டுள்ளன. இதுதான் இன்றைய சுதந்திர நாட்டின் யதார்த்தம். இந்த நிலையில் நல்லிணக்கம் எங்கிருந்து வரும்? இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார் ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன்

அதிகாரத்தைப் பகிர்ந்து ஐக்கியப்படும் இயக்கம் தொடர்பாகக் கட்சியின் கண்டி மாவட்ட செயற்குழு உறுப்

பார்க்க பக்கம் 04

## மாணவரை விடுவிக்காவிடின் சர்வதேச ரீதியில் விசாரணை

### வலியுறுத்துகிறது மன்னிப்புச் சபை

கொழும்பு, பெப்.5

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பொலிஸ் பாதுகாப்பில் தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவரையும் விடுவிக்குமாறு லண்டனைத் தலைமையகமாகக்கொண்டு இயங்கிவரும் சர்வதேச மனித உரிமைகளுக்கான சர்வதேச மன்னிப்புச் சபை கோரிக்கை விடுத்துள்ளது.

விடுதலை செய்யாவிட்டால், சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புக் கோட்பாட்டுக்கிணங்க வழக்கு

பார்க்க பக்கம் 04

## வலி.வடக்கு உண்ணாவிரதத்துக்கு பொது அமைப்புகளும் முழு ஆதரவு

யாழ்ப்பாணம்,பெப்.5

வலி.வடக்கு மக்களின் வாழ்விடங்கள் விடுவிக்கப்பட வேண்டும் எனக் கோரியும், படையினரால் வீடுகள் இடித்து அழிக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடத்தப்படவுள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு பொது அமைப்புகள் தமது முழுமையான ஆதரவை வழங்க முன்வந்துள்ளன.

கடந்த 23 வருடங்களுக்கு மேலாக வலி.வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் வாழ்ந்து வருகின்றனர். போர் முடிந்து 3 ஆண்டுகள் கடந்த நிலையிலும் வலி. வடக்கில் இன்னமும் 24 கிராம சேவகர் பிரிவுகளை உள்ளடக்கிய பகுதிகள் விடுவிக்கப்படாமல் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ளன.

அந்தப் பகுதிகளை உள்ளடக்கி நிரந்தரப் பாதுகாப்பு வேலிகள் அமைக்கப்பட்டு அவற்றை முற்றாக விடுவிக்காமல் இருப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்

பார்க்க பக்கம் 04

## வன்னியில் மீண்டும் பெரு மழை

### அறுவடை செய்த நெற்பயிர்கள் நாசம்

கிளிநொச்சி, பெப்.5

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் நேற்று மாலை திடீரென கொட்டித்தீர்த்த கனமழையினால் அங்கு மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

திடீரென பெய்த மழையினால் வன்னியில் வயல்களில் அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த நெற் கதிர்கள் மழையில் நனைந்து நாசமாகின. ஏற்கனவே நெல் விதைப்பின்போதும் கொட்டிய மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் நெற் பயிர்கள் அடித்துச் செல்லப்பட்டிருந்தன. இந்தப் பாதிப்பிலிருந்து விவசாயிகள் மீள்வதற்குள் அவர்களை மீண்டும் பாதிப்படையச் செய்திருக்கிறது நேற்றைய கனமழை.

நெற்பயிர்களின் அறுவடை கடந்த சில நாள்களாக வன்னியில் மும்முரமாக நடந்தன. ஏற்கனவே மழையினால் அங்கு நெற்செய்கை மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது. விவசாயிகளும் பெரும் நஷ்டத்தை எதிர்கொண்டிருந்தனர். இந்த நஷ்டத்தை ஈடுசெய்ய தப்பிய நெற்பயிர்களாவது உதவும் என அவர்கள் நம்பியிருந்தனர். அவர்களின் நம்பிக்கையை பொய்ப்பிக்கும் வகையில் நேற்று மாலை அங்கு கடும் மழை

பார்க்க பக்கம் 04

## இலங்கையில் ஆண்களை மிஞ்சினர் பெண்கள்

கொழும்பு, பெப் 5

இலங்கையில் பெண்கள் மற்றும் முதியவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகச் சனத்தொகைக் கணக்கெடுப்பில் இருந்து தெரியவந்துள்ளது.

சனத்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தினால்,

பார்க்க பக்கம் 04

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கோட்டா முறையில் மாற்றம் யாழ்.மாணவருக்கு பாதிப்பு

## எனினும் சபையின் அங்கீகாரம் இதுவரை இல்லை

யாழ்ப்பாணம்,பெப்.5

பல்கலைக்கழக மாணவர்களின் அனுமதி தொடர்பில் நடைமுறையில் இருக்கும் மாவட்டக் கோட்டா முறை மாற்றப்பட்டால், அண்மைய சனத் தொகைக் கணக்கெடுப்பின் பிரகாரம் யாழ். மாவட்டத்தில் இருந்து பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர் எண்ணிக்கையில் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

மாவட்டக் கோட்டா முறையை மாற்றுவது தொடர்பான விடயம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுச் சபை அங்கீகாரத்துடனேயே மேற்கொள்ளப்பட வேண்டும். அவ்வாறு இன்னும் அது சபையில் சமர்ப்பிக்கப்படவில்லை. இதனால் கடந்த வருடம் க.பொ.த. உயர்தரப் பரீட்சை முடிவுகளின் மூலம் பல்கலைக்கழகத்துக்குத் தெரிவான யாழ்.மாவட்ட மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படுவதற்குச் சந்தர்ப்பம் மிகக் குறைவாகவே உள்ளது என யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் தெரிவித்தார்.

மாவட்டக் கோட்டா முறை மாற்றி, அமைக்கப்படவுள்ளமை தொடர்பில் செய்தி வெளியாகியுள்ள நிலையில் அது பற்றிக் கேட்டபோதே சிவநாதன் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,

1981 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சனத் தொகை கணக்கெடுப்பின் பிரகாரமே மாவட்ட கோட்டா தீர்மானிக்கப்படுகிறது. அதாவது தெரிவு இடம்பெறுகிறது. அன்று தொடக்கம் 40 வீதமான மாணவர்கள் அவர்களின் திறமை அடிப்படையிலும், 55 வீதமான மாணவர்கள் அவர்களின் மாவட்டக் கோட்டா முறையிலும், 5 வீதமான மாணவர்கள் அவர்களின் பின்தங்கிய பிரதேச மாவட்டக்கோட்டா அடிப்படையிலும் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

1981 ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஏற்பட்ட சனத்தொகை மாற்றத்துக்கு ஏற்ப கோட்டா முறையில் மாற்றம் செய்யப்படவில்லை என்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

அதன்பிரகாரம் தற்போதுள்ள கோட்டா முறையை மாற்றி கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளுக்கு அமைய, புதிய முறையை அறிமுகம் செய்வது தொடர்பில் ஆராயப்பட்டு வருவதாகக் கூறப்படுகிறது.

இவ்வாறு கோட்டா முறை மாற்றப்படும் பட்சத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட சனத் தொகைக் கணிப்பின்படி யாழ்.மாவட்டத்திலிருந்து பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும். சனத்தொகைக் கணிப்பீட்டின்படி முன்னர் 6 இலட்சமாக இருந்த யாழ். குடாநாட்டுச் சனத்தொகை தற்போது 4 இலட்சமாகக் குறைவடைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. அதன்படியே பல்கலைக்கழகத்துக்கான தெரிவு இடம்பெறும். இதனால் யாழ்ப்பாணத்தில் இருந்து தெரிவாகும் மாணவர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்படும்.

ஆனால் மாவட்டக்கோட்டா முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படுவதாக இருந்தால் அதனை நாடாளுமன்றில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற வேண்டும். அதன் பின்னரே அதனை நடைமுறைப்படுத்த முடியும். ஆயினும் இது சபையின் அங்கீகாரத்துக்கு இதுவரை சமர்ப்பிக்கப்படாமையால் கடந்த வருடம் க.பொ.த.உயர்தரப் பரீட்சை முடிவுகளின்படி பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவாகும் மாணவர் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுவதற்கு சந்தர்ப்பம் மிகக்குறைவு.

மாவட்டக் கோட்டா முறையில் மாற்றம் ஏற்படுத்தப்படும் பட்சத்தில் யாழ்ப்பாண மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படுவது மாணவர்களின் திறமை அடிப்படையிலே அமையவுள்ளது. எனவே எமது மாணவர்கள் மேலதிக மாக நிறையக் கற்றலில் ஈடுபட வேண்டிய கட்டாயத் தேவை ஏற்பட்டுள்ளது.

சாதாரண கற்றல் மூலமாகப் பரீட்சையில் சித்தியடையலாம். ஆனால் மேலதிகமாகப் போட்டி அடிப்படையில் கற்பதன் மூலமாகவே பல்கலைக்கழகத்துக்குத் தெரிவாகும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (4)

## வலி.வடக்கில் இதுவரை 15 வீடுகள் இடித்தழிப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5

வலி.வடக்குப் பிரதேச செயலர் பிரிவில் நிரந்தர பாதுகாப்பு வேலிக்குள் உள்ளடங்கும் பிரதேசத்தில் படையினரால் கடந்த புதன் கிழமை தொடக்கம் இதுவரை 15 வீடுகள் இடித்து தரை மட்டமாக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் இடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை இதனைவிட அதிகமாகவே இருக்கும் என்றார் வலி.வடக்குப் பிரதேச சபையின் தலைவர் சோ. சுகிர்தன்.

தொண்டமானாறு முதல் காங்கேசன்துறை வரையான உயர்பாதுகாப்பு வலயப் பகுதியில் படையினரால் நிரந்தரப் பாதுகாப்பு வேலி அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பாதுகாப்பு வேலிக்கு உள்பக்கமாக மண் அணை காணப்படுகின்றது.

இந்த மண் அணையை கடந்த புதன்கிழமை தொடக்கம் படையினர் 'புல்டோசர்' மூலம் இடித்து அகற்றி வருகின்றனர். இதன்போது இந்தப் பகுதியினுள் உள்ளடங்கும் பொது மக்களின் வீடுகளும் இடித்து தரை மட்டமாக்கப்பட்டு வருகின்றன.

இதனால் குரும்பசிட்டி, கட்டுவன், வீமன்காமம், ஒட்டகப்புலம், வயாவிளான் பிரதேசங்களில் இதுவரை 15 வீடுகள் இடிக்கப்பட்டுள்ளமை தொடர்பில் மக்கள் தனது கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதாக பிரதேச சபைத் தலைவர் சோ.சுகிர்தன் தெரிவித்தார்.

உண்மையான எண்ணிக்கை இதைவிட அதிகமாகவே இருக்கும். எம்மால் செல்ல முடியாத உயர் பாதுகாப்பு வலய எல்லைக்குள் வீடுகள் இடிக்கப்பட்டன. அவை தொடர்பில் கணக்கெடுக்க முடியாதநிலை காணப்படுகிறது என்றும் அவர் மேலும் கூறினார். (த-5)

## வீடு திரும்பிய இளைஞன்

காணாமல் போயிருந்த குருநகர் இளைஞன் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு வீடு வந்து சேர்ந்தார் என்று யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ். குருநகர் கடற்கரையை வீதியைச் சேர்ந்த மக்மன் பிரதீபன் (வயது-17) என்ற இளைஞனே கடந்த செவ்வாய்க் கிழமை காணாமல் போயிருந்தார். இது தொடர்பில் யாழ்.பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையிலே நேற்று முன்தினம் இரவு வீதிவழியே சென்று கொண்டிருந்த அவரை அவரது சகோதரன் கண்டறிந்து வீட்டிற்கு அழைத்துச் சென்றார். அவர் குறிப்பிட்ட தொகைப்பணத்தை வைத்திருந்தமையால் சாப்பாடு உட்பட இதர தேவைகளை நிறைவு செய்திருந்தார் என்று கூறப்பட்டது. இளைஞன் வீடு திரும்பியதையடுத்து பொலிஸில் செய்யப்பட்டிருந்த முறைப்பாடு வாபஸ் பெறப்பட்டது. (த-4)

## பொலிஸ் உத்தியோகத்தரெனக் கூறி நுழைந்து வீட்டில் தேடுதல் நடத்தி பணமும் சூறை

### போலி ஆசாமி யாழ். பொலிஸ் நிலையத்தில் வைத்துக் கைதானார்

யாழ்ப்பாணம்,பெப்.05

பொலிஸ் உத்தியோகத்தரெனக் கூறிக்கொண்டு அத்து மீறி வீடு புகுந்த நபர் வீட்டிலிருந்தவரைத் தாக்கிவிட்டு அங்கிருந்த 20 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துச் சென்ற சம்பவம் அண்மையில் அரியாலையில் இடம்பெற்றது. குறித்த ஆசாமி முரண்பட்ட இரு தரப்பினரை பொலிஸ் நிலையத்தில் வைத்து சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த போது முறைப்பாட்டுக்காரரான அரியாலைவாசி சந்தேகநபரை இனம்கண்டு கொண்டு கொண்டார்.

அதை அடுத்து கைது செய்யப்பட்ட அந்த நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு அவர் பிணையில் விடுவிக்கப்பட்டார். அவருக்கு எதிரான வழக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

யாழ். அரியாலை மாம்பழம் சந்தியை அண்மித்துள்ள வீட்டிலேயே இந்த அத்துமீறல், தாக்குதல் மற்றும் பணம் சூறையாடல் சம்பவம் இடம் பெற்றிருந்தது. இது தொடர்பாக யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடும் பதிவு செய்யப்பட்டிருந்தது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது:-

கொட்டடியைச் சேர்ந்த பிரஸ்தாப சந்தேகநபர் 'கராஜ்' உரிமையாளர் ஒருவரையும் அழைத்துக் கொண்டு அரியாலைக்குச் சென்றுள்ளார். மோட்டார் சைக்கிள் வாங்க வேண்டும் என்று கூறியே 'கராஜ்' உரிமையாளரையும் கூட்டிச் சென்றார். மாம்பழம் சந்தியிலுள்ள குறித்த வீட்டுக்குச் சென்று அத்துமீறி உள்நுழைந்துள்ளார்.

தன்னை பொலிஸ் உத்தியோகத்தர் என்று கூறி வீட்டு அறைகளுக்குள் நுழைந்து தேடுதல் நடத்தியுள்ளார். அவரது நடத்தையில் சந்தேகம் கொண்ட குறித்த வீட்டுக்காரர் அவரை யார் என்று விசாரித்திருக்கிறார். அவ்வேளை தான் வைத்திருந்த தலைக்கவசத்தால் வீட்டுக்காரரைத் தாக்கிவிட்டு அங்கிருந்து 20 ஆயிரம் ரூபா பணத்தையும் அபகரித்துக் கொண்டு சென்றுவிட்டார். ஆனால் வீட்டுக்காரர் அவர்கள் வைத்திருந்த மோட்டார் சைக்கிள் இலக்கத்தை குறிப்பெடுத்துக் கொண்டார்.

சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்தார். பிறிதொரு நாள் அவர் யாழ். பொலிஸ் நிலையத்துக்குச் சென்றிருந்தார். அதன் போதே இரண்டு தரப்பினரை சமரசம் செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்த சந்தேக நபரை, வீட்டுக்காரர் இனங்காட்டினார்.

பொலிஸ் நிலையத்தில் வைத்து அடையாளம் காட்டி சந்தேகநபர் கைது செய்யப்பட்டார். யாழ். நீதிமன்றில் சந்தேகநபர் முற்படுத்தப்பட்டபோது விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டது. எனினும் சந்தேக நபர் சார்பில் முன்னிலையான சட்டத்தரணி சந்தேகநபரைப் பிணையில் விடுவித்தார். சந்தேகநபர் மீதான வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.(ஒ-4)

## அலன்ரின் எம்.பி. விபத்தில் காயம்

கிளிநொச்சி,பெப் 5

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரினின் வாகனம் குடைசாய்ந்ததில் அவர் உட்பட இருவர் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சிக்கும் மாங்குளத்துக்கும் இடையில் ஏ - 9 வீதியில் நேற்று மாலை 6.30 மணியளவில் இந்த விபத்துச் சம்பவம் இடம் பெற்றது.

இதனால் இந்த வாகனத்தில் பயணம் செய்து கொண்டிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சில்வெஸ்திரி அலன்ரின் காயத்துக்கு உள்ளாகியுள்ளார். அவருடைய பாதுகாப்பு உத்தியோகஸ்தர் ஒருவர் கடுமையான காயங்களுக்கு உள்ளாகியுள்ளார்.

காயமடைந்த இருவரும் உடனடியாக மாங்குளம் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டு, பின்னர் அம்புலன்ஸ் வண்டிமூலம் கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக மாற்றப்பட்டுள்ளனர். (த)

## நூலகம் திறப்பு விழா

இணுவில் மத்திய கல்லூரி ஆரம்பப் பாடசாலையில் நீண்ட காலமாக நிலவி வந்த நூலக வசதியின்மையைப் போக்கும் வகையில் அமைக்கப்பட்ட புதிய நூலகம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

இணுவில் கலையொளி மன்றத்தின் ஏற்பாட்டில் பாடசாலையின் வகுப்பறையொன்றும் திருத்தம் செய்யப்பட்டு இதன் போது கையளிக்கப்படவுள்ளது.

கலையொளி மன்றத்தின் தலைவர் யோ.சுகந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பாடசாலையின் அதிபர் எஸ்.சதானந்தன் கலந்து கொண்டு புதிய நூலகக் கட்டடத்தை திறந்து வைக்கவுள்ளார். (ங-86)

## யாழ்.சிறையிலிருந்து 9 கைதிகள் விடுதலை



யாழ்ப்பாணம், பெப்.05

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினத்தை ஒட்டி யாழ்.சிறைச்சாலையில் தண்டனை பெற்று வந்த பெண் உட்பட 9 பேர் விடுதலை செய்யப்பட்டனர்.

நீதிமன்றினால் அபராதம் விதிக்கப்பட்டு அதனைச் செலுத்தத் தவறியமையால் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களே நேற்று இவ்வாறு விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்களை விடுவிக்கும் நிகழ்வு யாழ். சிறைச்சாலையில் சிறைச்சாலை அத்தியட்சகர் எச்.ஏ.சி.பெரேரா தலைமையில் நேற்று நடைபெற்றது. யாழ்.சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் எஸ். இந்திரகுமார் உட்பட சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

சுதந்திர தினத்தை ஒட்டி ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் பேரில் நாடளாவிய ரீதியில் பல கைதிகள் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். வெலிக்கடைச் சிறைச்சாலையிலிருந்து 130 கைதிகளும், போகம்பரை சிறைச்சாலையிலிருந்து 114 கைதிகளும் விடுதலை செய்யப்பட்டனர் என்றுதெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு கைதிகளுக்கு விசேட உணவு வழங்கப்பட்டது. முன்னதாக தேசியக் கொடியேற்றப்பட்டது. பின்னர் சிறை உத்தியோகஸ்தர்களின் மரியாதை அணிவகுப்பு இடம் பெற்றது. அதைத் தொடர்ந்து கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர். (த-4)

## 'விஸ்வரூபம்' வெளியாகிறது 7ஆம் திகதி


பலத்த சர்ச்சைகளை ஏற்படுத்திய விஸ்வரூபத்துக்கு விதிக்கப்பட்ட தடைகள் அனைத்தும் நேற்று நீக்கப்பட்ட நிலையில், நாளை மறுதினம் 7 ஆம் திகதி இத் திரைப்படம் தமிழகத்தில் வெளியிடப்படுகிறது என நடிகர் கமலஹாசன் நேற்று அறிவித்துள்ளார்.

'விஸ்வரூபம்' திரைப்படம் குறித்துத் தொடரப்பட்ட அனைத்து வழக்குகளும் வாபஸ் பெறப்பட்டுள்ளதால் இந்த விவகாரம் முடிவுக்கு வந்தது என சென்னை உயர்நீதிமன்றம் நேற்று அறிவித்தது.

இந்த வழக்கு நீதிபதி ராஜேஸ்வரன் முன்னிலையில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சந்திரஹாசன் சார்பில் முன்னிலையான மூத்த சட்டத்தரணி பி.எஸ் ராமன், இந்த வழக்குத் தொடர்பாக தங்களுக்கும் தமிழக அரசுக்கும் இடையே சுமுகமான உடன்பாடு ஏற்பட்டுள்ளதால், இந்த வழக்கை வாபஸ் பெறவிரும்புவதாகக் கூறி மனுத் தாக்கல் செய்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதி விஸ்வரூபம் பட வழக்கை முடித்து வைக்க உத்தரவிட்டார்.

இந்த நிலையில், விஸ்வரூபம் படத்தை தமிழகத்தில் வெளியிடும் திகதியை நடிகர் கமல் நேற்று அறிவித்தார்.

# இலங்கையின் சுதந்திர தினத்தில் குடாநாட்டில் பறந்தன கொடிகள்




யாழ்.செயலகத்தில் சாவகச்சேரி நகரில் தென்மராட்சி கல்வி வலயத்தில் சாவகச்சேரி நகரசபையில்

யாழ்ப்பாணம்,பெப்.5

*யாழ். குடா நாட்டின் பல பகுதிளிலும் இலங்கையின் சுதந்திர தினத்தில் தேசிய கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. அத்துடன் யாழ்.மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்கள் தோறும் நேற்றுக்காலை தேசிய கொடி ஏற்றப்பட்டது.*

இலங்கையின் 65 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் நேற்று இடம்பெற்றிருந்த நிலையில் பிரதான வைபவம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் திருகோணமலையில் இடம்பெற்றது.

மாவட்டங்கள் தோறும், பொது நிர்வாக உள்ளூநாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக சுதந்திர தின கொண்டாட்டங்கள் இடம்பெற்றன.

யாழ். மாவட்டத்தில், யாழ். மாவட்ட செயலகத்தில் காலை 9 மணியளவில் அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். பாடசாலை மாணவிகள், தமிழ்மொழியில் தேசியம் கீதம் இசைத்தனர்.

இதேபோன்று யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களிலும் அந்தந்தப் பகுதி பிரதேச செயலாளர்கள் தேசியக் கொடியை ஏற்றினர்.

மேலும் பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகம் என்பன தேசியக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அங்கு வர்ண மின் குமிழ்களும் ஒளிரவிடப்பட்டிருந்தன.

இதனை விட யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் இலங்கையின் தேசியக்கொடி பறக்கவிடப்பட்டிருந்தது. இராணுவத்தினர் தாம் நிலை கொண்டுள்ள முகாம்களில் கொடிகளைப் பறக்க விட்டிருந்தனர்.

தமது பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்கள், பிரதான வீதிகளில் அமைந்துள்ள வீடுகளிலும் இலங்கையின் தேசியக் கொடியை பறக்க விடுமாறு கட்டாயப்படுத்தினர் என்று மக்கள் தெரிவித்தனர்.

சில இடங்களில் கொடிகளை படையினர் வீடுகளின் முன்பாக கட்டி விட்டிருந்தனர். அத்துடன் வாகனங்களிலும் தேசியக் கொடியை கட்டாயம் பறக்க விடுமாறு படையினர் நிர்ப்பந்தப்படுத்தினர்.

இதேவேளை, யாழ்.நகரப் பகுதியான ஐந்து சந்திப் பகுதியில், யாழ்.கிளிநொச்சி முஸ்லிம் சம்மேளனத்தால் இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டங்கள் நடத்தப்பட்டன. அத்துடன் அந்தப் பகுதியால் போவோர் வருவோர் மறிக்கப்பட்டு இனிப்புகளும் பரிமாறப்பட்டன.

தென்மராட்சி பிரதேசத்தில் அரச திணைக்கள அலுவலகங்கள், கூட்டுறவு அலுவலகங்கள், வங்கிகள், பொலிஸ் நிலையங்கள், படைமுகாம்கள், வைத்திய சாலைகள் போன்ற இடங்களிலும் திணைக்களத் தலைவர்களால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதமும் இசைக்கப்பட்டது. சாவகச்சேரி, கொடிகாமம், கைதடி ஆகிய பிரதேசங்களில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களிலும் தேசியக்கொடி ஏற்றப்பட்டு காணப்பட்டன.

நேற்று பொது விடுமுறை தினமாக இருந்த போதிலும் அனைத்து அலுவலகங்களிலும் அனைத்து தர உத்தியோகத்தர்களும் ஊழியர்களும் நிகழ்வுகளில் கலந்து கொண்டனர்.

கொடியேற்ற நிகழ்வு முடிவுற்றதும் சுதந்திர தின உரை திணைக்களத் தலைவர்களால் நிகழ்த்தப்பட்டன.

சாவகச்சேரி நகரப் பகுதியில் சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். நிகழ்வில் வர்த்தகர்கள், படையினர், பொலிஸார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி பிரதேச செயலகங்களில் நேற்று காலை 9 மணியளவில் பிரதேச செயலாளர்களால் தேசியக் கொடி ஏற்றப்பட்டு தேசிய கீதம் இசைக்கப்பட்டது.

வடமராட்சிப் பிரதேசத்தில் உள்ள ஏனைய திணைக்களங்கள், அரச அலுவலகங்கள், சபைகள், கூட்டுத்தாபனங்களிலும் தேசிய கொடிகள் பறக்கவிடப்பட்டன. பருத்தித்துறை, நெல்லியடி பஸ் நிலையங்களிலும் படையினரின் ஏற்பாட்டில் தேசியக் கொடிகள் ஏற்றப்பட்டு பறக்கவிடப்பட்டிருந்தன.

(ம-4-5-8- 9-14-86-ரி)

## கருத்துரை நிகழ்வு

யாழ்ப்பாணம்,பெப்.5

திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரியின் ஏற்பாட்டில் மாதந்தோறும் ஆங்கிலத்தில் நடத்தப்பட்டு வரும் கருத்துப் பரிமாற்ற கள நிகழ்வின் இந்த மாதத்துக்கான நிகழ்வு இன்று செவ்வாய்க்கிழமை மாலை 5 மணிக்கு கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளது.

அருள் கலாநிதி எ.எப்.ஜெயசேகரம் அடிகள் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் 'தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள்' வாழ்வும் பணியும் என்னும் பொருளில் கவிஞர் சோ.பத்மநாதன் ஆங்கில மொழியில் உரையாற்றுவார்.

தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருமறைக் கலாமன்றம் இந்த ஆண்டில் முன்னெடுக்கவுள்ள ஆய்வரங்க தொடர் நிகழ்வின் ஆரம்ப நிகழ்வாக இது அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆங்கில மொழி புலமையாளர்கள் கலந்து கொள்ளும் இந்த அமர்வில் ஆர்வமுள்ள அனைவரும் கலந்து கொள்ள முடியும். (ம)

## இரத்த தானம்

யாழ்ப்பாணம்,பெப்.5

நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் 18 பேர் இரத்ததானம் செய்தனர்.

செலான் வங்கி நெல்லியடிக் கிளை உத்தியோகத்தர்களும், நெல்லியடி வட்ட லயன்ஸ் கழகத்தினரும் இணைந்து இரத்த தானத்தை வழங்கினர்.

கொடிகாமம் வீதி நெல்லியடியில் அமைந்துள்ள ஏசியன் கணினி நிலையத்தில் வைத்து பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்திய சாலை இரத்த வங்கிப் பிரிவினர் இரத்தத்தை சேகரித்தனர். (ம-8)

## இனந்தெரியாதோரால் தாக்கப்பட்ட இருவர் வைத்தியசாலையில்

தென்மராட்சி,பெப்.5

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் நேற்று முன்தினம் நள்ளிரவு நேரத்தில் இனந்தெரியாதோரால் தாக்கப்பட்டு வீதியில் மயங்கிய நிலையில் காணப்பட்ட இருவர் வீதி ரோந்துப் பொலிஸாரால் நேற்று அதிகாலை சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

வரணி தேவாலய வீதியைச் சேர்ந்த துரைராசா குன்றக்குமரன் (வயது 34), வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த சிவராஜசிங்கம் முகுந்தன் (வயது 26) ஆகிய இருவருமே அனுமதிக்கப்பட்டவர்களாவர்.

இவர்கள் இருவரும் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர். (ம-9)



*காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயத்தின் 125 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நாள்காட்டி வெளியீட்டு விழா பாடசாலை சயம்பு மண்டபத்தில் இடம்பெற்றது. வடமாகாணக் கல்வி அமைச்சின் பிரதிச் செயலாளர் ப.விக்னேஸ்வரன் நாள்காட்டியை வெளியிட்டு வைக்க தீவக வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.ஜோன் குயின்ரன் பெற்றுக் கொள்கிறார். (ம-250)*

## தொண்டமானாறு வெளிக்கள நிலையத்துக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம்,பெப்.5

டில்மா நிறுவனத்தின் 25 இலட்சம் ரூபா நிதியுதவியுடன் தொண்டமானாறில் அமைக்கப்பட்ட வெளிக்கள நிலையத்துக்கான புதிய கட்டடம் கடந்த முதலாம் திகதி வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

மாணவர்களது வெளிக்கள ஆய்வுக்காகவும், விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடனும் அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற காணியில் இந்த வெளிக்கள நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் வட மாகாண ஆளுநர் ஜீ.ஏ. சந்திரசிறி, , பாரம்பரிய சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வெளிக்கள நிலையத்தின் உப தலைவர் அனந்தராஜ், கொழும்பு பல்கலைக்கழக பேராசிரியர் யர் கொற்றகம, யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம், வட மாகாண கல்வி அமைச்சின் செலயாளர் எஸ். சத்தியசீலன், வட மாகாண ஆளுனரின் செயலாளர் எல்.இளங்கோவன்,' பேராதனைப் பல்கலைக்கழக பேராசிரியர் நிமல் குணதிலக உட்பட வலயக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பளார்கள் பலரும் பலர் கலந்து கொண்டனர். (ம-14-ரி)

## மதுபோதையில் இடையூறு விளைவித்தவருக்கு மறியல்

தென்மராட்சி,பெப்.5

தனியார் பயணிகள் வாகனத்தில் சக பயணிகளுக்கு மதுபோதையில் இடையூறு விளைவித்த வன்னி வாசிக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டது.

யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்ட தனியார் பயணிகள் வாகனத்தில் மதுபோதையில் பயணித்த செட்டிக்குளம் வாசி, சக பயணிகளுக்கு இடையூறு விளைவிப்பதாக கிடைத்த முறைப்பாட்டை அடுத்து சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக வாகனத்தை பொலிஸார் மறித்து அந்த நபரை கைது செய்தனர்.

பயணிகள் வாகனத்தில் சக பயணிகளுக்கு இடையூறு விளைவித்தமை, அதனுள்ளிருந்த அரச பணியாளர்களை அவமதித்தமை போன்ற குற்றச்சாட்டுக்களுடன் இந்த நபர் பொலிஸாரால் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பதில் நீதிவான் செ.கணபதிப்பிள்ளை இந்த நபரை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ம-9)

## அறுவடை இயந்திரங்கள் வெளி மாவட்டங்களிலிருந்து

குடாநாட்டில் தற்போது நெல் அறுவடைப் பணிகள் இடம்பெற்று வரும் நிலையில் அறுவடைக்கென வெளிமாவட்டங்களில் இருந்து இயந்திரங்கள் தருவிக்கப்பட்டுள்ளன.

தற்போது தென்மராட்சிப் பிரதேசத்தில் மறவன்புலோ, தனங்களப்பு போன்ற பகுதிகளிலும் அறுவடைப் பணிகள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன.

பெரும்பாலான விவசாயிகள் அறுவடை இயந்திரங்களையே பயன்படுத்தி வருகின்றனர்.

ஒரு பரப்பில் அறுவடை செய்து நெல்லைத் தனியாகப் பிரித்து எடுப்பதற்கு 400 ரூபா வீதம் அறவிடப்படுகின்றது.

வலி. மேற்குப் பகுதி வயல் நிலங்களிலும் இயந்திரங்கள் மூலமே அறுவடை இடம்பெற்று வருகின்றது. இந்தப் பகுதிகளில் அறுவடைக்கு பரப்பு ஒன்றுக்கு 500 ரூபா வீதம் அறவிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-17)

# பிக்கு உட்பட மூவர் கொலை

காணித்தகராறு காரணமாக விகாராதிபதியான பௌத்த பிக்கு ஒருவர் கத்தியால் குத்திக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த பிக்குவைக் கொலை செய்துவிட்டுத் தப்பியோடினர் எனச் சந்தேகிக்கப்படும் இருவர் முகம், கை, கால்கள் கட்டப்பட்ட நிலையில் பொரல்லஸ்கமுவ பகுதியில் இனந்தெரியாதோர்களால் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரசாந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

சம்பவம் இடம்பெற்றதன் பின்னர் பிரதேசவாசிகள் குறித்த சந்தேக நபர்களின் வீட்டை அடித்து நொறுக்கியுள்ளதுடன் தீ மூட்டிக் கொளுத்தியுமுள்ளனர்.

மொறட்டுவை எகடஉயன பகுதியிலுள்ள விஹாரையின் விகாராதிபதி மெட்டிகஹதென்ன விமலவன்ஸ என்ற பிக்குவே நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு 8.15 மணியளவில் வெட்டிக் கொலை செய்யப்பட்டுள்ளார் என அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கையில்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
மேற்கொள்ளப்பட்ட 2011ஆம் ஆண்டின் சனத்தொகை கணக்கெடுப்பின் இரண்டாவது அறிக்கையிலேயே மேற்குறித்த தகவல் வெளிவந்துள்ளது.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் 51.5 வீதமானவர்கள் பெண்கள் என்று தெரியவந்துள்ளது.

ஆண்களின் எண்ணிக்கையைப் போன்றே 15 வயதுக்கு உட்பட்டவர்களின் எண்ணிக்கையும் வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேவேளை 2000ஆம் ஆண்டில் 9.2 வீதமாக இருந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கை, 2011ஆம் ஆண்டில் 12.2 வீதமாக அதிகரித்துள்ளது.

இலங்கையின் சனத்தொகையில் 62 வீதமானோர் 15 இக்கும் 59 இக்கும் இடைப்பட்ட வயதினராக உள்ளனர்.

கடந்த பத்து ஆண்டுகளில் இலங்கையின் சனத்தொகை வளர்ச்சி 0.7 வீதமாகவே உள்ளது என்பதும் இந்த கணக்கெடுப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

பிறப்புவீதம் குறைவடைந்தமை, ஆயுள் காலம் அதிகரித்தமை, இளைஞர்களின் புலம்பெயர்வு என்பனவே இலங்கையில் முதியோரின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணம் என்று கருதப்படுகிறது. (த)

## அமெ...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ரஞ்சன் மாத்தாய், தேசியப் பாதுகாப்பு ஆலோசகர் சிவ்சங்கர் மேனன் உள்ளிட்ட டில்லி நிர்வாகத்தின் உயர் அதிகாரிகளை இந்தக் குழுவினர் சந்தித்துள்ளனர்.

இலங்கைக்கு எதிராகக் கொண்டுவரப்படவுள்ள பிரேரணையின் நோக்கம், அதற்கு இந்தியாவின் ஆதரவு, தெற்காசியப் பிராந்தியத்தின் பாதுகாப்பு நிலைமை, இலங்கைப் பயணத்தின்போது ஆராயப்பட்ட விடயங்கள் உட்பட முக்கிய பல விவகாரங்கள் தொடர்பில் இச்சந்திப்புகளின்போது கருத்துப்பரிமாற்றங்கள் இடம்பெற்றுள்ளன.

குறிப்பாக, நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் விடயத்தில் இலங்கை இன்னும் பின்னடைவான நிலையிலேயே இருக்கின்றது. எனவே, நல்லிணக்கத்தை நோக்கி நகர்வதற்கு இலங்கையை ஊக்குவிக்கும் வகையிலேயே இம்முறை பிரேரணை கொண்டுவரப்படவுள்ளது என இந்திய இராஜதந்திரிகளிடம் அமெரிக்கக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அமெரிக்கக் குழுவுக்கும், இந்திய அதிகாரிகளுக்கும் இடையிலான சந்திப்புகளின்போது இலங்கைக்கான இந்தியத் தூதுவர் அசோக் கே காந்தாவும் கலந்துகொண்டிருந்தார். இலங்கைக்கும், மாலைதீவுக்குமான உத்தியோகபூர்வ பயணமொன்றை மேற்கொண்டு மூவரடங்கிய அமெரிக்க இராஜதந்திரிகள் குழுவினர் கடந்த 2 ஆம் திகதி இலங்கை வந்தனர்.

அமெரிக்கப் பிரதி உதவி வெளிவிவகாரச் செயலாளர் ஜேம்ஸ் மூர், பிரதி உதவிப்பாதுகாப்புச் செயலாளர் விக்ரம் சிங், பிரதி உதவி வெளிவிவகாரச் செயலாளர் ஜேன் சிம்மர்மான் ஆகியோரே மூவரடங்கிய இராஜதந்திரக்குழுவில் உள்ளடங்கியிருந்தனர்.

கொழும்புக்கு விரைந்த கையோடு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சந்தித்துப் பேச்சு நடத்திய பின்னரே இக்குழு அரச மட்டத்திலான அதிகாரிகளுடன் பேச்சு நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்க இராஜதந்திரக்குழுவின் பயண நிகழ்ச்சி நிரலில் இலங்கை, மாலைதீவு ஆகிய நாடுகளுக்கான பயணம் குறித்த விடயங்களே முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், நிகழ்ச்சி நிரலுக்கு மாறாக அதுவும் இலங்கைப் பயணம் முடிவடைந்த கையோடு அமெரிக்கக்குழு டில்லி சென்றுள்ளமை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது. (த-சி)

## கூகுளில்...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
இலங்கை தேசியக் கொடியில் காணப்படும் மூன்று வர்ணங்களால் இதர எழுத்துகள் வடிவமைக்கப்பட்டிருந்தன.

இலங்கையின் 65ஆவது தேசிய சுதந்திர தினம் நேற்று கொண்டாடப்பட்டது. இதனை நினைவுகூரும் வகையிலேயே கூகுள் தனது முகப்பை நேற்று இலங்கைக்காக ஒதுக்கியுள்ளது.

'கூகுள்' பாவனையாளர்களுள் ஒருவரான புத்திக ருவான் என்ற இலங்கைப் பிரஜை விடுத்த வேண்டுகோளை கருத்திற்கொண்டே தனது முகப்பை நேற்று இலங்கையின் தேசியக் கொடியைப் பிரதிபலிக்கும் வகையில் 'கூகுள்' இணையம் மாற்றியமைத்தது.

கூகுளின் இந்த நடவடிக்கையால் இலங்கை தொடர்பில் இதுவரை முழுமையாக அறிந்திராதவர்கள் அந்நாடு குறித்த தகவல்களை நேற்று அதிகமாகத் தேடிப் படித்துள்ளனர் எனக் கூறப்படுகின்றது.

அதேவேளை, ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் மூலதனத்துடன் ஆரம்பிக்கப்பட்ட 'கூகுள்' நிறுவனத்தின் கடந்த மூன்று மாத வருமானம் ஆயிரம் கோடி அமெரிக்க டொலர்களாகும். (த)

## நல்லிணக்கக்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
பினர்களுக்கான செயலமர்வு முன்னணியின் மாவட்ட செயலாளர் வேலுகுமார் தலைமையில் நேற்று நடைபெற்றது.

அதில் கலந்துகொண்டு உரையாற்றிய மனோ கணேசன் மேலும் கூறியதாவது:-

இன்றைய சுதந்திர தினத்தில் நாம் நமது நாட்டின் ஐக்கியம் தொடர்பாகவும், இனங்கள் மத்தியில் நிலவவேண்டிய சமத்துவம் தொடர்பாகவும், நமது ஜனநாயக நெறிமுறைகள் தொடர்பாகவும் திடசங்கற்பம் பூணுகிறோம்.

ஆண்டாண்டு காலமாக நாம் பாடசாலையில் படித்து நமது தாய்மொழியில் பாடி வந்த ஸ்ரீ லங்கா தாயே என்ற நமது தமிழ்மொழியிலான தேசிய கீதத்தைக்கூடச் சுதந்திரமாகப் பாட யோசிக்கும் நிலைமை இன்று இந்நாட்டில் தமிழ் பேசும் தமிழ், முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்டுள்ளது. அதைத் தடை செய்ய விரும்புவோர் இன்று இந்த அரசுக்குள் இருக்கின்றார்கள்.

சொந்த உழைப்பு மற்றும் முயற்சியினால்கூட தமது வர்த்தக, தொழில் நிறுவனங்களைச் சுதந்திரமாக கொண்டு நடத்த முடியாத நிலைமை இன்று இந்நாட்டில் தமிழ், முஸ்லிம் தொழில் அதிபர்களுக்கு ஏற்பட்டுள்ளது. சிறுபான்மையினரின் வர்த்தக முயற்சிகளை கைப்பற்றி அழிக்க நினைக்கும் இனவாதிகளை தட்டிக்கொடுத்து வளர்க்க நினைப்போர் இன்று இந்த அரசுக்குள் இருக்கின்றார்கள்.

**ஒரே ஒரு பரிந்துரையே இதுவரை முழுமையாக நடைமுறையில்**

இனப்பிரச்சினையை தீர்க்கிறோம் என்று சொல்லி இந்த அரசே கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவியது. இந்த ஆணைக்குழு நாடு முழுக்க சென்று சாட்சியங்களை பதிவு செய்து பல்வேறு பரிந்துரைகளை வெளியிட்டது. இந்த சாட்சியங்களை நடைமுறை செய்கிறோம் என்று, இந்த அரசு ஐ.நா. மனித உரிமை ஆணைக்குழுவுக்கு உறுதியளித்தது.

ஆனால் இந்த நல்லிணக்க பரிந்துரைகளில், ஏ-9 வீதியைத் திறக்கவேண்டும் என்ற ஒரேயொரு பரிந்துரை மாத்திரமே இன்று வரையில் முழுமையாக நடை முறைப்படுத்தப்பட்டுள்ளது. ஏனைய எந்த ஒரு நல்லிணக்க பரிந்துரையும் நடைமுறைப்படுத்தப்படக் கூடாது என்று கலகம் செய்வோர் இன்று இந்த அரசுக்குள் இருக்கின்றார்கள். இந்த அரசுக்குள்ளே இருக்கும் அவர்கள்தான் இன நல்லிணக்கத்துக்கான எல்லா கதவுகளையும் அடைத்து வைத்துள்ளார்கள். இது எதிர்க்கட்சிகளின் பிரச்சினை அல்ல. இது ஆளும் அரசு கட்சியின் ஒட்டுமொத்த பிரச்சினை என்பது எந்த ஒரு முட்டாளுக்கும்கூட விளங்கும்.

எனவே, நல்லிணக்கத்துக்கு எதிரான இனவாதிகளை வைத்துக்கொண்டு எப்படி இந்த நாட்டிலே இன நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்? இதுதான் இன்றைய சுதந்திர தினத்திலே நாம் எழுப்பும் கேள்வியாகும்-என்றார். (த-சி)

## வன்னியில்..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
விடாமல் பெய்தது. நேற்று இரவு வரை மழை தொடர்ந்தது.

அதனால் வயல்களில் அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்த நெற் கதிர்கள் நனைந்து நாசமாகின. அத்துடன் அறுவடை செய்யப்படாத வயல்களில் இருந்த நெற் பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கின. வன்னி விவசாயிகள் இதனால் பெரும் கவலை அடைந்துள்ளனர்.

இதேவேளை, கடும் மழையினால் கிளிநொச்சி பன்னங்கண்டி பகுதியில் மீளக்குடியமர்ந்துள்ள 28 குடும்பங்கள் இடம்பெயர்ந்து பன்னங்கண்டி மகாவித்தியாலயத்தில் தஞ்சம் புகுந்துள்ளனர். (த-422-426-18)

## வலி.வடக்கு..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
பட்டுள்ளன. நிரந்தரப் பாதுகாப்பு வேலியோடு அமைந்த எல்லைப் பகுதியில் உள்ள வீடுகளையும் இடித்து தரைமட்டமாக்கும் நடவடிக்கைகளையும் படையினர் முன்னெடுத்து வருகின்றனர்.

இதனைக் கண்டித்து வலி.வடக்கு மக்கள் மீள்குடியமர்வுக் குழுவின் ஏற்பாட்டில் எதிர்வரும் 15 ஆம் திகதி மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் ஒன்று, தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய முன்றிலில் நடத்தப்படவுள்ளது.

இந்தப் போராட்டத்துக்கு தமது முழுமையான ஆதரவை வழங்குவதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டமைப்பின் தலைவர் சி.தவரட்ணம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்:-

உயிரைக் கொடுத்தாவது நாம் எமது மக்களின் வாழ்விடங்களை மீட்டே தீருவோம். 23 வருடங்களாக மக்கள் இடம்பெயர்ந்து அல்லல் பட்டுக்கொண்டிருக்கின்றனர். இதுவரையில் அவர்கள் 20 வீடுகள் வரையில் மாறி மாறி வாழ்ந்துள்ளனர்.

எமது பகுதி கடல் வளம் கொழிக்கும் பிரதேசம். அந்தப் பகுதி மீனவர்கள், வடமராட்சி வடக்கு பிரதேசத்தில் தொழில் செய்ய முடியாத நிலையில் உள்ளனர்.

எனவே எமது மக்கள் எமது மண்ணில் சுதந்திரமாக தொழில் செய்ய வேண்டும். இதற்காக இடம்பெறும் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்தில் எமது அமைப்பைச் சேர்ந்தவர்கள் கலந்து கொள்வார்கள் -என்றார்.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கத்தின் இணைப்பாளர் ஏ.யேசுதாசன் தெரிவிக்கையில், மாபெரும் உண்ணாவிரதப் போராட்டத்துக்கு நாங்களும் எமது ஆதரவை வழங்கவுள்ளோம். அத்துடன் தென்னிலங்கையில் இருந்து எமது அமைப்பைச் சேர்ந்தவர்களும் இந்தப் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர் - என்றார். (த-5)

## மாணவரை..

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
விசாரணைக்கு இவர்களை உட்படுத்துமாறும் அச்சபை வலியுறுத்தியுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் பதற்றமான சூழ்நிலை நிலவிய கடந்த வருட நவம்பரில் பயங்கரவாத விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்ட நான்கு மாணவர்களில் இவ்விருவரும் அடங்குவர்.

உள்ளூர் அரசியல் அமைப்பொன்றின் அலுவலகம் மீது மேற்கொள்ளப்பட்ட பெற்றோல் குண்டுத் தாக்குதல், ஆர்ப்பாட்டங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கை ஆகியவை தொடர்பாக இவர்கள் கைதுசெய்யப்பட்டார்கள் எனக் காரணம் கூறப்பட்டது.

நால்வரில் இருவர் வெலிக்கந்தை முகாமில் புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்பட்டு கடந்த மாதம் விடுதலை செய்யப்பட்டார்கள். மற்றுமிருவரும் தொடர்ந்து முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்கள்.

இவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ள யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியச் செயலாளர் ப.தர்ஷானந்த், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் க.ஜெனமேஜெயன் ஆகிய இருவரும் விடுதலைசெய்யப்படவேண்டுமென வேண்டுகோள் விடுத்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை -

அவர்களை விடுதலை செய்யாவிட்டால், அங்கீகரிக்கப்படக்கூடிய குற்றவியல் குற்றச்சாட்டின்பேரில் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்புக் கோட்பாட்டுக்கிணங்க வழக்கு விசாரணைக்கு இவர்களை உட்படுத்துமாறும் கோரியுள்ளது.

தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் சர்வதேச தரங்களுக்கேற்ப பராமரிக்கப்படுவதையும், அவர்களின் சட்டத்தரணிகளும், குடும்பத்தாரும் தம்மைச் சந்திப்பதற்கான வாய்ப்பையும், தேவையான மருத்துவ உதவிகளைப் பெறுவதற்கான வாய்ப்பையும் உத்தரவாதப்படுத்திக்கொள்ளுமாறும் அதிகாரிகளை இச்சபை வலியுறுத்தியுள்ளது. (த)

## வெளியார்...

**தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...''**
இன ரீதியாகவும், மத ரீதியாகவும் கலவரங்களை ஏற்படுத்தி நாட்டில் மீண்டும் பிரிவினைவாதத்தைத் தோற்றுவிப்பதற்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். இங்கு வாழும் பௌத்த, இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மக்கள் சகோதரத்துவத்துடன் வாழ்வதை உறுதிப்படுத்த வேண்டும். இதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

திருகோணமலை துறைமுகத்தை கைப்பற்றும் நோக்கமே வெளிநாட்டுப் படைகளுக்கு இருந்தது. நாடு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்த போதிலும் திருகோணமலையில் பிரிட்டிஷ் படையினர் முகாம்களை அமைத்து தங்கியிருந்தனர். அவர்களின் முகாம்கள் 1956 ஆம் ஆண்டே அங்கிருந்து அகற்றப்பட்டன.

**புத்தருக்கும் சுதந்திரம் இல்லை**

இந்தப் பகுதியில் புத்தர்சிலை சுற்றி முட்கம்பிகள் அடிக்கப்பட்டிருந்தன. புத்த பெருமானுக்கும் சுதந்திரம் இல்லாத நிலைமை ஏற்பட்டிருந்தது. அந்த நிலைமைக்கு எல்லாம் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு மக்கள் சுதந்திரமாக வாழக்கூடிய வகையில் பயங்கரவாதிகளிடமிருந்து நாடு மீட்கப்பட்டது.

சுதந்திரத்திற்கு மட்டுமல்லாது இறைமை, ஒருமைப்பாட்டிற்காக பல சவால்களுக்கு முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இலங்கைக்கு எதிராக வெளிநாடுகளில் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டுமாயின் நாட்டில் அபிவிருத்தி முன்னெடுக்கப்படல் வேண்டும். நல்லிணக்கம் இருத்தல் வேண்டும்.

1948 ஆம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்ததன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்புரிமை கிடைத்தது. இதன்படி ஐ.நாவின் உறுப்பு நாடு என்ற வகையில் ஐ.நாவை மதிக்கின்றோம். ஐ.நாவின் கடப்பாடுகளையும், சாசனத்தையும் நம்புகின்றோம். ஐக்கிய நாடுகளில் அங்கம் வகிக்கின்ற எந்தவொரு நாடும் ஏனைய நாடுகளின் உள்விவகாரங்களில் தலையிடக்கூடாது என்று ஐக்கிய நாடுகள் சபையின் பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அந்தப் பிரகடனத்திற்கு நாம் கௌரவமளிக்கின்றோம்.

**ஐ.நா. ஏற்றுக்கொள்ளும்**

இதனை ஐ.நாவும், இதர நாடுகளும் ஏற்றுக்கொள்ளும் என நம்புகின்றேன். எமது வெளிநாட்டுக் கொள்கையில் நாம் உறுதியாகவே இருக்கின்றோம்.

நாட்டில் வாழும் மூவின மக்களும் சம உரிமையுடன் வாழவேண்டும் என்பதில் நான் உறுதியாகவே இருக்கின்றேன். தேசத்தை அழிப்பதற்கு எந்தச் சக்திக்கும் இடமளிக்க மாட்டேன்.

தேசத்தை அழிக்க முயற்சிக்கும் எந்தவொரு சக்தியையும் தலைதூக்குவதற்கு இடமளிக்கப்போவதில்லை. நாம் பல்வேறு தியாகங்களையும், இழப்புக்களையும் எதிர்கொண்டு பெற்ற சுதந்திர நாட்டைப் பாதுகாக்க வேண்டியது இலங்கையராகிய இந்த நாட்டுப் பிரஜைகள் ஒவ்வொருவரினதும் கடமையும் பொறுப்பும் ஆகும்.

நாட்டின் இறைமையையும், சுதந்திரத்தையும் பாதுகாக்கும் பொறுப்பு அரசுக்கு மட்டுமல்லாது எதிர்க்கட்சிக்கும் இருக்கின்றது என்பதையும் வலியுறுத்துகிறேன். வடக்கு, தெற்கு மற்றும் கிழக்கு ஆகிய பிரதேசங்களில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழ்கின்றனர். அந்த வகையில் அவ்வாறானதோர் இன ஒற்றுமைக்கு திருகோணமலை மாவட்டம் ஒரு நல்ல உதாரணமாகும்.

திருகோணமலையில் பௌத்த விகாரை கட்டுவதற்கு இந்து மக்கள் பாரிய உதவிகளைச் செய்துள்ளனர். அதேபோன்று கண்டி மீரான் மக்காம் பள்ளிவாசல் அமைந்துள்ள பிரதேசம் தலதாமாளிகையினால் வழங்கப்பட்டதாகும். இதன் மூலம் இலங்கையில் சிங்கள, தமிழ், முஸ்லிம் சமூகங்கள் எந்தளவுக்கு அன்னியொன்னியமாக வாழ்ந்துள்ளனர் என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

இவ்வாறான இனங்களை சில தீய சக்திகள் இனரீதியாகவும, மதரீதியாகவும் செயற்பட்டு பிரச்சினைகளை உருவாக்க முயற்சிக்கின்றனர். இவ்வாறு செயற்படுவதால் நாட்டில் பிரிவினைவாதமே உருவாகும். அந்த நிலைமைக்கு நான் ஒருபோதும் இடமளிக்கமாட்டேன். எமது நாட்டின் சுதந்திரத்துக்கும், இறைமைக்கும் பங்கத்தை ஏற்படுத்தும் வகையில் சில புலம்பெயர் சக்திகள் முயற்சிக்கின்றன. அத்தகைய புலம்பெயர் சக்திகளை நம்பவேண்டாம். எங்களை நம்புங்கள், நீங்கள் உங்களை நம்புங்கள். இது எமது நாடு. நாம் இங்கு சுதந்திரமாக வாழ வேண்டும்.

- இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (த-2)

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# வெறும் கொண்டாட்டங்களால் இன, மத ஒற்றுமை முகிழ்க்குமா...?

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு இன ஐக்கியமும் மத ஒற்றுமையும் இன்றியமையாதவை. ஒரே இனம், ஒரே மதம் உள்ள நாடுகளும் சரி அதிகாரப்பரவலாக்கலை வெற்றிகரமாக செயற்படுத்திவரும் பல்லின, பல்மதத்தவர் வாழும் நாடுகளும் சரி இன்று அரசியல் மற்றும் பொருளாதாரத் துறைகளில் முன்னேற்றம் அடைந்துள்ளன. ஜப்பான், இந்தியா போன்ற நாடுகள் இதற்கு நல்ல உதாரணம். இன, மத பூசல் இல்லாததால் ஜப்பான் இன்று அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றம் அடைந்துள்ளது. இந்தியா 1947இல் பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் மாநில சுயாட்சி மூலம் அதிகாரப்பரவலாக்கலை வெற்றிகரமாகச் செயற்படுத்தி தெற்காசியாவிலேயே ஒரு பலம் வாய்ந்த பொருளாதார சக்தியாக வளர்ந்துள்ளது. பஞ்சாப்பிலும், காஷ்மீரிலும் நடத்தப்பட்ட பிரிவினைவாதப் போராட்டங்கள் கூட பிசுபிசுத்துப் போனமைக்கு மாநில ரீதியான அதிகாரப் பரவலாக்கலை இந்தியா நடைமுறைப்படுத்தியது தான் காரணம்.

இந்தியா சுதந்திரம் அடைந்து ஓர் ஆண்டு கழிந்து 1948இல் இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது. திருகோணமலையில் நேற்று இலங்கையின் 65ஆவது சுதந்திர தினம் கொண்டாடப்பட்டது. இந்து சமுத்திரத்தின் கேந்திர இடத்தில் அமைந்த, சகல வளங்களையும் கொண்ட இலங்கை கடந்த 65 வருடகால வளர்ச்சியில் ஓர் அபிவிருத்தி அடைந்த நாடாக மாறியிருக்கமுடியும்; மாறியிருக்க வேண்டும். இலங்கையை ஆசியாவின் ஆச்சரியம் மிக்கநாடாக மாற்றப்போகிறோம் என்று பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் தற்போது கூறி வருவதை பல தசாப்தங்களுக்கு முன்னரேயே நாம் நிதர்சனமாக ஆக்கிக் காட்டியிருக்க முடியும்.

பல இனங்கள், பல மதங்களைப் பின்பற்றும், பல்லின மக்கள் வாழும் நாடான இந்தியா இன்று பெரும் முன்னேற்றம் கண்டுள்ள நிலையில் மூன்று பிரதான இனங்கள் வாழும், நான்கு மதங்களைப் பின்பற்றும் மக்கள் வாழும் இலங்கை ஒரு தோல்வி அடைந்த நாடாக மாறிக்கொண்டிருக்கிறது. அதற்கான பொறுப்பை சுதந்திரத்துக்குப் பின்பு இந்த நாட்டை நிர்வகித்த அனைத்து அரசுகளுமே ஏற்கவேண்டும். நாட்டின் சிறுபான்மை இனங்களையும் அவர்களது மதங்களையும் நசுக்குவதன் மூலம் பௌத்த சிங்கள மேலாதிக்கத்தை நிலைநாட்ட முடியும் என்று தென்னிலங்கைத் தலைமைகள் ஆரம்பம் முதலே கருதிவந்துள்ளன. இன்றும் கூட அதே சிந்தனைப் போக்கும், செயற்பாடுகளுமே தொடர்கின்றன. இத்தகைய சிந்தனையால் காலத்துக்குக் காலம் கட்டவிழ்த்துவிடப்பட்ட நியாயமற்ற செயற்பாடுகளின் விளைவுகளையே முழு நாடும் இன்று அனுபவித்துக்கொண்டிருக்கிறது.

நேற்று திருகோணமலையில் ஆற்றிய சுதந்திர தின உரையிலும் இன,மத ஒற்றுமையின் அவசியத்தை ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். இனவாதமும், மதவாதமும் பயங்கரவாதத்தை முன்னெடுப்பதற்கு ஒப்பானவை. இந்த நாட்டிலுள்ள சகல மக்களுக்கும் சமாதானத்துடனும் ஒற்றுமையுடனும் வாழ உரிமை உண்டு என்று ஜனாதிபதி தமது உரையில் தெரிவித்துள்ளார். நாட்டில் இன ஒற்றுமையும், மத ஒற்றுமையும் சீர்குலைந்து நாடு இன்று நெருக்கடியான ஒரு கட்டத்தில் இருக்கும்போது ஜனாதிபதி இனங்களுக்கு இடையேயான ஒற்றுமையின் அவசியத்தை வலியுறுத்தியிருப்பது கவனத்தில் எடுக்கத்தக்க ஒன்று.

சுதந்திரத்தின் பின்னரான கடந்த 65 வருட காலத்தில் 1958ஆம், 1977ஆம், 1983ஆம் ஆண்டுகளில் நாட்டில் இன ரீதியான கலவரங்களே பெரிய அளவில் இடம்பெற்றன.

2009 ஆம் ஆண்டில் போர் முடிவடைந்த போது, ஐக்கிய இலங்கையைக் கட்டியெழுப்பி, நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல இயலும் என நாட்டு மக்கள் மத்தியில், குறிப்பாக சிறுபான்மை இனத்தவர்கள் மத்தியில் நிலவிய நம்பிக்கை தற்பொழுது தகர்ந்துபோய்விட்டது. இதற்கான முழுப் பொறுப்பையும் மஹிந்த தலைமையிலான அரசே ஏற்கவேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தமிழ் மக்கள் ஏற்கக்கூடிய அரசியல் தீர்வு காணும்வரை நாட்டில் இன ஐக்கியத்தை ஏற்படுத்த முடியாது. அதேபோன்று தேவாலயங்கள், பள்ளிவாசல்கள் மீதான தாக்குதலை நிறுத்தும்வரை மத ஐக்கியத்தை ஏற்படுத்த முடியாது. இவை யதார்த்தமான உண்மைகள்.

இன்று நாடு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று இன ரீதியாகவும் பௌத்தர்கள், இஸ்லாமியர்கள், கிறிஸ்தவர்கள், இந்துக்கள் என்று மத ரீதியாகவும் பிளவுபட்டுள்ளது. நாட்டில் இன ஒற்றுமையையும் மத ஒற்றுமையையும் ஏற்படுத்தும் நடவடிக்கையில் மஹிந்த அரசு தோல்வி அடைந்துள்ளது.

இனப்பிரச்சினை தொடர்பான பேச்சை மீண்டும் ஆரம்பிப்பதற்கான வாய்ப்புகள் மிகவும் அரிதாகவே காணப்படுகின்றன. அரசமைப்புக்கான 13 ஆவது திருத்த சர்ச்சை மூலம் இனப்பிரச்சினைத் தீர்வு குறித்து தமிழ் மக்களுக்கு இருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் இல்லாமல் போய்விட்டது. சிங்கள - பௌத்த பேரினவாதிகளின் பிடியில் அரசு சிக்கிக் கொண்டுள்ளது துல்லியமாகத் தெரிகிறது. முஸ்லிம்களுக்கு எதிரான பிரச்சினைகளும் அவ்வகை சார்ந்ததே. நாட்டின் பல பகுதிகளில் பள்ளிவாசல்கள் மீது எத்தனையோ தாக்குதல் சம்பவங்கள் இடம்பெற்றுவிட்டன. இதன் பின்னணியில் யார் செயற்படுகிறார்கள் என்பது குறித்தோ, அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்தோ அரசு காத்திரமான அக்கறை காட்டியதாக இல்லை.

இத்தகைய பின்புலத்தில், அரசு இந்த நாட்டில் இன ஐக்கியத்தை ஏற்படுத்தவேண்டுமானால், இனப்பிரச்சினைக்கு தமிழ் மக்களுக்கு ஏற்புடையதான, நியாயமான, பொருத்தமான அரசியல் தீர்வு காணப்பட வேண்டியது மிகமிக அவசியம். மத ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமானால், மத விரோத நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். மத விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அதன்மூலம் சுதந்திரத்தின் பலனை இன, மத பேதமின்றி சகல மக்களும் அனுபவிக்கும் வாய்ப்பை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க இயலும். அரசு இவற்றைக் கருத்தில் எடுத்துச் செயற்பட முனைவது எப்போது?

ஆண்டு தோறும் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவதால் இன ஒற்றுமையையும் மத ஒற்றுமையையும் நாட்டுக்குச் சுபீட்சத்தையும் கொண்டுவர இயலாது. அது குறித்து நினைத்தும் பார்க்க முடியாதே...இதுவே இன்றைய யதார்த்தம்.

# தென்மராட்சி வலயத்தில் மாற்றம் பெற்ற ஆசிரியர்கள்

தென்மராட்சி,பெப்.5

வடமாகாண கல்வித் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட ஆசிரியர்களுக்கான இடமாற்றப் பட்டியல்களின் பிரகாரம் தென்மராட்சி கல்வி வலயத்தில் இருந்து 17 ஆசிரியர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் ஆகிய வலயங்களுக்கும், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா வடக்கு, துணுக்காய் ஆகிய கல்வி வலயங்களிலிருந்து 16 ஆசிரியர்கள் தென்மராட்சி கல்வி வலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலயத்திலிருந்து 13 ஆசிரியர்கள் கிளிநொச்சி வலயத்துக்கும் 3 ஆசிரியர்கள் துணுக்காய் வலயத்துக்கும் ஒரு ஆசிரியர் முல்லைத்தீவு வலயத்துக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு கிளிநொச்சி கல்வி வலயத்திலிருந்து 10 ஆசிரியர்களும் முல்லைத்தீவு கல்வி வலயத்திலிருந்து 3 ஆசிரியர்களும் வவுனியா வடக்கு கல்வி வலயத்திலிருந்து 2 ஆசிரியர்களும் துணுக்காய் கல்வி வலயத்திலிருந்து ஒரு ஆசிரியரும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

தென்மராட்சி கல்வி வலயத்துக்கு இடமாற்றம் பெற்றுள்ள ஏனைய வலயங்களைச் சேர்ந்த ஆசிரியர்களின் பெயர்களும் தற்போது கடமையாற்றும் பாடசாலைகளும் வருமாறு:-

கிளிநொச்சி கல்வி வலயம்

திருமதி யு.கோபிதாஸன்-கிளிநொச்சி மத்திய கல்லூரி, திருமதி ஜீ.வசந்தகுமார்-வட்டக்கச்சி மகாவித்தி, செல்வி கே.அகல்யா-கோணாவில் அ.த.க.பாடசாலை, திருமதி ரி.அச்சுதன்-பளை மத்திய கல்லூரி, திருமதி கே.சிவானந்தன்-பளை மத்திய கல்லூரி, திருமதி ஐ.நித்தியானந்தராசா-பளை மத்திய கல்லூரி, கே.விஜயகரன்-கிளாலி றோ.க.த.க.பாடசாலை, திருமதி ஜே.கனகரத்தினம்-பளை றோ.க.த.க.பாடசாலை, கே.அருளானந்தகுமார் முழங்காவில் ம.வி, எஸ். உதயபவான்-முட்கொம்பன் அ.த.க.பாடசாலை.

முல்லைத்தீவு கல்வி வலயம்

செல்வி எஸ்.சுபாஷினி-இரணைப்பாலை றோ.க.ம.வி, திருமதி எம்.செல்வகரன்-உடையார்கட்டு ம.வி, திருமதி எம்.சிறிதரன்-உடையார்கட்டு ம.வி.

வவுனியா வடக்கு கல்வி வலயம்

திருமதி பீ.சுபாநந்தினி-தவசியாகுளம் அ.த.க.பாடசாலை, ஆர்.பகீரதன்-கல்மடு ம,வி.

துணுக்காய் கல்வி வலயம்

திருமதி கே.தயாநிதி-புலுமச்சிநாதகுளம் அ.த.க.பாடசாலை.

(ம-9)

# சீனிப் பாவனையைக் குறைத்தால் நீரிழிவைக் கட்டுப்படுத்த முடியும்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு,பெப்.5

அடுத்து வரும் இரண்டாண்டுகளில் சீனியின் பாவனையை 5 வீதத்தால் குறைத்து விடுவதன் மூலம் நீரிழிவு நோயை 30 வீதத்தால் குறைத்து விடமுடியும் என்று சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

இந்த நாட்டின் மக்கள் நீரிழிவு நோய்க்கு இரையாகிப் போவது வேகமாக உச்சமடைந்து வருகிறது. சீனியின் பாவனை அதிகரித்துச் செல்வதே நீரிழிவு நோய் வேகமாகப் பரவிச் செல்வதற்கு முக்கியமான தொரு காரணியாக உள்ளது என்றும் அமைச்சு சுட்டிக்காட்டுகிறது.

இன்று இந்த நாட்டிலுள்ள நபர்களில் நான்கு பேரில் ஒருவர் நீரிழிவு நோய்க்கு ஆளாகியுள்ளனர் என்று அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வொன்றில் வெளிப்பட்டுள்ளது.

இந்த நிலைப்பாட்டைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக சீனிப் பயன்பாட்டைக் குறைத்து விடுவது சம்பந்தமாக மக்களுக்கு விழிப்புணர்வூட்டும் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டியுள்ளது எனவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

(ம-22)

# வெள்ளைக்கத்தரி மட்டுவிலில் மும்முரம்

மட்டுவில் பிரதேசத்தில் வெள்ளை நிற கத்தரி செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

வருடா வருடம் ஜனவரி மாதத்தில் இந்த மட்டுவில் கத்தரிக்காய் செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டு வருவது வழக்கம்.

அதன் அடிப்படையில் இந்த போகத்துக்கான கத்தரி நல்ல நிலையில் காணப்படுகின்றது என்று விவசாயிகள் கூறினர்.

இந்தக் கத்தரிக்காய் பங்குனி திங்கள் முதல் வாரத்தில் சந்தைகளுக்கு விற்பனைக்கு வருவது வழக்கம். (ம-17)

# அரச சிறுவர் நாடக விழாவுக்கு விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கலாம்

தென்மராட்சி,பெப்.5

கலாசாரம் மற்றும் கலை அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், இலங்கை கலைக் கழக அரச நாடகக் குழு ஆகியவை ஒன்றிணைந்து இந்த வருடத்துக்குரிய அரச சிறுவர் நாடக விழாவை நடத்தவுள்ளன.

நாடக விழா பாடசாலை மாணவர்களைக் கொண்ட மட்டுப்படுத்தப்பட்ட போட்டியாகவும், கலை நிறுவன்ங்கள் சிறுவர், இளைஞர் மன்றங்கள் அமைப்புக்கள் மற்றும் நாடகக் குழுக்கள் மற்றும் தனியார்கள் கொண்ட திறந்த போட்டியாகவும் நடத்தப்படவுள்ளது.

மட்டுப்படுத்தப்பட்ட நாடகங்கள் அரச அல்லது அரசசார்பற்ற பாடசாலைகளால் முன்வைக்கப்படுகின்ற சிறுவர்களால் சிறுவர்களுக்காக நடிக்கப்படுகின்ற நாடகங்களாக இருக்க வேண்டும்.

முன்வைக்கும் நாடகப் பிரதிகள் சிறுவர் உள நிலைக்கு பொருத்தமான, அவர்களின் உண்மையான வாழ்க்கையின் வெளிப்பாடாகவும் சிறுவர்களுக்காக எழுதப்பட்டவையாகவும் இருக்க வேண்டும்.

திறந்த போட்டிக்காக நாடகங்களில் நடிக்கும் கலைஞர்களின் வயதெல்லை மட்டுப்படுத்தப்படாத போதிலும், சிறிய மற்றும் இளம் பருவத்தினருக்கு முக்கியத்துவம் அளித்திருக்க வேண்டும்.

முன்வைக்கப்படும் நாடகங்களில் முதலாம் சுற்றுப் போட்டிக்கு தெரிவு செய்யப்படும் நாடகங்கள், மாகாண அல்லது மாவட்ட ரீதியில் தெரிவு செய்யப்பட்டு விண்ணப்பதாரிகளுக்கு அண்மையில் உள்ள நிலையங்களில் மேடையேற்றப்படும்.

இறுதிச் சுற்றுக்கு தேர்ந்தெடுக்கப்படும் நாடகங்களுக்கு கொழும்பில் நடத்தப்படவுள்ள தேசிய சிறுவர் நாடக விழாவுடன் ஒட்டிய விருது வழங்கல் வைபவத்தின் போது, நினைவுப் பரிசில்கள் வழங்கப்படும்.

இந்த வருடத்தின் மிகச் சிறந்த நாடகப் பிரதி, சிறந்த நாடக தயாரிப்பு, சிறுவர் நடிகர், சிறுவர் நடிகை, உதவி நடிகர், உதவி நடிகை, சிறந்த இசையமைப்பு, ஒப்பனை, முக அலங்காரம், ஆடை அலங்காரம், அரங்க நிர்மாணம், அரங்க முகாமைத்துவம், ஒளியமைப்பு ஆகியவற்றுக்கு பணப்பரிசில்களும் விசேட சிறப்புச் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

விண்ணப்பப் படிவங்களையும், அறிவுறுத்தல்களையும் பிரதேச செயலக கலாசார பிரிவில் பெற்று மார்ச் 31 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அரச நாடகக் குழுத் தலைவர் கூறியுள்ளார். (ம-9)

# துஷ்பிரயோகங்களுக்கு ஆளாகும் சிறாருக்கு பிரத்தியேக சிகிச்சை அறை

வன்புணர்வு மற்றும் சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாகும் சிறுவர்களுக்கு பிரத்தியேகமான அறைகளில் சிகிச்சை அளிக்கும் நடைமுறை கொண்டுவரப்படவுள்ளது.

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனா இதற்காக அவசர நடவடிக்கை எடுத்துள்ளார்.

நாடு தழுவிய ரீதியில் அரச வைத்தியசாலைகளில் இந்த நடைமுறை கொண்டுவரப்படவுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி அதிகார சபைத் தலைவி திருமதி ஆர்.அனோமா முன்வைத்த கருத்திட்டத்துக்கு அமையவே இந்த நடைமுறை கொண்டு வரப்படவுள்ளது.

அத்துடன் முதற்கட்டமாக 25 மாவட்டங்களுக்கும் 25 தேசிய மற்றும் ஆதார, மாவட்ட வைத்தியசாலைகளிலும் பின்னர் பிரதேச வைத்தியசாலைகளிலும் இந்தப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளது என்று கூறப்பட்டது.

இதற்காக மாகாண சுகாதார அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும் சுகாதார அமைச்சினால் பிரத்தியேகமான பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாகத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-50)



முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள ஐயன்கன்குளம், புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களுக்குச் செல்லும் பிரதான வீதி மிக மோசமாக சேதமடைந்த நிலையில் காணப்படுகின்றது. (க-6)

## வவுனியா நகர பொதுமலசலகூடம் மோசமான சுகாதார சீர்கேடுகளுடன்

வவுனியா,பெப்.5

வவுனியா பஸ் நிலையத்துக்கு அருகே உள்ள பொது மலசலகூடத்தில் சுகாதாரச் சீர்கேடுகள் நிலவுவதாக மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

வவுனியா பஸ் நிலைய ஊழியர்கள், வர்த்தகர்கள், பயணிகள் எனப் பலரும் பயன்படுத்தும் பிரதான மலசலகூடம் வவுனியா பஸ் நிலையத்திற்கு அருகில் உள்ளது. கட்டணம் செலுத்தியே இந்த மலசலகூடத்தைப் பலரும் பயன்படுத்தி வருகின்றனர்.

அதற்குப் பொறுப்பாக வவுனியா நகரசபையால் ஊழியர் ஒருவர் நியமிக்கப்பட்டபோதிலும் சுகாதாரச் சீர்கேடு அடைந்து இந்த மலசலகூடம் துர்நாற்றம் வீசுகின்றது. மேலும் அங்கு சிகரெட்டின் மிகுதிகள், வெற்று மதுப்போத்தல்கள் உட்பட பல பொருள்கள் காணப்படுகின்றன. இதன் உள்ளே கால் வைக்கக் கூச்சப்படும் பொதுமக்கள் மூக்கைப் பொத்தியவாறு உட்செல்வதையும் காண முடிகின்றது.

பணத்தைக் கொடுத்து நோயை வாங்கும் அபாயம் இந்த மலசலகூடத்தினால் ஏற்படுவதாகப் பலரும் குற்றம் சுமத்தி வருகின்றனர். (க-402)

## கிளிநொச்சி மாவட்டத்தில் மேய்ச்சல் தரவைகள் இல்லாமையால் கால்நடை வளர்ப்பை கைவிடும் நிலை

கிளிநொச்சி, பெப்.5

கிளிநொச்சி மாவட்டத்தில் மேய்ச்சல் தரவைகள் இல்லாமையால் கால்நடைகளை வளர்ப்பவர்கள் கால்நடை வளர்ப்பைக் கைவிடும் நிலை தோன்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டத்தில் கால்நடைகளின் மேய்ச்சல் தரவைகளுக்காக ஒதுக்கப்பட்ட இடங்கள் சில விவசாயிகளால் அத்துமீறி பிடிக்கப்பட்டு சட்டவிரோத பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுகிறது.

இதனால் கால்நடைப் பண்ணையாளர்கள் தமது கால்நடைகளைப் பராமரிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அத்துடன் கால்நடைகளை பயிர்ச் செய்கைக் காலங்களில் வேறு இடங்களுக்குக் கொண்டு சென்று பராமரிப்பதிலும், அவற்றைக் கொண்டு செல்வதிலும் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த நிலை நீடிக்குமாயின் அதிக எண்ணிக்கையான பண்ணையாளர்கள் தமது கால்நடை வளர்ப்பைக் கைவிடும் நிலையும் ஏற்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சில விவசாய அமைப்புக்களால் மேய்ச்சல் தரவைகளுக்கென ஒதுக்கப்பட்ட இடங்கள் இதுவரை அடையாளப்படுத்தப்படாத நிலையில் காணப்படுகின்றன.

ஆகவே உரிய அதிகாரிகள் இதனைக் கவனத்தில் கொண்டு தமது கால்நடை வளர்ப்புக்கு உதவ வேண்டுமென கால்நடை வளர்ப்பாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-6)

# சுகாதாரக் கேடான உணவகங்களை மூடுவதற்கு நடவடிக்கை எடுங்கள்

### வவுனியா சுகாதாரப் பிரிவினரிடம் வேண்டுகோள்

வவுனியா,பெப்.5

சுகாதாரத்துக்குக் கேடான வகையில் இயங்கிவரும் ஹோட்டல்கள் மற்றும் தேநீர்க் கடைகளை மூடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வவுனியா சுகாதாரப் பகுதியினருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வவுனியா ஹோட்டல் ஒன்றில் திருமண வைபவம் ஒன்றுக்கென ஒழுங்கு செய்யப்பட்ட மதிய உணவில் புழுக்கள் இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து மக்கள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

> அங்கு கடமை புரியும் ஊழியர்களின் சுகாதாரம் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும்.

சுகாதாரத்துக்கு ஒவ்வாத வகையில் ஹோட்டல்கள் மற்றும் தேநீர் கடைகளில் காணப்படும் உணவுகளை சுகாதாரப் பரிசோதகர்கள் அடிக்கடி பரிசோதிக்க வேண்டும். அங்கு கடமை புரியும் ஊழியர்களின் சுகாதாரம் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும். மேலும் சமையல் அறையின் தூய்மை, இறைச்சி, மீன், மரக்கறிகள் உட்பட பல்வேறு உணவுப் பொருள்களின் தரம் ஆகியன தினமும் சுகாதார பரிசோதகர்களால் ஆய்வு செய்யப்பட வேண்டும்.

அத்துடன் தயாரிக்கப்பட்ட பொருள்களில் பூச்சி, புழுக்கள், பழுதடைந்த தன்மை என்பன காணப்படின் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளல் ஆகிய கோரிக்கைகளே விடுக்கப்பட்டுள்ளன.

மேலும் தொடர்ந்து சுகாதாரக் குறைபாடுகளுடன் இயங்கிவரும் ஹோட்டல்கள், தேநீர்க்கடைகள் ஆகியவற்றை மூடுவதன் மூலமாகவே பொதுமக்கள் தமக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியுமெனவும் பாதிப்புறும் மக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. (க-402)

## மாணவர்களுக்கு சைக்கிள்கள்

கற்றலில் ஆர்வமுள்ள சுமார் 38 மாணவர்களுக்கு சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

புதுக்குடியிருப்பு,பெப்.5

இறுதிக் கட்டப் போரின் போது பெற்றோரை இழந்த புதுக்குடியிருப்புக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு கியூடெக் ஹரித்தாஸ் நிறுவனத்தினால் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

இறுதிக் கட்டப் போரின் போது தந்தை அல்லது தாயை இழந்த வறுமைக்கோட்டுக்குட்பட்ட - கற்றலில் ஆர்வமுள்ள சுமார் 38 மாணவர்களுக்கு இந்தச் சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

அந்த அடிப்படையில் மந்துவில் அரசரட்ணம் வித்தியாலயத்தில் சுமார் 15 மாணவர்களுக்கும், புதுக்குடியிருப்பு றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தில் சுமார் 23 மாணவர்களுக்கும் கடந்த திங்கட்கிழமை பாடசாலை அதிபர்கள் முன்னிலையில் சைக்கிள்கள் வழங்கப்பட்டன. (க-400)

## மீளவும் சேவையில் இணைந்தார் வவுனியா டிப்போ முகாமையாளர்

வவுனியா,பெப்.5

சேவையில் இருந்து இடைநிறுத்தப்பட்ட இலங்கை போக்குவரத்துச் சபை வவுனியா டிப்போவின் முகாமையாளர் மீளவும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் பாலமோட்டைக்கான பஸ்சேவை ஒருநாள் இடம்பெறவில்லை என்பதே அவருக்கு எதிரான முக்கிய குற்றச்சாட்டு எனத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இடைநிறுத்தம் செய்யப்பட்ட அவருக்கான குற்றச்சாட்டு ஆதாரமற்றதென நிரூபிக்கப்பட்டதை அடுத்தே போக்குவரத்துச் சபையின் தலைமைக் காரியாலயம் இவரை உடனடியாக மீளவும் சேவையில் இணைத்துக் கொண்டது.

இதனையடுத்து இடைநிறுத்தப்பட்ட வவுனியாசாலை முகாமையாளர் எஸ்.குணராஜா மீளவும் சேவையில் இணைந்து கடந்த முதலாம் திகதியில் இருந்து வவுனியாவில் கடமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (க-50)

## சட்டவிரோதமாக கல் அகழ்வதைத் தடுப்பதற்கு தயாராகிவரும் வவுனியா தெற்கு பிரதேச சபை

வவுனியா, பெப்.5

வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை சட்டவிரோதமான முறையில் கல் உடைத்து எடுக்கப்படும் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வவுனியாவிலுள்ள கற்குளம், திருப்பழனி முருகன் ஆலயத்தை அண்மித்த பிரதேசம், சிதம்பரபுரம் பகுதி, ஓமந்தை விளாத்திக்குளம் மற்றும் அதனை அண்மித்த பகுதியில் சில இடங்கள் மற்றும் அரபாத் நகர் பகுதிகளில் இருந்து பெருமளவு கற்கள் உடைத்து அகற்றப்பட்டு வருகின்றன. இவற்றைக் கட்டுப்படுத்துவதற்கே பிரதேச சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை சட்ட விரோதமாக கல் அகழ்தல் மற்றும் அதிகளவு வெடி பொருள்களைப் பயன்படுத்துவதைக் கட்டுப்படுத்தல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பொதுமக்கள் சட்டவிரோதமாக வெடி வைத்துக் கற்களை அகழ்வோர் தொடர்பான தகவல்களை தரும் பட்சத்தில் அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை தயாராகவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

அதேசமயம் எதுவித பாதிப்பும் ஏற்படாத வகையில் தமது அனுமதியுடன் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கல் அகழ்வை மேற்கொள்ள முடியும் எனவும் பிரதேச சபையினர் அறிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-402)

# முஸ்லிம்களின் வாக்குகளைப் பெறுவதற்காகவே பம்பைமடுவில் திடுதிப்பென குடியேற்றத் திட்டம்

### தெரிவிக்கிறார் சிவசக்தி ஆனந்தன் எம்.பி.

வவுனியா, பெப்.5

முஸ்லிம் மக்களின் வாக்குகளைப் பெற்றுக்கொள்வதற்காகவே பம்பைமடுப் பகுதியில் முஸ்லிம் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன்.

வவுனியா பம்பைமடுப் பகுதியில் திட்டமிடப்பட்ட வகையில் முஸ்லிம் குடியேற்றங்கள் இடம்பெற்று வருகின்றன. போர் காரணமாகத் தமது சொந்த வீடுகளை இழந்த தமிழ் மக்களுக்கு காணிகள் வழங்கப்படாமலும் குடியேற்றத் திட்டங்கள் அமைக்கப்படாமலும் உள்ள நிலையில் இந்த முஸ்லிம் மக்களுக்கான குடியேற்றத் திட்டங்கள் இடம்பெறுகின்றன.

திருமணம் ஆகாத தனியாள்களுக்கும் இந்தக் குடியேற்றத் திட்டத்தில் இடமளிக்கப்பட்டுள்ளது. சுமார் 200 க்கு மேற்பட்ட ஏக்கர் காணியில் வீடுகளை அமைக்கும் பொருட்டு காடுகள் துப்புரவாக்கப்பட்டுள்ளன. இதற்கான அனுமதியை அரசே வழங்கியுள்ளதாகத் தெரிய வருகின்றது.

வவுனியா பல்கலைக் கழக வளாகம் பம்பைமடுவில் அமைந்துள்ள பகுதிக்கு அண்மையில் பல்கலைக் கழக ஊழியர்களுக்கு விடுதி வசதிகளை வழங்கவென பல்கலைக்கழக நிர்வாகத்தினர் முயன்று வரும் இவ்வேளையில், அந்தப் பகுதியில் முஸ்லிம் குடியேற்றங்கள் இடம்பெறுகின்றமை பல்கலைக்கழகச் சமூகத்தின் மத்தியிலும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

மேலும் இப்பகுதியில் முஸ்லிம் வர்த்தகர்களுக்கென கடைகளை அமைக்கும் திட்டமும் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

முஸ்லிம் மக்களின் வாக்குகளை அரசாங்கம் தக்க வைத்துக்கொள்ளும் ஒரே நோக்கில் இவ்வாறான குடியேற்றத் திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதாக நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் தெரிவித்துள்ளார். (க-402)

# தென்னிலங்கைச் சந்தைகளில் குடாநாட்டு சின்னவெங்காயம்

**குடாநாட்டில் பிரதான சந்தைகளில் வெங்காயத்தின் விலை தொடர்ந்தும் அதி கரித்த நிலையிலேயே காணப்படுகின்றது.**

யாழ்ப்பாணம்,பெப்.5
யாழ். குடாநாட்டில் இருந்து சின்னவெங்காயம் தென்பகுதிக்கு அதிகளவில் கொண்டு செல்லப்படு கின்றது.

ஏற்கனவே விவசாயி களால் அறுவடை செய் யப்பட்ட வெங்காயமே தென் குக்குக் கொண்டு செல்லப் படுகின்றது.

தெற்கில் அண்மையில் பெய்த மழையால் வெங் காயப் பயிர்கள் மழை வெள் ளத்தில் அழிவடைந்தன.

இதனை அடுத்து அங்கு வெங்காயத்துக்குப் பெரும் கிராக்கி நிலவி வருகின்றது.

தற்போது தென் பகுதி யில் இருந்து வருகை தரும் வர்த்தகர்கள் இங்கிருந்து வெங்காயத்தைக் கொண்டு செல்கின்றனர்.

அதனை அடுத்து குடா நாட்டில் பிரதான சந்தை களில் வெங்காயத்தின் விலை தொடர்ந்தும் அதி கரித்த நிலையிலேயே காணப் படுகின்றது.

குறிப்பாக திருநெல் வேலி, மருதனார்மடம், சுன் னாகம், சங்கானை, சாவ கச்சேரி போன்ற பிரதான சந்தைகளில் வெங்காயம் கிலோ 120 ரூபா தொடக்கம் 140 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது.

இதேவேளை, சிறு போகத்திற்கான வெங்காயம் தற்போது வடமராட்சி மற் றும் இடைக்காடு, புத்தூர் போன்ற பிரதேசங்களில் செய்கை பண்ணப்பட் டுள்ளது.

இந்த வெங்காயம் அடுத்த மாத முற்பகுதியில் அறு வடை செய்யப்படும் என்று கூறப்பட்டது.

இந்த வெங்காயம் அறு வடை செய்யப்பட்டாலும் கூட சின்ன வெங்காயத்தின் விலை குறைவடைய வாய்ப்பு இல்லை என்று விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட் கிறது.

பெரும்பாலும் வடம ராட்சிப் பகுதியில் அறுவடை செய்யப்படும் சின்ன வெங் காயத்தை வலிகாமம் பிர தேச விவசாயிகள் கொள்வ னவு செய்வது வழமை என் றும் இங்கிருந்தே நடுகை வெங்காயம் பெறப்படுவதா கவும் கூறப்பட்டது. (ம-17)

## 447 தனியார் பஸ்கள் தற்போது யாழ். மாவட்டத்தில் சேவையில்

யாழ்ப்பாணம், பெப்.5
யாழ். மாவட்டத்தில் 447 தனியார் பஸ்கள் உள்ளூர் சேவையில் ஈடுபடுத்தப்பட் டுள்ளன என்று யாழ். பிராந்திய கூட்டிணைக்கப் பெற்ற பஸ் நிறுவனங்களின் இணையத் தலைவர் பொ.கெங்காதரன் தெரிவித் தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வரு மாறு:-

யாழ். பிராந்திய கூட்டி ணைக்கப்பெற்ற பஸ் நிறு வனங்களின் இணையத்தின் கீழ் பருத்தித்துறைச் சங்கம் தவிர்ந்த 14 சங்கங்கள் தற் போது செயற்பட்டு வருகின் றன.

இந்தச் சங்கங்கள் ஊடாக இணையத்தில் பதிவு செய் யப்பட்ட 530 பஸ்களில் தற் போது 447 தனியார் பஸ்களே சேவையில் ஈடுபடுத்தப் பட்டுள்ளன. ஏனைய பஸ் கள் பழுதடைந்த நிலையில் தற்காலிகமாக சேவையில் ஈடுபடவில்லை.

இவற்றில் 769 வழி பஸ் சேவையான தெல்லிப் பழைக்கு 56 பஸ்களும் 768 வழி பஸ் சேவையான அளவெட்டி அம்பனைக்கு 25 பஸ்களும், 788 வழி பஸ் சேவையான இளவாலைக்கு 26 பஸ்களும் 787 வழி பஸ் சேவையான மாதகலுக்கு 32 பஸ்களும், 782, 786, 785, 784 வழி பஸ் சேவையான காரைநகருக்கு 34 பஸ்களும், 780 வழி பஸ் சேவையான ஊர்காவற்றுறைக்கு 19 பஸ்களும், 793 வழி பஸ் சேவையான கச்சேரி, கொழும் புத்துறைக்கு 26 பஸ்களும், 776 வழி பஸ் சேவையான புங்குடுதீவுக்கு 21 பஸ்க ளும், 752/1 வழி பஸ் சேவை யான அச்சுவேலிக்கு 62 பஸ்களும், 764 வழி சேவை யான புன்னாலைக்கட்டு வனுக்கு 28 பஸ்களும் 769/ 1 வழி சேவையான சாவகச் சேரிக்கு 85 பஸ்களும், 759 வழி சேவையான கொடிகா மத்துக்கு 16 பஸ்களும், 789 வழி சேவையான ஆராலிக்கு 9 பஸ்களும், 806 வழி பஸ் சேவையான தாழையடி மற்றும் 762 வழி பஸ் சேவையான ஆழியவளை ஆகிய இடங்களுக்கு 8 பஸ் களும் சேவையில் ஈடுபடுத் தப்பட்டுள்ளன.

இந்த 447 பஸ்களும் சங் கங்கள் ஊடாகக் குறித் தொதுக்கப்பட்ட நேர அட்ட வணைகளின் படி சேவை யில் ஈடுபட்டு வருகின்றன.

இதனை விட நேரக் கணிப்பாளர்கள் ஒவ்வொரு சேவைகளுக்கும் ஒதுக்கப் பட்ட இடங்களில் நியமிக்கப் பட்டு உரிய நேரத்தில் பஸ் கள் தரிப்பிடங்களைச் சென்ற டைவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இணையத்தில் பதிவு செய் யப்பட்ட ஏனைய பஸ்கள் திருத்தப் பணிகளுக்காக உள் ளதால் தற்காலிகமாக சேவை யில் ஈடுபடவில்லை எனவும் தெரிவித்தார். (ம-14)

## காசநோய் விழிப்புணர்வு நடமாடும் சேவை

யாழ்ப்பாணம்,பெப்.5
காசநோய் தொடர்பான விழிப்புணர்வு நடமாடும் சேவையை மாவட்ட காசநோய் கட்டுப்பாட்டு வைத்திய நிலையம் மேற் கொண்டு வருவதாகக் காசநோய் கட்டுப்பாடு வைத் திய அதிகாரி எஸ்.யமுனா னந்தா தெரிவித்தார்.

காசநோய் தொடர்பாக நடமாடும் சேவை இன்று செவ்வாய்க்கிழமை நெடுந் தீவிலும், 14 ஆம் திகதி வியாழக்கிழமை அனலை தீவிலும், 19 ஆம் திகதி செவ் வாய்க்கிழமை எழுவை தீவிலும் நடைபெறவுள்ளது.


பிரதேச வைத்தியசாலை யின் உதவியுடனும் யாழ். மாபு சிகிச்சை நிலைய காச நோய் வைத்தியர்களின் உதவி யுடனும் இந்த நடமாடும் சேவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட நடமாடும் சேவையில் சளிப் பரிசோதனை மேற்கொள்ள முடியும். காசநோய் தொடர்பான விளக்கங்கள் மற்றும் சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவுபடுத்த முடியும்.

வைத்தியசாலைக்கு சென்று சிகிச்சை பெற முடி யாத நோயாளர்களுக்காகவே இந்த நடமாடும் சேவை மேற்கொள்ளப்படுகிறது.

பொது வைத்தியசாலை மற்றும் சனசமூக நிலையங்க ளில் குறித்த திகதிகளிலும் சேவை நடைபெறும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த ஜனவரி மாதம் 22ஆம் திகதி நயினாதீவிலும், 28 ஆம் திகதி மருதங்கேணி யிலும் இந்த நடமாடும் சேவை இடம்பெற்றமை குறிப் பிடத்தக்கது. (ம-13)



காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபைக்கான மண்டபம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு தைப்பூச தினத்தன்று இடம்பெற்றது. ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தா மு.சுந்தரலிங்கம் அடிக்கல் நட்டு வைத்தார். (ம-250)

## குடும்பப் பிரச்சினைகள் தொடர்பாக நாளாந்தம் அதிக முறைப்பாடுகள்

**மானிப்பாய் பொலிஸ் பிரிவு தகவல்**

**குடும்ப வன்முறை, காதல், உறவி னர்களுக்கு இடையே மோதல் போன்ற பிரச்சி னைகள் குறித்தே முறைப்பாடுகள்**

யாழ்ப்பாணம்,பெப்.5
குடும்பப் பிரச்சினைகள் தொடர்பாக நாளாந்தம் அதிக எண்ணிக்கையான முறைப் பாடுகள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் மேற்கொள் ளப்பட்டு வருகின்றன என்று மானிப்பாய் பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தகவல் தெரி வித்துள்ளன.

குடும்ப வன்முறை, காதல், உறவினர்களுக்குஇடையே மோதல் போன்ற பிரச்சினை கள் தொடர்பாக நாளாந்தம் மானிப்பாய் பொலிஸ்நிலை யத்தில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

பெரும்பாலும் குடும்ப வன்முறைகளால் கணவ னால் துன்புறுத்தப்படுவதாக, தொலை பேசி ஊடாக ஏற்படும் காத லால் பெண்கள் ஏமாற்றப்படு வது, மது போதையில் குழுக் களுக்கிடையில் மோதல் போன்ற காரணங்களால் பாது காப்புக்காக பொலிஸ் நிலையங் களைத் தேடி வருகின்றனர்.

இதன் காரணமாக பொலிஸ் நிலையத்தின் வாச லில் முறைப்பாடுகளை மேற் கொள்வதற்காக நாளாந்தம் அதிக எண்ணிக்கையானோர் காத்திருக்கின்றனர்.

உடுவில், ஆலடி, மல் வம், சாவற்காடு, நவாலி உட்பட சங்கானைப் பிரதே சங்களில் இருந்து இந்த முறைப்பாடுகள் பெரும் எண் ணிக்கையில் வருகின்றன.

இது தொடர்பான வழக் குகள் மல்லாகம் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று பொலிஸ் நிலைய வட்டாரங்கள் தகவல் தெரி வித்துள்ளன. (ம-14)

## வடமாகாண கிராமங்கள் தோறும் உள்ளூராட்சி சபைகள் ஊடாக கிராமத்துக்கு ஒரு திட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.5
கிராமத்துக்கு ஒரு முன் மொழிவுத் திட்டம் என்ற வகையில் உள்ளூராட்சி சபைகள் ஊடாக மக்கள் பங்கேற்புத் திட்டம் தயாரிக் கப்படவுள்ளது.

ஆசிய மன்றத்தின் அனு சரணையுடன் வடமாகாணத் தில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளிலும் இத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

ஒவ்வொரு உள்ளூராட்சி சபைகளும் மக்களின் பங் கேற்புடன் கிராமத்துக்கு ஒரு திட்டம்தயாரிக்கும் நோக் குடன் செயற்பட்டு வருகின்றது.

விரைவில் இதற்கான பயிற்சி அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுசபைகளின் செய லாளர்கள் தலைமையில் இத் திட்டம் முன்னகர்த்தப் படும்.

இதேவேளை, இச் செயற் திட்டம் தொடர்பான முன் னேற்பாட்டு நடவடிக்கை யாழ். மாநகர சபையால் மேற் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையை பின்பற்றி வடக்கில் உள்ள 34 உள்ளூராட்சி சபைகளிலும் இத்திட்டம் முன்நகர்த் தப்பட வுள்ளது. வடமாகாண பிரதம செயலாளர் திருமதி ரமேஷ் விஜ யலட்சுமி இதற்கான அனு மதியை ஏற்கனவே வழங்கி யுள்ளார். (ம-41)

## குருநகர் இளைஞரைக் காணவில்லை

யாழ்ப்பாணம், பெப்.04
யாழ்.குருநகரைச் சேர்ந்த இளைஞன் ஒருவரைக் காணவில்லை என்று இளைஞனின் உறவினரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குருநகர், கடற்கரை வீதியைச் சேர்ந்த மக்மான் பிரதீபன் (வயது-17) என்பவரே இவ்வாறு காணமல் போயுள்ளார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இரவு சைக்கிளில் புறப்பட்டுச் சென்ற இளைஞன் வீடு திரும்ப வில்லை என்று முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

## யாழ். மாநகர சபையின் இந்த ஆண்டுக்காக நிலையியல் குழு தெரிவு தீர்மானத்தில் வாக்குவாதம்; எதிரணி வெளிநடப்பு

யாழ்ப்பாணம்,பெப்.5
யாழ்.மாநகர சபையின் இந்த ஆண்டுக்கான நிலையி யற்குழுவைத் தெரிவு செய்யும் தீர்மானம் வியாழக்கிழமை நடைபெற்ற மாதாந்தக் கூட் டத்தில் எடுக்கப்பட்ட போது ஏற்பட்ட வாக்குவாதங்களை அடுத்து எதிரணியினர் வெளி நடப்புச் செய்தனர்.

மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் நிலை யியல் குழு விடயம் சபையில் எடுக்கப்பட்டது. இதன்போது எதிரணி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம், குழுவில் இடம்பெறும் பிரதிநிதிகளின் பெயரை ஆளும் தரப்பினரும் எதிரணியினரும் தத்தமது சா பில் தெரிவு செய்து கொள் வதன் மூலம் சுமுகமாக குழுக்களைத் தெரிவு செய்ய லாம் எனவும் அதன்படி எமது கட்சிப் பிரதி நிதிகளை நாங்களும் உங்கள் கட்சிப் பிரதிநிதிகளை நீங்களும் தெரிவு செய்து கொள் ளுங் கள் என்றும் குறிப்பிட்டார்.

எனினும் ஆளும் தரப் பினர் எதிரணியைச் சேர்ந்த உறுப் பினர் மு.றெமீடிய ஸைத் தெரிவு செய்ததால் இரு சாராருக்கும் இடையில் வாக்கு வாதம் சூடுபிடித்தது.

அதனை அடுத்து தெரிவு செய்யப்பட்ட நிலையியல் குழுக்களில் தமது உறுப்பி னர்களின் பெயர்கள் இடம் பெற்றிருப்பின் சட்ட நட வடிக்கை எடுக்க வேண்டி ஏற்படும் என்று கூறிய எதி ரணியினர் சபையில் இருந்து வெளியேறினர்.

நிலையியல் குழுவில் ஆளும், எதிரணித் தரப்புக்க ளின் உறுப்பினர்கள் இருத் தல் வேண்டும். இல்லை எனின் சபையின் கொடுப் பனவு விடயங்களைக் கையாள முடியாத நிலை ஏற்படும் என்பது குறிப்பிடத் தக்கது. (ம-7)



அண்ணாவின் 44 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு சென்னை மெரினா கடற்கரையில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார் தி.மு.க., தலைவர் கருணாநிதி. அருகில் தி.மு.க., பொதுச் செயலர் அன்பழகன், பொருளாளர் ஸ்டாலின் மற்றும் தி.மு.கழக முக்கிய பிரமுகர்கள்.

# இரண்டு வருடங்களில் சென்னையில் நீர்மூழ்கிக் கப்பல் அருங்காட்சியகம்



சென்னை, பெப்.5

சென்னையில் நீர்மூழ்கி கப்பல் அருங்காட்சியகம் இன்னும் இருஆண்டுகளில் அமைக்கப்படும் என்று தளபதி அமர் கே.மகாதேவன் தெரிவித்தார்.

இந்தியக்கடற்படையின் ஓய்வு பெற்ற அலுவலர் கூட்டமைப்பின் வருடாந்த கூட்டம் சென்னை ஐ.என்.எஸ். அடையாறு மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பிராந்திய தளபதி அமர் கே.மகாதேவன், தமிழக பொது மற்றும் இராணுவ விவகார இணைச் செயலாளர் மைதிலி ராஜேந்திரன், கனியப்பன், இராணுவ வீரர்களின் குடும்பத்தினர் உட்படபலர்கலந்துகொண்டனர். தமிழ்நாடு மற்றும் புதுச் சேரி பிராந்தியத் தளபதி மகாதேவன் பேசியதாவது:

முன்னாள் வீரர்களின் கூட்டம் நடைபெற்றது. அவர்கள் தங்கள் குறைகளைத் தெரிவித்துள்ளனர். இது குறித்து சம்பந்தப்பட்ட மத்திய, மாநில அரசு துறை அதிகாரிகளிடம் தெரிவிக்கப்படும். விசாகபட்டினத்தில் நீர்மூழ்கிக் கப்பல் அருங்காட்சியகம் செயற்பட்டு வருகிறது. தமிழகத்திலும் இதுபோன்ற அருங்காட்சியகம் அமைக்க கோரிக்கை விடப்பட்டிருந்தது.

இந்தநிலையில் சேவையிலிருந்து ஓய்வுபெற்ற நீர்மூழ்கிக் கப்பலை இந்திய கப்பல்படை வழங்கியுள்ளது. தற்போது அந்தக் கப்பல் விசாகபட்டினத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. - என்றார். (வ)

# யமுனை ஆற்றங்கரையில் கழிவுகளை வீசுவதற்குத் தடை



டில்லி, பெப்.5

யமுனை ஆற்றங்கரையில் கழிவுகளை வீசுவதற்கு தேசிய பசுமை தீர்ப்பாயம் தடை விதித்துள்ளது.

அத்துடன், கழிவுகளை கொட்டப்படுவதைக் கண்காணித்து அறிக்கை தர 5 சட்டத்தரணிகளையும் நியமித்துள்ளது.

இந்துக்கள் மிகவும் புனிதமாக கருதி வழிபடும் யமுனை நதி தற்போது, கழிவு நீர் ஓடும் ஆறாக மாறிவிட்டது. யமுனையில் மாசு கலப்பதை தடுக்கப் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டும் இதுவரை எந்த பயனும் ஏற்படவில்லை. இதற்கிடையில் யமுனை கரை பகுதிகளை, மாநகராட்சி குப்பை கொட்டும் இடமாக மாற்றிவிட்டது. இதனால், சுற்றுச்சூழல் மாசு ஏற்படுகிறது.

இதுகுறித்த முறைப்பாட்டை விசாரித்த தேசிய பசுமை தீர்ப்பாயம், யமுனை ஆற்றங் கரைகளில் குப்பை கொட்டுவதற்கு கடந்த ஆண்டு தடை விதித் தது. அந்தத் தடை விதிக் கப்பட்டு ஓராண்டுக்கு மேலாகியும், யமுனை ஆற்றங் கரைகளில் குப்பை கொட்டுவது நிறுத்தப்படவில்லை.

இந்தநிலையில், மேற்படி விவகாரம் குறித்துப் பேசிய பசுமை தீர்ப்பாயத்தின் தலைவர் சுதந்திர குமார் தலைமையிலான குழு விவாதித்து பிறப்பித்த உத்தரவில் யமுனை ஆற்றங்கரைகளில் குப்பை கொட்டப்படுவதை உடன் நிறுத்த வேண்டும்.

இதுதொடர்பாக மாநகராட்சியின் பணிகளை கண்காணித்து தீர்பாயத்துக்கு அறிக்கை தாக்கல் செய்ய 5 சட்டத்தரணிகள், ஆணையாளர்களாக நியமிக்கப்படுகின்றனர்- என்றார். (வ)

### பாலியல் குற்றங்கள்: வர்மா குழுவின் பரிந்துரைகள் முற்றாக உள்வாங்கப்படவில்லை

# மகளிர் அமைப்புக்கள் எதிர்ப்பு



டில்லி, பெப்.5

பாலியல் வன்புணர்வுக் குற்றத்துக்கு தூக்குத் தண்டனை விதிக்க வகை செய்யும் அவசர சட்டத்துக்கு **மகளிர்** அமைப்பினர் சில **எதிர்ப்புத்** தெரிவித்துள்ளனர்.

**நீதிபதி வர்மா** குழு அளித்த பெரும்பாலான பரிந்துரைகள் அவசர சட்டத்தில் இடம் பெற**வில்லை** என்பதே மகளிர் **அமைப்பின்** எதிர்ப்புக்குக் **காரணம்** என்று கூறப்படுகிறது. அவசர சட்டத்தை நாடாளுமன்றத் தாக்கல் செய்து சட்டமாக மாற்ற அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதை வலியுறுத்தி கையெழுத்து இயக்கம் நடத்தவும், நாடாளுமன்றத்தை முற்றுகையிடவும் அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

இதனிடையே சில அமைப்புகள் அவசர சட்டத்துக்கு வரவேற்பு அளித்துள்ளன. அவசர சட்டத்தின் காரணமாக பெண்களுக்கு எதிரான குற்றங்கள் குறையும் என்று அந்த அமைப்புகள் கருத்துத் தெரிவித்துள்ளன.

அவசர சட்டத்தில் வர்மா குழுவின் பரிந்துரைகளை அரசு முழுமையாக ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக இராணுவத்தினர் மீதான வன்புணர்வு முறைப்பாட்டை விசாரிக்க முன் அனுமதி தேவையில்லை என்று வர்மா குழு பரிந்துரைத்திருந்தது.

ஆனால், அந்தப் பரிந்துரையை அரசு நிராகரித்து விட்டது. பெண்கள் பாதுகாப்பில் அரசு முழுமையான நடவடிக்கை எடுக்காததால் ஜனநாயகம் பலவீன மாகி விடும் என்று மகளிர் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன.

மேற்படி அவசர சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல் அளிக்கக் கூடாது என்று அந்த அமைப்புகள் கோரிக்கை விடுத்தன. அந்த எதிர்ப்பைப் பொருட்படுத்தாது அவசர சட்டத்துக்கு ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் ஒப்புதல் அளித்தார். (வ)

# அணு உலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடாவிட்டால் மீண்டும் போராட்டம்

### போராட்டக் குழுத் தலைவர் உதயகுமார் கருத்து

நெல்லை, பெப்.5

கூடங்குளம் அணு உலை குறித்து வெள்ளை அறிக்கை வெளியிடாவிட்டால் அணுமின் நிலையத்தை முற்றுகையிடும் போராட்டத்தை மீண்டும் நடத்துவோம் என்று - போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார் தெரிவித்தார்.

கூடங்குளம் அணு மின் நிலையத்தை மூடக்கோரி இடிந்தகரையில் கடந்த ஒரு ஆண்டுக்கும் மேலாக தொடர்ந்து போராட்டம் நடைபெற்று வருகிறது. அணு உலை எதிர்ப்பு போராட்டக்குழு சார்பில் அணு மின் நிலையத்தை கடல் வழியாக முற்றுகையிடும் போராட்டமும் நடைபெற்றது.

இந்த நிலையில் அடுத்த கட்டப் போராட்டம் குறித்த ஆலோசனைக் கூட்டம் இடிந்தகரையில் உள்ள லூர்து ஆலய மாதா கோயிலில் நடைபெற்றது.



அதில் போராட்டக்குழு ஒருங்கிணைப்பாளர் உதயகுமார், தமிழர் தேசிய இயக்க தலைவர் நெடு மாறன், நாம் தமிழர் கட்சித் தலைமை ஒருங்கிணைப் பாளர் சீமான், தமிழ்தேச பொதுவுடமைக் கட்சி தலைவர் மணியரசன், மீனவர்கள், பொதுமக்கள் ஆகியோர்கலந்துகொண்டனர்.

கூட்டத்தின் பின்னர் உதயகுமார் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

கூடங்குளம் அணு உலை பற்றி இன்னும் 15 நாள்களுக்குள் வெள்ளை அறிக்கை வெளியிட வேண் டும். இல்லையென்றால் நெல்லை, தூத்துக்குடி, குமரி மாவட்ட மீனவர்கள், அணு உலை எதிர்ப்பாளர்கள் சார்பில் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும். நெல்லை மாவட்டத்தை சேர்ந்தவர்கள் கூடங்குளம் அணு மின் நிலையத்தையும், தூத்துக்குடி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் துறைமுகத்தையும், குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விவேகானந்தர் மண்டபத்தையும் முற்றுகையிட்டு போராட்டம் நடத்துவர் - என்றார். (வ)

# பாலியல் குற்றத்துக்கு தூக்குதண்டனை அவசர சட்டத்துக்கு ஜனாதிபதி ஒப்புதல்



டில்லி, பெப்.5

பாலியல் வன்புணர்வுக் குற்றத்துக்கு தூக்குத் தண்டனை விதிக்க வகை செய் யும் அவசர சட்டத்துக்கு ஒப்புதல் அளித்து ஜனாதி பதி பிரணாப் முகர்ஜி நேற்று முன்தினம் கையெழுத் திட்டார். அதைத் தொடர்ந்து அவசர சட்டம் நடை முறைக்கு வந்தது.

டில்லியில் ஓடும் பஸ்ஸில் 6 பேர் கும்பலால் பாலியல் வன்புணர்வுக்குட்படுத்தப்பட்ட மருத்துவ மாணவி 16 நாள் மரண போராட்டத்தின் பின்னர் உயிரிழந்தார். அவருக்கு நேர்ந்த கொடூரம் நாட்டு மக்களிடையே கொந்ளிப்பை ஏற்படுத்தியது. பாலியல் பலாத்காரம் செய்பவர்களை தூக்கிலிட வேண்டும் என்று போராட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

அதைத் தொடர்ந்து, பாலியல் குற்றங்களுக்கு தண்டனையை கடுமை யாக்குவது குறித்து ஆய்வு செய்ய உச்ச நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி வர்மா தலைமையில் குழு ஒன்றை மத்திய அரசு டிசெம்பரில் அமைத்தது.

அந்தக் குழு ஒரு மாதத்தில் தனது அறிக்கையை தயாரித்து கடந்த மாதம் 23 ஆம் திகதி மத்திய அரசிடம் தாக்கல் செய்தது. அதில், பெண்களைப் பாதுகாக்க பல்வேறு சட்டங்களில் செய்ய வேண்டிய திருத் தங்கள் பற்றி பரிந்துரைக்கப் பட்டிருந்தது.

## சீன அரசின் ஆலோசகராக ஜக்கிசான்



பிஜிங், ஜன.5
பிரபல திரைப்பட நடிகர் ஜக்கிசான் அரசியலில் கள மிறங்கியுள்ளார்.

நடிகர் ஜாக்கிசான் சீன அரசின் ஆலோசனைக் குழு வில் உறுப்பினராகத் தற் போது நியமனம் செய்யப் பட்டுள்ளார்.

சமீபத்தில் அமெரிக்க பத்திரிகைகளில் சீன தலை வர்கள் ஊழல் செய்கிறார்கள் என்ற கட்டுரை வெளியாகி இருந்ததை எதிர்த்து ஜாக்கி சான் கண்டித்துப் பேசினார்.

உலகிலேயே ஊழல் மலிந்த நாடு அமெரிக்கா தான் என கருத்து தெரி வித்து, சீனத் தலைவர்களை புகழ்ந்திருந்தார்.

அதைத்தொடர்ந்தே இவருக்கு இப்பதவி வழங் கப்பட்டுள்ளது என்று தக வல் வெளியாகியுள்ளது.

அத்துடன் கடந்த ஆண்டு சிறந்த இலக்கியத்துக்காக நோபல் பரிசு பெற்ற சீன எழுத்தாளர் மோயான் மற் றும் புகழ்பெற்ற முன்னாள் கூடைப்பந்து வீரர் ஆகி யோர் இந்தப் பதவிக்கு நிய மனம் செய்யப்பட்டுள்ள னர். (ற)

# பிரான்ஸின் 30 போர் விமானங்கள் அதிரடி; தீவிரவாதப் பயிற்சி மையம் தரைமட்டம்

## அதிர்ந்தது வடக்கு மாலி



பாமகா, பெப்.5
மாலியின் வடக்குப் பகுதி யில் பிரான்ஸ் விமானப் படை யினர் நடத்திய தாக்குதலில் தீவிரவாதிகளின் பயிற்சிமை யம் நிர்மூலமாக்கப்பட்டது என்று தெரிவிக்கப்படுகிறது.

அந்தத் தாக்குதலில் பிரான்ஸ் விமானப் படையின் 30 போர் விமானங்கள் ஈடுபட் டன என்றும் கூறப்படுகிறது.

இதுகுறித்து பிரான்ஸ் இராணுவ செய்தித் தொடர் பாளர் கேணல் தீயரி பர்கார்ட் தெரிவித்ததாவது:-

மாலியின் வடக்கில் தீவிர வாதிகளின் பிடியில் இருந்த முக்கிய பகுதிகள் பிரான்ஸ் தலைமையிலான மாலி படைகளால் கைப்பற்றப்பட் டுள்ளன. கடந்த வாரம் மீட்கப்பட்ட கிடல் நகருக்கு வடக்கே உள்ள டெசாலிட் என்ற பகுதியில் இருந்த தீவிரவாத பயிற்சி மையமே விமானத் தாக்குதல் மூலம் அழிக்கப்பட்டது-என்றார்.

பிரான்ஸ் ஜனாதிபதி ஒலாந்த், மாலி சென்ற டைந்த ஒரு சில மணி நேரத் தில் இந்தத் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது.

இதேவேளை, தீவிர வாதிகளுக்கு எதிரான போர் தொடரும் வரை பிரான்ஸ் இராணுவம் மாலியில் தங்கி இருக்கும் என்று ஜனாதிபதி ஒலாந்த் தெரிவித்துள்ளார். (ற)



சிரியாவின் அதிபர் பஷார் அல்-அசாத், ஈரான் நாட்டு தேசிய பாதுகாப்பு சபையின் செய லாளர் சயீத் ஜலிலி மற்றும் அவரது குழுவினரை டமாஸ்கஸில் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினார்.

# மூன்றாவது முறையாகவும் பிரதமராகிறார் நெதன்யாகு

## அரசமைக்க அழைப்பு விடுத்தார் இஸ்ரேல் ஜனாதிபதி



ஜெருசலேம், பெப்.5
இஸ்ரேல் பிரதமர் பெஞ்ச மின் நெதன்யாகுவை அரசு அமைக்குமாறு அந்த நாட் டின் ஜனாதிபதி ஷிமோன் பெரஸ் கேட்டுக் கொண்டுள் ளார்.

கடந்த ஜனவரி 22ஆம் திகதி இஸ்ரேல் நாடாளு மன்றத் தேர்தல் நடைபெற் றது. தேர்தல் முடிவுகளின் படி எந்தக் கட்சியும் பெரும் பான்மையைப் பெற்றிருக்க வில்லை. அதைத் தொடர்ந்து, புதிய அரசை அமைப்பது குறித்து 12 முக்கிய கட்சிகளு டன் ஜனாதிபதி ஷிமோன் பெரஸ் ஆலோசனை நடத்தி னார். அதில் பெரும்பாலான வர்கள் நெதன்யாகுவை ஆதரித்தனர்.

அதையடுத்து, மற்ற கட்சி களுடன் இணைந்து புதிய கூட்டணி அரசை அமைக்கு மாறு பிரதமர் நெதன்யா குவை, ஜனாதிபதி ஷிமோன் பெரஸ் முறைப்படி கேட்டுக் கொண்டுள்ளார். புதிய அரசை அமைக்க நெதன்யாகுவுக்கு 5 வார கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த நெதன்யாகு- ஈரானை அணு ஆயுதம் தயாரிக்க விடாமல் தடுப் பதே எனது அரசின் முதல் முன்னுரிமையாக இருக்கும்.

சிரியாவில் அபாயகர மான ஆயுதங்கள் குவிக்கப் பட்டு, நமது குடிமக்களுக்கு அச்சுறுத்தலாக விளங்கு வதை அரசு சமாளிக்கும். அமைதிப் பணிகளுக்கு அரசு உறுதிபூண்டுள்ளது. பலஸ் தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸுடனான அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப் படும்.

சவால்களை எதிர்கொள்ள வும், அரசுக்கு ஸ்திரத் தன்மை ஏற்படுத்தவும் விரி வான கூட்டணி ஆட்சியை அமைக்க உள்ளேன் -என்று தெரிவித்தார். மூன்றாவது முறையாகவும் நெதன்யாகு பிரதமர் பதவியை ஏற்க உள்ளமை குறிப்பிடத் தக்கது. (ற)

# ஈரானின் தயாரிப்பில் நவீன போர் விமானம்



பியாங்யாங், பெப்.5
ஈரான், தன் சொந்த தயாரிப்பில் உருவான நவீன போர் விமானத்தை கண்காட்சி ஒன்றில் அறிமுகப்படுத்தியது.

இந்த நிகழ்வில் ஈரான் ஜனாதிபதி முகமது அஹ் மதி நிஜாத் பங்கேற்றார்.

அங்கு உரையாற்றிய அஹ்மதி நிஜாத், கஹெர் 313 என்று பெயரிடப்பட்டுள்ள அந்த விமானம், ஈரானின் இரா ணுவத்தின் சுயசார்பு நிலையைப் பறைசாற்றுகின்றது என்று தெரிவித்தார்.

ஈரான் அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக எழுந்த குற்றச்சாட்டையடுத்து, அந்த நாட்டுக்கு ஆயுதங்கள் வழங்கு வதற்கு சர்வதேச அளவில் தடை நடைமுறையில் உள்ளது.

அதனால், ரஷ்யா, அமெரிக்கா போன்ற நாடுகளில் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கொள்வனவு செய்த விமானங்களையே ஈரான் பயன்படுத்தி வருவது குறிப்பிடத்தக்கது. (ற)

# ஏமன் தீவிரவாதிகளுக்கு ஈரான் ஆயுத விநியோகம்

சானா, பெப்.5
ஏமனில் செயற்படும் தீவிரவாதிகளுக்கு ஈரான் ஆயுதங்கள் விநியோகிக்கி றது என்று குற்றஞ்சாட்டப் படுகிறது.

ஏமன் நாட்டின் வட பகுதியில் தீவிரவாத அமைப்பி னர் கிளர்ச்சி நடத்தி வரு கின்றார்கள்.

சில நாள்களுக்கு முன் னர் ஏமன் அதிகாரிகள் சந் தேகத்துக்கு இடமான கப் பலை சோதனை செய்த போது அதில் ஏராளமான வெடி பொருள்கள், ஏவுகணைகள் இருந்ததை கண்டறியப்பட் டது. இவை ரஷ்யாவில் தயாரிக்கப்பட்டவை. இந்த ஆயுதங்கள் ஏமனிலுள்ள தீவிரவாதிகளுக்குக் கடத்தப் பட்டவை என்று ஏமன் அதி காரிகள் தற்போது தெரிவித் துள்ளனர். இதுகுறித்து விசா ரணை நடத்தி வருவதாக வும் கூறினர். (ற)

# ஈராக்கில் கார்க் குண்டு வெடிப்பு 30 பேர் சாவு; 70 பேர் படுகாயம்



கிர்குக், பெப்.5
ஈராக்கில் பொலிஸ் தலைமையகம் மீது நடத்தப் பட்ட கார்க்குண்டுத் தாக்குத லில் 30 பேர் உயிரிழந்தனர். 70 க்கும் மேற்பட்டவர்கள் படுகாயமடைந்தனர்.

ஈராக்கின் கிர்குக் நகர பொலிஸ் தலைமையகம் மீதே இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டுள்ளது. குண்டு வெடித் ததைத் தொடர்ந்து, தீவிர வாதிகள் துப்பாக்கிப் பிரயோ கம் மேற்கொண்டனர் என் றும் கூறப்படுகிறது.

இதுகுறித்துக் கருத்துத் தெரிவித்த பொலிஸ் அதி காரி ஒருவர்:-

பொலிஸ் தலைமைய கத்தைத் தங்கள் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வரவே தீவிரவாதிகள் தாக்கு தலை மேற்கொண்டுள்ள னர். எனினும் அவர்களின் நோக்கம் நிறைவேறவில்லை என்று கூறினார்.

கார்க் குண்டுவெடித்ததில், அருகில் உள்ள கட்டடங்கள் கடுமையாகச் சேதமடைந் தன. இத்தாக்குதலுக்கு இது வரை எந்த இயக்கமும் பொறுப் பேற்கவில்லை என்று தெரி விக்கப்பட்டது. (ற)

# ஹெலிகொப்டர் விபத்தில் ஜனாதிபதி வேட்பாளர் சாவு

அசுன்சியன், பெப்.5
பராகுவே ஜனாதிபதி வேட்பாளர் லினோ ஒவிடோ ஹெலிகொப்டர் விபத்தில் உயிரிழந்தார்.

இந்த விபத்து நேற்று முன்தினம் இடம்பெற்றுள் ளது. ஜனாதிபதி வேட்பாளர் லினோ ஒவிடோ (வயது-69), அவரது மெய்க்காப்பாளர் மற்றும் விமானி ஆகியோரே உயிரிழந்துள்ளனர் என்று தகவல்கள் தெரிவிக்கின் றன.

இந்த விபத்துக் குறித்து லினோ ஒவிடோவின் குடும் பத்தினர் சந்தேகம் தெரி வித்துள்ளனர்.

லினோ ஒவிடோ 1989 ஆம் ஆண்டு அந்த நாட்டு ஜனாதிபதியாக இருந்த ஆல்பிரடோ ஸ்ரோஸ்னரை கவிழ்க்க உதவியவர் என்று கூறப்படுகின்றது. (ற)

## பணயக் கைதிகள் இருவர் பிலிப்பைன்ஸில் விடுதலை

மணிலா, பெப்.5
பிலிப்பைன்ஸில் தீவிர வாதிகளால் பணயக்கைதிகளா கப் பிடிக்கப்பட்டவர்களில் இரு வர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அபு சயிப் அமைப்பைச் சேர்ந்தவர்களே வெளிநாட் டவர்களைப் பணயமாக பிடித்து வைத்திருந்தனர். ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த ஊடகவியலாளர்களே இவ் வாறு பணயமாக பிடிக்கப் பட்டனர். அபு சயிப் தீவிரவாதி கள் சிலரை செவ்வி யெடுக்கச் சென்றபோதே அவர்கள் கைது செய்யப்பட்டிருந்தனர்.

விடுவிக்கப்பட்டுள்ள குறித்த இரண்டு ஜோர்தானிய ஊடக வியலாளர்களும் தற்போது வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளனர்.

கப்பம் பெற்றுக்கொள் ளும் நோக்கில் மேலும் பல வெளிநாட்டுப் பிரஜைகளை அபு சயிப் தீவிரவாதிகள் பணயமாக பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## தென்கொரியா- அமெ. கடற் போர் ஒத்திகை

### வடகொரியாவின் அணு ஆயுத சோதனையை அடுத்து

சியோல், பெப்.5



தென்கொரியாவுடன் இணைந்து அமெரிக்கா பிரமாண்டமான கடற்படை போர் ஒத்திகை ஒன்றை நேற்று நடத்தியதாகத் தெரியவருகிறது.


வடகொரியா அணு ஆயுத சோதனைக்குத் தயாராகி வருவதாகக் கூறப்படும் நிலையிலேயே இந்தப் போர் ஒத்திகை நடத்தப்படுகிறது.

வடகொரியாவின் அணு ஆயுத சோதனையை நிரூபிக்கும் வகையில் செய்மதிப் புகைப்படங்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. வடகொரியாவும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக கருத்துக்களை வெளியிட்டுள்ளது.

அதற்கு அமெரிக்கா, தென் கொரியா உள்ளிட்ட பல உலக நாடுகள் எதிர்ப்பு தெரிவித்திருந்தன. வடகொரியா தனது அணு ஆயுத நடவடிக்கைகளை நிறுத்தாவிட்டால் கடுமையான பின் விளைவுகளை எதிர்கொள்ளும் என்றும் அவை எச்சரித்துள்ளன.

இந்தநிலையில் நட்பு நாடுகளான அமெரிக்காவும் தென்கொரியாவும் இணைந்து தங்களுடைய இராணுவ பலத்தைக் காட்டும் விதமாக கடற்படை போர் ஒத்திகையை நடத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## மூர்சிக்கு எதிரான போராட்டம்; கடந்த வாரத்தில் 57 பேர் சாவு



கெய்ரோ, பெப்.5

எகிப்து ஜனாதிபதி முகமது முர்சிக்கு எதிராக இடம்பெற்ற ஆர்ப்பாட்டங்களின் போது ஏற்பட்ட வன்முறைகளில் கடந்த ஒரு வாரத்தில் மட்டும் 57 பேர் உயிரிழந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் கெய்ரோவில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதை அடுத்தே இந்த உயிரிழப்பு எண்ணிக்கை 57ஐ எட்டியுள்ளது.

எகிப்து ஜனாதிபதியாக முர்சி பதவியேற்ற 7 மாதங்களுக்குள், அதிக உயிரிழப்புக் கள் ஏற்பட்ட வாரமாக கடந்த வாரம் பதிவாகியுள்ளது. கடந்த ஜனவரி 24ஆம் திகதி முதல் முர்சிக்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் தீவிரமடைந்தன.

எகிப்தில் எதிர்வரும் ஜூன் மாதம் பொதுத்தேர்தல் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. தொடரும் பதற்றம் கருதி சுயெஸ் கால்வாய் அருகில் இருக்கும் எகிப்தின் மூன்று நகரங்களில் அவசர நிலைப்பிரகடனம் தொடர்ந்து நடைமுறையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற)

## அமெரிக்காவில் விபத்து 8 பேர் சாவு; 10 பேர் காயம்

கலிபோர்னியா, பெப்.5

அமெரிக்காவின் தெற்கு கலிபோர்னியாவில் இடம்பெற்ற வாகன விபத்தில் 8 பேர் உயிரிழந்தனர். 10 பேர் படுகாயமடைந்தனர்.

தெற்கு கலிபோர்னியாவின் மலைப்பகுதி வீதியிலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. சுற்றுலாப் பயணிகளை ஏற்றிவந்த பஸ் எதிரே வந்த டிரக்குடன் நேருக்கு நேர் மோதியது. அதில் சம்பவ இடத்திலேயே 8 பேர் உயிரிழந்தனர். 10 இற்கு மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

விசாரணைகள் நடைபெற்று வருவதாகவும், விபத்துக்கான காரணம் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.(ற)

## யுரேனியம் செறிவூட்டல் தொடர்பாக ஈரானை பேச்சுக்கு அழைக்கிறது அமெ.

முனிச், பெப்.5

யுரேனியம் செறிவூட்டல் தொடர்பாக அமெரிக்காவுடன் நேரடியாகப் பேசுமாறு ஈரானுக்கு அழைப்பு விடுத்துள்ளது அமெரிக்கா. அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோபிடனே இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

ஈரான் அணு ஆயுதம் தயாரிப்பதாகக் குற்றஞ் சுமத்தப்படும் நிலையில், ஆக்கபூர்வ பணிகளுக்காகவே யுரேனியம் செறிவூட்டப்படுவதாக ஈரான் கூறுகிறது.

ஆனால் அமெரிக்கா, இஸ்ரேல் மற்றும் ஐரோப்பிய நாடுகள் தொடர்ந்தும் ஈரான் அணு ஆயுதத் தயாரிப்புகளில் ஈடுபட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டி வருகின்றன.

இந்த விவரம் தொடர்பாகத் தற்போது ஐ.நாவின் தேசிய அணுசக்தி நிபுணர் குழு ஈரான் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி வருகின்றது.

இந்தநிலையிலேயே அமெரிக்க துணை ஜனாதிபதி ஜோ பிடேன் ஈரானுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில்:-

யுரேனியம் எரியூட்டுவதை ஆக்கபூர்வ பணிக்கு மட்டுமே பயன்படுத்துவதாக ஈரான் கூறுகிறது. ஆனால் அதற்கு தகுந்த உத்தரவாதம் அளிக்க முடியாதுள்ளதால் கடுமையான பொருளாதாரத் தடையை சந்திக்கிறது. மக்கள் பொருளாதார நெருக்கடியின் பிடியில் சிக்குவதையும், உலக அரங்கிலிருந்து விலக்கப்



படுவதையும் ஈரான் தலைவர்கள் தடுக்கத் தயாராக இல்லை. இப்போது கூட பிரச்சினைக்குத் தீர்வு காண வாய்ப்பு இருக்கிறது. ஈரானுடன் அமெரிக்கா நேரடியாக பேச்சு நடத்தத் தயாராக இருக்கிறது- என்று தெரிவித்துள்ளார். (ற)


முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

வேலாயுதம் ஸ்ரீஸ்கந்தராஜா



அன்னைமடியில் 20.07.1964

இறைவன் அடியில் 18.01.2012

எம் குடும்பத்தின் ஆலமரமே!
உம் விழுதுகளான எமையெல்லாம்
வாழவைத்து விட்டு
நீர் மட்டும் சாய்ந்து விட்டீரே!
ஆண்டொன்று ஆனாலென்ன!
நெஞ்சைவிட்டகலா உம் நினைவுகளால்
ஆறவில்லை எம் ஈரவிழிகள்!!!

இன்று(05.02.2013) செவ்வாய்க்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக்காய் பிரார்த்திக்கும்
குடும்பத்தினர்.

'ஸ்ரீமகால்'
தும்பளை கிழக்கு,
பருத்தித்துறை.
தொ.பே.: 021 226 3909

(27722)(5,6,7)

# உயர் மனிதனை உருவாக்கும் குணங்கள்

(12)

ஆனால் தினமும், அதுபற்றிக் குறைபட்டுக் கொண்டிருந்தார். ''சனியன்! இதை விட்டு'விலகினால்தான் விமோசனமுண்டு!'' என்று கூறுவாரே தவிர, துணிந்து வேறு ஒன்றில் இறங்கத் தைரியம் இல்லை. யாரோ ஒருவர் இவருக்காகப் பாடுபட்டு முயற்சி எடுத்து இவரை வேறு ஒரு நல்ல வேலையில் உட்கார வைப்பார் என்று நம்பிக்கொண்டு இவர் காலத்தை ஓட்டுவது போல் தோன்றும். அவ்வளவுதான். முணுமுணுத்தபடியே காலத்தை ஓட்டி ரிட்டையரும் ஆகிவிட்டார். மாட்டிக் கொண்ட வேலை அவர் வாழ்வை நிர்ணயித்தது.

எமது எதிர்காலத்தை நாம் தான் உருவாக்குகிறோம். நாம் துணிந்து ஒரு முடிவு எடுத்து இறங்கினால்தான் விடயங்கள் நாம் விரும்புகிற மாதிரிப் போகும். நாம் விரும்புகிற மாதிரி இன்று போகாவிட்டாலும், எமது வாழ்வை நிர்மாணிக்கும் ஒரு முயற்சி, ஒரு சக்தி, நம்முடையதாக இருக்கும். தவறுகளை யோசித்துத் திருத்திக் கொண்டு மீண்டும் முயன்றால் நல்ல பலன் ஒருநாள் விளையும்.

உலகில் பலர், எதிர்பாராத சந்தர்ப்பங்கள் எமது மடியில் மந்திரத்தில் மாம்பழங்கள் உதிர்வது போல் உதிரும் என்று எண்ணிக்கொண்டு வாழ்நாளைக் கடத்துகின்றனர். காதல் மணம்தான் நல்லது என்று நம்பினால் போதாது. உலகில் இருக்கும் பல பெண்களுக்கும் அது தெரிந்துதான் இருக்கிறது. ஆனால் தாங்களாகவே எம்மை வந்து காதலிக்கத் தொடங்க மாட்டார்கள். நாம் தான் துணிந்து, தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அணுக வேண்டும்.

இந்தப் பெண், எமது பெற்றோர் தேடித் தரும் வாழ்க்கைத் துணையைவிட நல்ல பெண்ணாக இருக்கலாம் அல்லது இல்லாமலும் போகலாம் என்று விளைவுகளை அறிந்து நெருங்க வேண்டும். அந்த நெருக்கம் வளரலாம் அல்லது குறையலாம். மனம் உடையலாம். ரிஸ்க் எடுக்கத்தான் வேண்டும்.

'முயற்சித்தால் என்னால் முடியும்' என்று சிலர் பேசுவதைக் கேட்டிருக்கிறோம். இவர்களை யார் 'முயற்சிக்க' வேண்டாம் என்று சொன்னார்கள்? தங்களது துணிவின்மைக்கு- கையாலாகாத்தனத்துக்கு மனிதர்கள் கட்டும் சப்பைக்கட்டு இருக்கிறதே ஏராளம். சப்பைக்கட்டும், சமாதானமும் எமது துணிவின் மண்டையிலடிக்கிறது; எமது உழைப்பை முடக்குகிறது.

மூட நம்பிக்கைகள் நாம் துணிவுடன் இறங்குவதை 'ரிஸ்க்' எடுப்பதைத் தடை செய்கின்றன. பெரிய பதவி வந்த போதும் அதைக் கண்டு ஒரு மனிதன் அஞ்சுகிறான். அந்தப் பதவி தன் குறைகளை எங்கே காட்டிக் கொடுத்து விடுமோ என்று பயப்படுகிறான்.

இதைச் செய்தால் அப்பாவுக்குப் பிடிக்காதோ? அவருடைய அன்பை இழந்து விடுவோமோ என்று அஞ்சும் குழந்தை, சுதந்திர உணர்வு அதிகம் இல்லாத குழந்தையாகத்தான் வளரும். தமிழ்ச் சமுதாயம் ஒரு சார்ந்து நிற்கும் சமுதாயமாக இன்று இருக்கிற காரணத்தால்தான் அது முன்னேறவில்லை. மாநில அரசு எதற்கும் மத்திய அரசை எதிர்பார்க்கும் மனோபாவம். அமைச்சர்கள் எதற்கும் முதல்வரை எதிர்பார்க்கும் மனோபாவம். இருக்கிற நிதி வசதிகளை வைத்துக்கொண்டு துணிந்து நாமே காரியங்களைச் செய்யவில்லையானால், இருக்கிற அதிகாரங்களைப் பயன்படுத்தி நமக்குட்பட்ட முடிவுகளை நாமே எடுக்கவில்லையானால் எங்கே நாடு முன்னேறும்? ''தேங்கிக் கிடந்த குட்டை நாற்றமெடுத்து விடும்'' என்றான் ஓர் அரேபிய அறிஞன்.

**''தம்பி! ஊருக்குப் புதுசு!''**

மருந்து சாப்பிடப் பயந்தால் நோய் எப்படிக் குணமாகும்? மருந்து கசக்கக் கூடும். மருந்தின் விலை அதிகமாயிருக்கலாம். ''நோயுடன் வாழக் கற்றுக் கொண்டுவிட்டேன்'' என்று பலர் எம்மிடையே கபம் கட்டி இருமிக்கொண்டிருக்கிறார்கள்; தலை குனிந்து நடக்கிறார்கள்.

துணிந்து முடிவெடுக்கத் தைரியமின்றி காரியங்களை ஒத்திப் போடுவதால் சுமைகள் தான் அதிகமாகின்றன. ஒத்திப்போடுவதன் மூலம் நாம் எமது பொறுப்பிலிருந்து தப்பிக்க முடியாது. எமது பொறுப்புக்களை நாம் என்றாவது சந்தித்தாக வேண்டும்.

யோசித்து எண்ணி முடிவெடுப்பதற்கும் பலன்களை எண்ணி அதைப் பரிசோதித்து முடிவெடுப்பதற்கும் இடையே ஒரு தராசு முனை இருக்கிறது. அந்த உறவை உணர்ந்து, நல்ல பலனை எதிர்பார்த்து, சரியான சமயத்தில் காரியத்தில் இறங்க வேண்டும்.

குதிரைப் பந்தயம், பிரதேச லொட்டரி என்று பலர் துணிந்து நூறு ஆயிரம் என்று பணத்தைப் போடுகிறார்கள். வாழ்வில் வெற்றி பெற்றவர்கள் இப்படிச் சூதாடுவதில்லை. காரணம், அந்தச் செயல்களில் அடிப்படை நியாயம் இருப்பதில்லை. நாம் பெறும் பணம் பொதுவாக உழைப்பின் ஈடாக இருக்க வேண்டும்; இதுதான் உலக நியதி.

இந்த உலக நியதிக்கெதிராக இருக்கும் நம்பிக்கைகள், செய்யும் யாவும் நிரந்தரமான பலனைப் பொதுவாகத் தருவதில்லை.

ஒரு காரியத்தில் இறங்கும்போது, ''இதில் நஷ்டம் எத்தனை சதம்?'' என்று நாம் கணக்கிடக் கற்றுக்கொள்ள வேண்டும். நாம் வெற்றிபெறும் வாய்ப்பு எத்தனை சதம் என்பதைக் கணிக்க நாம் கற்றுக்கொள்ள வேண்டும். ''தொழிலில் வெற்றிபெற்றவர்களெல்லாம், எங்கே வெற்றி வாய்ப்பு அதிகமாயிருக்கிறதோ-மிக அதிகமாக இருக்கிறதோ- அந்தச் சந்தர்ப்பங்களைத் தான் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதுதான் அவர்களது வெற்றியின் ரகசியம் என்று ஹாவார்ட் பல்கலைக்கழக ஆராய்ச்சி ஒன்று கூறுகிறது. ''வந்தால் வரட்டும் போனால் போகட்டும்!'' என்று சிலர் பேசுகிறார்கள்.

அந்த மனோபாவமே தவறு. வெற்றிபெறும் வாய்ப்பு மிகக் குறைவாக இருக்கும்போது பணத்தை அத்தகைய தொழில் அல்லது வியாபாரத்தில் போடாமல் கடலில் கொண்டு கொட்டுவது கூட நல்லது. என்றாவது அது கரையில் சேர்ந்து வேறு யாருக்காவது உபயோகப்படக் கூடும்!

***எம்.எஸ்.உதயமூர்த்தி*** **(தொடரும்)**

# மாணவர் இளவயதிலிருந்து பெறும் பயிற்சி வாழ்நாள் முழுவதும் பயன் தரக்கூடியது

## டிறிபேக் விளையாட்டு போட்டி நிகழ்வில் பணிப்பாளர்

தென்மராட்சி,பெப்.5

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் நாளாந்த பயிற்சிகள் மனிதனை சுகதேகியாக வாழவைக்கக் கூடியவை. இளவயதிலிருந்து பெறப்படும் பயிற்சி வாழ்நாள் முழுவதும் பயன்தரக்கூடியதாக அமையும். அதற்காகவே முன் பள்ளிப் பருவத்திலிருந்து மாணவர்களுக்கிடையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் சிறந்து விளங்கும் மாணவர்கள் வலய, மாவட்ட, மாகாண, தேசிய மட்டங்களில் பங்குபற்றும் வாய்ப்பைப் பெறுகிறார்கள்.

இவ்வாறான போட்டிகளிலும் பயிற்சிகளிலும் சிறந்து விளங்குபவர்கள் ஆசிய விளையாட்டுப் போட்டிகள் மற்றும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் போன்றவற்றில் பங்குபற்றி தமது திறமைகளை வெளிப்படுத்துகின்றதை காண்கின்றோம் என்று தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தெரிவித்தார்.


சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி இல்ல மெய்வன்மைப் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே கிருஷ்ணகுமார் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்த விளையாட்டுப் போட்டியில் கல்லூரியினுடைய அதிபர், ஆசிரியர்களின் கடின உழைப்பை வெளிப்படுத்தும் வகையில் போட்டி நிகழ்வுகள் ஆரம்பம் தொடக்கம் முடிவுவரை மிகவும் ஒழுங்காகவும் நேர்த்தியாகவும் அமைந்தது பாராட்டக் கூடிய விடயம்.

138 வருடங்களைப் பூர்த்தி செய்துள்ள இந்தக் கல்லூரியை தென்மராட்சியில் முதன்மைக் கல்லூரியாக்க மாணவர்கள் பாடுபட வேண்டும் என்று அதிபர் கூறினார். இந்த மாணவர்களின் விளையாட்டுத் திறனைப் பார்க்கும் போது எனது சேவைக் காலப் பகுதியிலேயே இந்தக் கல்லூரி பிரதேசத்தின் முதன்மைப் பாடசாலையாகத் திகழும் என்பது எனது நம்பிக்கை. அதிபரின் கூற்று ஓர் அடித்தளமாக அமையட்டும். -என்றார்.

(எ-9)



தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசாவின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஊர்காவற்றுறை புளியங்கூடல் 3 ஆம் வட்டாரத்திலுள்ள சின்னமடு மாதா கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு அண்மையில் கணினி வழங்கப்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இளைஞர் அணித் தலைவர் பா.கஜதீபன் அதனை வழங்குகின்றார். (எ-4)

# இடர்களில் இருந்து எம்மையும் சமூகத்தையும் பாதுகாக்க வேண்டும்

## சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் உரை

தென்மராட்சி ,பெப்.5

இடர் என்பது எப்போது வரும் என்பதை எவரும் அறிந்திருக்க முடியாது. எமது பிரதேசத்தில்தினமும் இடர்கள் நடைபெறுவதை நாம் பத்திரிகைகள் வாயிலாக அறிய முடிகிறது.இதனை எதிர்கொள்ள நாம் தயாராகி எம்மையும், சமூகத்தையும் பாதுகாக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவனத்தினர் சமூக இசைவான கல்வி என்னும் நிகழ்ச்சித் திட்டத்தை உருவாக்கி மாணவர்கள் ஊடாக சமூகத்திற்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் செயற்றிட்டத்தை உருவாக்கியுள்ளோம்.

ஜேர்மன் தொழில்நுட்ப வலய நிறுவன வடமாகாண இணைப்பாளர் வி.இராசையா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இடர் பாதுகாப்பு கல்வி தொடர்பாக நடத்தப்பட்ட வினாவிடைப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் அண்மையில் நடைபெற்றது. தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே வி.இராசையா இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மாணவர்களுக்கு பரீட்சை என்பதும் இடர் போன்றது தான். அதற்கு சிறப்பாக முகம் கொடுத்து பாதுகாத்துக் கொள்பவரே அதிக புள்ளிகளைப் பெற்று சித்தியடைகின்றார். அந்த வகையில் பாடத்திட்டத்துக்கு புறம்பாக நடத்தப்பட்ட இடர் பாதுகாப்பு கல்வியை சிறப்புறக் கற்று பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை இந்த வேளையில் நான் பாராட்டுகின்றேன்.

இயற்கை இடர்களால் உலக நாடுகளில் மக்களுக்கு ஏற்படும் பாதிப்புகளை நாம் அடிக்கடி ஊடகங்களில் பார்க்கிறோம். சுனாமி இலங்கையில் ஏற்பட்ட போது பாதிக்கப்பட்ட பிரதேசங்களைவிட பாதிக்கப்படாத பிரதேசங்களைச் சேர்ந்த மக்கள் பெரும் அவலங்களுக்கு உள்ளானார்கள்.

இன்றும் கூட சுனாமி மற்றும் இயற்கை அழிவு தொடர்பான எச்சரிக்கை விடப்படும் பொழுது மக்கள் படும் அவலங்கள் சொல்லுந்தரமன்று. இவற்றைத் தவிர்க்க எமது நிறுவனத்தினர் மாணவர்களுக்கு இடர் பாதுகாப்பு கல்வி நிகழ்ச்சித் திட்டம் தொடர்பான பயிற்சிகளை பரீட்சைக்கு தயார் செய்யும் விதத்தில் பல்வேறு வடிவங்களில் வழங்கி தயார்ப்படுத்தி வருகின்றனர்.

இடர் தொடர்பான நிகழ்ச்சித் திட்டங்களை, அரசும் அரச சார்பற்ற நிறுவனங்களும் பல நிலையங்களை அமைத்து மக்களுக்கு இடர் பாதுகாப்பு செயற்பாடுகளை வலியுறுத்தி வருகின்றன. வட மாகாணத்தில் உள்ள 12 கல்வி வலயங்களிலும் இந்த நிகழ்ச்சித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதால் இது 2015 ஆம் ஆண்டில் சிறந்த பயனுள்ள நிகழ்ச்சித்திட்டமாக மாறும் என்பதில் ஐயமில்லை-என்றார். (எ-9)

# விஞ்ஞானப் போட்டிகள்; எழுத்துப் பரீட்சை 8 இல்

யாழ்ப்பாணம்,பெப்.5

யாழ்ப்பாண விஞ்ஞான சங்கத்தால் வடமாகாண பாடசாலைகளுக்கிடையே ''சமூக வலுவூட்டலுக்கான கல்வி'' எனும் தொனிப்பொருளிலான விஞ்ஞானப் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

இதற்கமைவாக வினாவிடைப் போட்டிக்கான எழுத்துப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை, மானிப்பாய் ஆசிரியர் பயிற்சி நிலையம், புலோலி ஆசிரியர் பயிற்சி நிலையம், முல்லைத்தீவு மகா வித்தியாலயம் ஆகிய இடங்களிலும் அதனைத் தொடர்ந்து அதே இடங்களில் நண்பகல் 12.15 மணிக்கு கட்டுரைப் போட்டியும் நடைபெறும்.

விவரணப் போட்டி எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீட கணினி விஞ்ஞானத் துறையிலும், பேச்சுப்போட்டி எதிர்வரும் 15 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட அலகு ஆங்கில மொழி கற்கைகள் பிரிவிலும், பாடசாலை தோட்டப் போட்டி எதிர்வரும் 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை விண்ணப்பிக்கப்பட்ட பாடசாலைகளிலும், கண்காட்சிப் போட்டி எதிர்வரும் மார்ச் மாதம் 4 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரி விசாலாட்சி மண்டபத்திலும் நடைபெறவுள்ளன. (எ-14)

**உதயன்** தொடர்புகளுக்கு

**தலைமையகம்:**
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
**தொலைநகல்**
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731
**மின் அஞ்சல்**
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சதா பொன்ஸ்' - மாலு சந்தி, அல்வாய் : 021 226 3206, 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' - பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை சுஜானன்' - கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' - தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' - பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' - மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' - முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' - சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சஹாரா ரவல்ஸ்' - 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311


## வித்தை காட்டும் வேலிகள்!

யாழ்ப்பாணத்தவர்களிடத்தே தனித்துவமான ஏராளமான குணவியல்புகள் உள்ளன. அதிலும் அடுத்தவனின் காணியை யாருக்கும் தெரியாமல் மிக இலகுவாக அப்படியே விழுங்குவதற்கு உலகத்தவர் எல்லோரும் யாழ்ப்பாணத்தவரிடம் சிறப்புப் பயிற்சி எடுக்க வேண்டும். அந்தளவுக்கு எல்லை தாண்டி காணி பிடிப்பதில் விண்ணர்கள்.

யாழ்ப்பாணத்தவர்களின் காணி பிடிக்கும் உத்தி புதுமையானது. சந்திரனும், நந்தனும் அருகருகே அமைந்துள்ள காணிகளை வாங்கினார்கள். ஆரம்பத்தில் நில அளவையாளர் சொன்னபடி இரு காணிக்காரர்களும் கிளுவங் கதியால் வேலி போட்டு பக்குவமாகவே நடந்து கொண்டார்கள். நந்தனின் காணியில் ஒரு விளாத்தி மரம் நின்றது. ஆனால் ஆறு மாதத்தில் அந்த மரம் சந்திரனின் காணிக்குள் போய்விட்டது. மரம் தானாகவே சந்திரனின் காணிக்குள் ஓடிச்சென்று 'அரசியல் புகலிடம்' கோருவதற்கு சாத்தியமில்லை. அப்படியானால் எப்படி இந்த அதிசயம் நிகழ்ந்தது?

சந்திரனின் வேலி அடைப்புத்தான் இந்த அதிசயத்தை நடத்தியது. ஒவ்வொரு முறையும் கதியால் போடும் போது சந்திரன் , மெல்ல மெல்ல நந்தனின் காணிப்பக்கமாக வேலியை நகர்த்தி நகர்த்தி, கடைசியில் விளாத்திவரை பிடித்து விட்டான்.

நந்தன் துள்ளிக் குதித்தான். ''ஐயோ! கொள்ளையில போவான். என்ர காணியை அடாத்தா பிடிச்சுப் போட்டான்'' என்று சுவக்குரலிட்டான். ஆனால் சந்திரன் கிறுங்கவில்லை. ''அவன்ர விளாத்தி என்ர காணிக்க எப்பிடி வந்தது எண்டு எனக்குத் தெரியாது. ஆனால் நான் ஒருத்தற்ற காணியையும் அடாத்தா பிடிக்கேலை. வேணுமெண்டா புறொக்றர சுட்டிக் கொண்டு வந்து அளவுங்கோ'' என்று ஒரே பிடியாக நின்றான்.

புறொக்ரர் வந்து ஒன்றுக்கு மூன்று முறை அளந்தார். அவருக்கு ஆச்சரியம் தாங்க முடியவில்லை. ஏனென்றால் அவர் முன்னர் அளக்கும் போது விளாத்தி மரம் நந்தனின் காணிக்குள் நின்றது. ஆனால் இப்போதோ அது சந்திரனின் காணிக்குள். என்றாலும் நந்தனின் காணியின் ஓர் இஞ்சி கூட குறையவில்லை. இந்த மர்மம் பிடிபடாமல் அந்தக் காணியை திரும்பத் திரும்ப அளந்தது புறொக்ரருக்கு பைத்தியமே பிடித்து விட்டது. சந்திரன் அடாத்தாகக் காணியை பிடிக்கவில்லை என்று முடிவானது.

அப்படியானால் உண்மையில் என்ன நடந்தது? சந்திரன் ஒவ்வொரு முறையும் எந்தளவுக்கு வேலியை நகர்த்தினானோ, அதே அளவுக்கு நந்தனும் தனக்கு பக்கத்தில் உள்ள இன்னொருவரின் காணிக்குள் தன்னுடைய வேலியை முன்னகரச் செய்து கொண்டிருந்தான். விளாத்தி இடம்மாறியும் காணியின் அளவு மாறாத இரகசியம் இதுதான்.

யாழ்ப்பாணத்தவர்களுக்கு எங்கள் மண்ணின் சுவாத்தியத்தாலேயே இந்த வேலியை முன்னகர்த்தி காணி பிடிக்கும் வல்லமை வாய்த்திருக்க வேண்டும். இப்போது இந்தச் சுவாத்தியம் நீண்ட காலமாக முகாமிட்டிருக்கும் படைத்தரப்புக்கும் சுவறிவிட்டது போலும். அதனால் தான் யாழ்ப்பாணத்தவர்களின் பிறவிக்குணங்களில் ஒன்றான வேலியை முன்னகர்த்தும் பழக்கம் அவர்களுக்கும் வந்துவிட்டது. பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் இரு தசாப்தங்களுக்கும் மேலாக அபகரித்து வைத்திருக்கும் வலி.வடக்கு காணிகளின் முன்பக்க வேலியை படைத்தரப்பு சற்று முன்னகர்த்தி இருக்கின்றது. வேலிபோட்டே காணிபிடிக்கும் யாழ்ப்பாணத்தவர்களுக்கே வித்தை காட்ட படைத்தரப்பு நினைத்திருக்க வேண்டும். ஆனால் இந்த பருப்பெல்லாம் வேகவில்லை. வேலி முன்னால் வந்தவுடனேயே எதிர்ப்புக் காட்டத் தொடங்கி விட்டார்கள் மக்கள். ஏற்கனவே பாதுகாப்பு என்ற போர்வைக்குள் ஒளிந்திருந்து கொண்டு சுண்ணக்கல்லை சுரண்டி எடுத்தல், காங்கேசன் துறை தொழிற்சாலை இரும்புகளை தென்னிலங்கைக்கு அனுப்புதல், ஜோக்கட் தொழிற்சாலை நிறுவுதல், ஏக்கர் கணக்கில் காணிகளில் மரக்கறி பயிரிடுதல் என்று தமக்கு சம்பந்தமே இல்லாத என்னென்னவோ வேலைகளிலெல்லாம் படையினர் ஈடுபடுகின்றனர். மக்கள் எதிர்ப்புக்காட்டியிராவிட்டால் இன்னும் கொஞ்சக் காலத்தில் வலி.வடக்கில் முன்னகரத் தொடங்கிய வேலி யாழ்ப்பாணக் கோட்டை வரை வந்திருக்கும். நல்லவேளை, முளையிலேயே கண்டு பிடித்துவிட்டதால் நிறையக் காணிகள் தப்பித்துவிட்டன.

# குற்றப்பிரேரணை முன்னகர்த்திய பலருக்கும் பரிசு மழை

## இந்தியா சென்ற ஜி.எல்.பீரிஸ் வெறுங்கையுடன் திரும்பினார்

*சண்டே ரைம்ஸ் அரசியல் கட்டுரையில் இருந்து*
*■ கோகுலன்*

இரண்டு பிரதம நீதியரசர்கள் ஒரே சமயத்தில் பதவியிலிருக்கும் உலக சாதனையைக்கண்ட இலங்கை மக்கள் இன்னுமொரு உலக சாதனையைக் கடந்த திங்கட்கிழமை கண்டார்கள்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசை ஆதரித்துள்ள அநேகமான எல்லா நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றில் அமைச்சர் அவை உறுப்பினராக, அல்லது சாதாரண அமைச்சராக நியமனம் பெற்றிருக்கிறார்கள்.

அமைச்சரவையின் உறுப்பினர்களை 65 ஆகவும் பிரதி அமைச்சர்களை 29 ஆகவும் அதிகரித்தமைக்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. கடந்த ஒரு வருடகாலமாக ஊடகங்கள் அமைச்சரவை மாற்றம் பற்றி எதிர்வு கூறி வந்துள்ளன. தப்புச் செய்தவர்கள் அல்லது முக்கிய பிரச்சினைகளைக் கையாள முடியாதவர்கள் நீக்கப்பட்டு புதியவர்கள் நியமிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. அதன்மூலம் மக்களுக்குச் சிறந்த சேவை கிடைக்கும்படி செய்யப்படும் என்று நம்பப்பட்டது.

பல்கலைக்கழகம் தொடர்பான இஸற் புள்ளி மதிப்பீட்டுப் பிரச்சினையில் ஆயிரக்கணக்கான பெற்றோரும் மாணவர்களும் சட்டபரிகாரம் தேடி நீதிமன்றங்களை நாடும்படி நேர்ந்திருந்தது. கல்வியியலாளர்கள், பல்கலைக்கழங்களைப் புறக்கணித்துப் போராடியதால் பல்கலைக்கழகங்கள் மூடப்பட வேண்டிய நிலை ஏற்பட்டிருந்தது. ஒவ்வொரு இலங்கையனுக்கும் வாழ்வாதாரத்துக்கு மிக முக்கியமான நுகர்வுப் பொருள்களின் விலைகள் அதிஉச்சத்தைத் தொட்டதும் இன்னொரு விடயமாகும். இலங்கையின் பெயரைத் தாங்கிக்கொண்டு செயற்கைக் கோள் ஒன்று விண்ணிற் பாய்ந்து சென்றது போல் விலைவாசிகளும் எட்டமுடியாத உச்சத்தை நோக்கி எகிறியிருக்கின்றன. இது மத்தியதர மற்றும் கீழ்நிலை மக்களின் வாழ்க்கையைப் பெரிதும் பாதித்திருந்தது.

இரண்டு ஆண்டுகளுக்கு முன் இராணுவ அதிகாரிகளும், சீருடை அணிந்தவர்களும் கூட கொழும்பு பெருநகர்ப் பகுதிகளில் கடைகளைத் திறந்து மரக்கறிகளைச் சகாய விலைகளில் வழங்கினார்கள். அவைகளைத் தாம் உற்பத்தி மூலங்களிலிருந்து வாங்கிவந்ததாகக் கூறிக் கொண்டார்கள். அதனால் விலைகள் பிரதானமாக உயரும் தறுவாய்களிலும் குறைந்த விலைகளில் விற்கக் கூடியதாக இருந்தது. இந்த முறை அவர்களாலும் ஒன்றும் செய்ய முடியாமற் போயுள்ளது.

அண்மைக் காலங்களில் கொள்முதல் முறைகளில் நுகர்வோர் மத்தியில் வித்தியாசமான கொள்முதல் முறைகளைக் காணக்கூடியதாக இருக்கிறது என்று மரக்கறி மற்றும் மீன் விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றார்கள்.

ஒரு காலத்தில் ஒரு கிலோ இரண்டு கிலோ என்று கொள்முதல் செய்த நாகரிக உடைகளில் கழுத்துப் பட்டிகளுடன் வந்தவர்கள் எல்லாம் இப்போது 200 அல்லது 300 கிராம் என்று பொருள்களை வாங்கும் நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டார்கள் என்கின்றனர் வியாபாரிகள். மின்சாரம், எரிபொருள் மற்றும் பொருள்களுடன் சேவை வழங்குதல் போன்றவையும் விலை அதிகரிக்குமானால் இந்த மக்களின் நிலை எப்படி இருக்கும் என்று எண்ணிப் பார்க்க முடியாமல் இருக்கின்றது.

அதேசமயம் ஊழல்கள் அதிகரித்துக்கொண்டு போகும் நிலையில் சில உயர்மட்ட நிலையிலுள்ளவர்களுக்கு வாழ்க்கை இப்போது போல் வேறு எப்போதுமே இருந்ததில்லை என்று கூறப்படுகின்றது. அருமையான உணவுச்சாலைகள் இப்போது காளான்கள் போல் ஏராளமாக முளைத்துக்கொண்டு இருக்கின்றன. பலவிதமான சொகுசுக் கார்கள் - இவைகளில் சிலவற்றின் என்ஜின்கள் முன்பு தடை செய்யப்பட்டிருந்தாலும் இப்போது வீதிப் பயணங்களில் நீண்ட வரிசைகளில் காணக்கூடியதாக இருக்கிறது. கசினோ மற்றும் சூதாட்ட நிலையங்கள் சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டு இருக்கின்றன. இவைகளில் வெளிநாட்டவர்கள் பெரிதும் கவரப்பட்டு முதலீடுகளைச் செய்கின்றார்கள்.

அமைச்சரவை மாற்றத்துக்கான முக்கிய காரணங்களின் உச்சமாக இருப்பது நன்றி தெரிவித்துக் கொள்ளும் அம்சமாகத் தெரிகின்றது. பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்க மீதான குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்குத் தலைமை வகித்தவரான அனுர பிரியதர்சன யாப்பா பெற்றோலியத் தொழில் தொடர்பான மிக நல்ல அமைச்சுப் பொறுப்பைப் பெற்றுள்ளார். யாப்பா முன்னர் அவ்வளவு முக்கியமில்லாத சுற்றாடல் அபிவிருத்தித் துறையையே கவனிக்கும் அமைச்சராக இருந்துள்ளார். குற்றப் பிரேரணை முன்னெடுப்பில் முக்கியத்துவராய் இருந்துள்ள பவித்திரா வன்னியாராச்சியும் பரிசு பெற்றிருக்கிறார். பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப்பிரேரணை தயாரிக்கப்படுவதற்கு முன்னரே அரச தரப்பு உறுப்பினர்களின் கையெழுத்தைச் சேகரிப்பதில் இவரே முன்நின்று உழைத்தவர். அவருக்கு மின்சாரம் மற்றும் சக்தி அமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

### தண்டிக்கப்பட்ட அமைச்சர்கள்

வெகுமதி அளிக்கப்பட்ட அமைச்சர்களுடன் தண்டிக்கப்பட்ட அமைச்சர்களும் இருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் பாட்டலி சம்பிக்க ரணவக்க ஆவார். இவர் 3 ஆண்டு காலமாக மின்சாரம் மற்றும் சக்தி அமைச்சராகப் பதவி வகித்தவர். இன்னொருவர் சுசில் பிறேம ஜெயந்த. சுற்றாடல் மற்றும் மீள் பிறப்பாக்க சக்தி அமைச்சராக அவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியிடமிருந்து பதவியை ஏற்றுக்கொண்ட போது அவர் முகத்தில் அதிருப்தி நிறைந்து காணப்பட்டது. அவர் அமைச்சராக இருந்த காலத்தில்தான் பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஊழல் நிறைந்த ஸ்தாபனமாகப் பெயர் பெற்றிருந்தது. அந்த அமைச்சைச் சேர்ந்த சிலர் மீது எரிபொருள் கலப்படம் தொடர்பாக வழக்குகள் நடைபெற்று வருகின்றன.

இந்த நிறுவனத்தில் உயர் பதவிகளில் இருந்த பலர் மீது தொழிற் சங்கங்கள் பலத்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருந்தபோதும் நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

அமைச்சரவையை இப்பொழுது விரிவாக்கியிருப்பதன் இன்னொரு காரணம் ஏற்கனவே ராஜபக்ஷ தரப்பினருக்கு இருந்துவரும் பலமான அதிகாரக் கட்டுமானத்தை மேலும் ஒருங்கிணைத்துக் கொள்வதற்காகவே என்று கருதப்படுகின்றது. அதன் அடிப்படையில் புதியவர்களுக்குப் பயணப் போக்குவரத்துப் பாதுகாப்பு உட்பட ஏனைய வசதிவாய்ப்புகளும் செய்து கொடுக்கப்படவிருக்கின்றன. விசுவாசமாக உள்ளவர்கள் வெகுமதி அளிக்கப்படும். விசுவாசம் குறைந்தவர்கள் ஓரங்கட்டப்படுவார்கள் என்ற செய்தியை அது வழங்குவதாய் உள்ளது. அமைச்சரவை விஸ்தரிப்பைப் பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கவின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கண்டித்திருப்பதுடன் அவர் வெளியிட்ட அறிக்கையொன்றில் ஓர் அமைச்சரின் பராமரிப்புக்கான சராசரிச் செலவுகள் வருடத்துக்கு 100 மில்லியன் ரூபாவாக இருக்கும். இம்மாதிரிச் செலவுகளை எம்மால் சமாளித்துக்கொள்ள முடியுமா என்பது கேள்விக் குறியாகும் என்று தெரிவித்துள்ளார்.

### அமெரிக்காவை இந்தியா ஆதரிக்கும்?

அமெரிக்க நிலைப்பாடு தொடர்பாக ஏற்கனவே கலக்கத்திலிருக்கும் அரசுக்கு இந்தியா சென்று திரும்பிய வெளியுறவு அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கொண்டுவந்த செய்திகளும் மகிழ்ச்சியை அளிப்பதாக இல்லையென்று தெரிகின்றது. ஜெனிவாவில் நடைபெறவிருக்கும் மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தில் இந்தியா இலங்கையை ஆதரிக்கும் சாத்தியம் இருப்பதாகத் தெரியவில்லை என்று பீரிஸ் தெரிவித்திருப்பதாக நம்பகமான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. அவர்கள் சாதகமான எந்தவித கருத்தையும் வெளியிடவில்லை. அமெரிக்காவுடன் இந்தியா சேர்ந்து செயற்படும் சாத்தியம் இருப்பதாகவே தெரிகிறது என்று பீரிஸ் தெரிவித்திருக்கிறாராம்.

அமெரிக்க செனட்டர்களான றொபேர்ட் பி.கஸே மற்றும் பட்றிக் லீகி ஆகியவர்கள் அமெரிக்க ராஜாங்க அமைச்சருக்கு எழுதியுள்ள செய்திகளும் அரசுக்குத் தலையிடியை அதிகரிப்பதாகத் தெரிகின்றன.

இலங்கையில் நடைபெற்று முடிந்த போரின் இறுதிக் கட்ட நிகழ்வுகள் தொடர்பான பொறுப்புக் கூறும் விடயங்களில் சுயாதீனமான சர்வதேச விசாரணைக்கு கோரிக்கை முன்வைக்கும்படி அவர்கள் ராஜாங்க அமைச்சைக் கேட்டுள்ளார்கள். ★

# சபிக்கப்படும் தேவதைகள்...

> “முதல் நாள் பள்ளி வளாகத்தில் அம்மாவின் விரல்களை விடுவிக்க மறுத்து , அழுதழுது கரைந்து உருகும் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும், அவன் எதிர்காலத்துக்கும் சேர்த்து இழக்கப்படும் வசந்தத்தின் துளிகள் தானே?”

■ செந்தூரி

புண்ணியங்கள் யாவற்றிலும் கோடி இன்பம் தருவதாக, பாரதி சொல்லிச் சென்றது, “ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவிப்பதை” ஆகும் எழுத்தறிவிப்பதே இறைவனாகுவதற்கு இலகுவான வழி, என்று ஆன்ம ஈடேற்றத்துக்கான மக்கள் நேய வாசலைத் திறந்தே வைத்திருக்கின்றது தமிழ்மொழி. “எழுமைக்கும் ஏமாப்புடைத்து” என்பது பொய்யோ, மெய்யோ, கல்வி இம்மையை செம்மைப்படுத்தும் என்பதில் பகுத்தறிவாளர்களிடமும் மாற்றுக்கருத்தேதும் இருந்ததேயில்லை எப்போதும் “தை பிறந்தாலே பலபேருக்கு தலைவலி பிறக்கும்” விடயமாக மாறிவிட்ட “பாடசாலைகளுக்கான அனுமதி”, செல்வாங்கொழிக்கும் ‘கோப்பரேட்’ தொழிலாக மாற்றப்பட்டுள்ள கல்வித்தாபனங்கள் யாவற்றிலும், மரச்சட்டங்களினுள்ளும் காலப்புகை படிந்த கறைக் கண்ணாடிகளுக்குள்ளும் சிறைப்பட்டு சிரிக்கின்றார். சி.டப்ளியூ.டப்ளியூ.கன்னங்கரா. மாடிகளில் கட்டடங்களையும், ஓடிகளில் கலைத்திட்டங்களையும் முதலிட்டு நிற்கும் தனியார் பல்கலைக்கழகங்களுக்குள் தவறி’ விழத் தயாராகும் இலங்கைத்தீவு, இன்னமும் தன்னை இலவசக்கல்வியின் முன்னோடியாக பாவனை பண்ணியபடி தொடர்கின்றது.

‘தொற்றாத நோய்களின் ஆண்டாக’ வருடமொன்றைப் பிரகடனப்படுத்தி, தன் குடிகளின் உடல் ஆரோக்கியத்தில் காட்டத் தெரிந்த அக்கறையை, கேவலம் பாலர் பாடசாலைகளில்கூட வேரூன்றிவிட்ட ஊழலின் மீதும் , எதிர்காலத்தின் உளப்பண்பாட்டின் மீதும் செலுத்தத் தவறிவிட்டபோனும், அரசும் கெடுப்பாரின்றிக் கெடும் குடியன்றி வேறேது? கண்டும் காணாமலும் பாடசாலைகளுக்கான அபிவிருத்திக்கான திரள் காலத்தொகையாக அனுமதிக்கப்பட்டு வந்த புதிய அனுமதிகளுக்கான ‘பண- அன்பளிப்புகள்’ கட்டாயத்தின் பேரால் குடும்பமொன்றின் பொருளாதாரச் சாறு முழுவதையும் உறிஞ்சி சக்கை பிழியும் நிலைக்கு வரும். அதன் பின்னரே கல்வி அதிகார அமுலாக்க மட்டங்கள், பாதித்துயில் கலைந்து ஞானசௌந்தரி போல நடுக்காட்டில் விழித்தெழுந்து ‘யான் எங்குற்றேன்’ என்று சுற்று நிருபங்களால் பதை பதைத்தன. ‘வாங்குவதற்கான வாசல்கள்’ ஆயிரம் கண்ட அபூர்வ சிந்தாமணிகளாக தம்மைப் பணவூற்றுக்களில் ஊற்றித் திளைத்துக் கொண்ட பாடசாலை நிர்வாகிகள், இந்த வெற்றுக் காகித மிரட்டல்களால் ‘சூ’ காட்டப்படவில்லை என்பதே நடைமுறை உண்மை.

“இதையெல்லாம் எழுத மாட்டீர்களா?” என்று பற்றியெரிந்த உதரங்களுடன், பாதிக்கண் முட்ட நின்று புலம்பித் தீர்த்த முதலாம் தரப் பிள்ளைகளின் பெற்றோர்கள் பலரின் ஏக்கங்களே இவ்விடம் எழுத்தாகி நிற்பதால், இந்தக் கணம் வரைக்கும் பணத்துக்காக பச்சைப்பிள்ளைகளின் கல்வியுரிமையில் குண்டுமணியேனும் களங்கம் வராமல் காக்கும் அத்துணை அதிப- ஆசிரியத் தெய்வங்களும் , இங்கு கோர்க்கப்படும் அத்தனை வார்த்தைகளிலிருந்தும் விதி விலகி நிற்பதுடன், காலத்தால் ஆழ்ந்த ஞாலப்பெரும் நன்றிகளுக்கும் உரியவர்களே.

“ அதுதான் வலயத்திலை காசு குடுக்க வேண்டாம் எண்டு பேப்பர்ல எல்லாம் போட்டிருக்கே சேர்? பிறகேன் இவ்வளவு கேக்கிறியள்?” என்கின்ற சாரப்படும் அங்கலாய்ப்புக்களை, பக்கத்தில் பார்த்துக் கொண்டிருக்கும் நூற்றுக்கணக்கான ஏனைய பெற்றோர்களின் முன்னிலையில், இயலாமையின் குறைப் பிரசவ வார்த்தைகளால் மென்று துப்பும் எந்தவொரு தாய்க்கும், எந்தவொரு தந்தைக்கும் தெரியாத விடயங்கள் ஏராளம் ஏராளம். பற்றுச்சீட்டுப் புத்தகங்கள், அனுமதிக் கோவைகளுடன் அமர்ந்திருக்கும் ஆசிரியர்களுக்கோ அதிபர்களுக்கோ நிச்சயம் தெரிந்திருக்கும். ‘ தரம் ஒன்று முதல் பல்கலைக்கழக இளநிலைப்பட்டப்படிப்பு வரையான அண்ணளவான இருபது வருடங்களுக்கான இலங்கைப் பிள்ளையொன்றுக்கான கல்விச்செலவு சுமார் பூச்சியம்”, “ ஆண்டவன் சந்நிதிகளில் கூட இல்லாத சமத்துவம் பேணப்படும் இலவச சீருடை” ,“ கிராமப்புற மாணவர்களில் பலரை பாடசாலையை நோக்கி ‘ கள்ளூறும் மலர் ஈர்க்கும் வண்டாக” கவர்கின்ற இலவச மதிய உணவு’, “ கச்சான் கடலைச் சரைகளில் சாதாரணமாக காணக்கிடைக்கின்ற தாள்களை தானமாய் கொடுக்கின்ற இலவச பாடநூல்” போன்ற சமானியர்களுக்கும் தெரிந்த இலவசக்கல்வியின் உப மூலங்களின் ஒவ்வொரு அலகுக்கும் வரவு, செலவு தெரிந்தவர்களே அங்கு போடப்பட்டுள்ள அதிகாரக் கதிரைகளில் வீற்றிருப்பவர்கள்.

இதற்கு மேலதிகமாக தங்களுக்கு மட்டுமே இதெல்லாம் தெரியும் என்ற மனக்கணக்கில் அதிபர் அலுவலகத்தினுள்ளேயே முடித்து வைக்கப்படுகின்ற- அரச சலுகைகள் எவையென்று கொஞ்சம் பார்ப்போமே!

பாடசாலையிலுள்ள மாணவர் தொகை, பாடசாலையின் வகுப்பொழுங்கு முறை என்பனவற்றில் தங்கியுள்ள பெரிய முதலீடான ‘பாடசாலைகளுக்கான தர உள்ளீடு’, சகல பாடசாலைகளுக்கும் தேவைக்கு மேலதிகமாகவே பெய்கின்ற நுவரெலியா மழை போன்றது. “நிற்பதும் இல்லை- நிறைய பிரச்சினைகளும்” இரண்டுக்குமேயான பொதுப் பண்பு. “பாடசாலைகளுக்கான தர உள்ளீடு” எனும் நீள வாக்கியங்களுக்குள் பொதிந்திருப்பதும் ஒன்றும், அறப்படித்த பல்லிகளுக்கான பரம இரகசியமல்ல! ‘பணம்’ என்பதன் கௌரவ வேடமே இந்தத் தர உள்ளீடு. சாதாரணமாக அழிந்து போகின்ற ‘ வெண்கட்டி’ ‘பேப்பர்’, ‘ கோவைகளைக் கட்டும் இழைகள்’ தொடக்கம் , பரிசோதனைக் கூட ங்கான இரசாயன திரவியங்கள் வரையான பாவனையில் தேய்கின்ற பொருள்களுக்கான ஒதுக்கீடு தர உள்ளீடு மூலம் கிடைக்கின்ற முதலாவது வகையாகும். நிரந்தரமான பொருள்களான கணனி உதிரிப்பாகங்கள், ஆய்வு கூடச் சாதனங்கள், கற்பித்தல் துணைச் சாதனங்கள் போன்ற மூலப்பொருளுக்கான ஒதுக்கீடு தர உள்ளீடு மூலம் கிடைக்கின்ற இரண்டாவது வகையாகுவதுடன்,இம் மூலப்பொருள்களுக்கான திருத்தம், பராமரிப்பு, பிரதியீடு,மாற்றீடு போன்ற இற்றைப்படுத்தலுக்கான செலவுகள் தர உள்ளீட்டின் மூலமான மூன்றாவது வகை உள்வருமானமாகும். “நாடகம் பழக்கும் அண்ணாவியாரைக் கூப்பிடுதல்” ‘ஜாயமா சொல்லிக் கொடுக்கும் வேலையில்லாப் பட்டதாரியை அழைத்தல்”, அணிவகுப்பு வழங்குவதற்கு அயற் பாடசாலை ஆசிரியரை விடுமுறையின் போது அழைத்தல்” என பாடசாலைக்கு என ஒதுக்கிய ஆளணியிலிருந்து புறம்பான வெளிவாரி நிபுணத்துவ சேவையொன்றை மாணவர்களின் கற்றல் சம்பந்தமான நடவடிக்கைகளுக்காக பெற்றுக் கொள்வதற்கான செலவுகள் தர உள்ளீட்டின் மூலம் தயாரிக்கப்படும் நான்காவதும் இறுதியுமான வகையாகும்.

மேற்கூறிய நால்வகை கொள்வனவு மற்றும் பராமரிப்புக்கான கொடுக்கல் வாங்கல்கள் வலயக் கல்விப் பணிமனைகளூடாக பாடசாலைகளுக்கு வங்கி மூலமான காசு மற்று காசோலையாக்கப்பட்ட திரவ வழியாக திறந்து விடப்பட்டுள்ளமையுடன், இது தொடர்பான மேற்பார்வைப் பணிகளை மட்டுமே வலயங்களும், வலய மட்ட அதிகாரிகளும் மேற்கொள்வதுடன் ஏனைய அனைத்துப் பொறுப்புக்களும், பாடசாலை சார் ‘ அதிபர் அன்ட் ஆசிரியர் கம்பனிகளையே சாருகின்றன.

மேற்கூறிய கற்றல்- கற்பித்தல் இணைந்த பாட விதான செயற்பாடுகள் யாவற்றுக்குமான செலவுகள் “தர உள்ளீட்டுக்கான” பணமாக வழங்கப்படுவதற்கு மேலதிகமாக, பாடசாலைகளின் மின்சாரச் செலவுகள்- அதாவது ஆமிக்காரனின் வெசாக்கூட்டுக்கு ‘விளக்கேற்றிய பெருமான்களின்” கருணை உட்பட, இணையப்பாவனைக்கான, தொலைபேசிப் பாவனைக்கான தொடர்பாடல் செலவுகள், நீர்வரி உள்ளிட்ட இன்ன பிற அனுமதிக்கப்பட்ட அன்றாட செலவீனங்களுக்கான பண ஒதுக்கீடுகள் யாவையும் பாடசாலைகளுக்கு தனித்தனிப் பிரிவின் கீழ் வறுகி வழங்கப்படுகின்றன.

இவையனைத்துக்கும் மேலதிகமாக “இந்தக் கொண்டாட்டங்கள் எல்லாம் ஆர் செய்யிறது?” என்று ஓலம்பாடும் “ ஆதீனங்கள்”, பரிசளிப்புவிழா, விளையாட்டுப்போட்டி, கண்காட்சிகள், நத்தார்-ஒளிவிழா, சரஸ்வதி பூஜை என்று எந்தக் கருமம் தொடங்க முதலும் , ஆசிரியர்களில் அப்பாவிகள் ஐந்து பேரை வற்புறுத்தி தெரிவு செய்து கையிலே ஒரு இருபது பக்கக் கொப்பியைக் கொடுத்தனுப்பி பாடசாலை நேரத்திலும் கூட வீதி வீதியாய், கடை கடையாய், பெற்றோர், பழையமாணவர் உள்ளிட்ட வீடு வீடாய் , “ பணமாகவோ பொருளாகவோ” அருளி உதவுமாறு அனுப்பி விட்டு தங்கள் தங்கள் சிம்மாசனங்களில் அமர்ந்து கொள்வதே வாடிக்கை! புத்தக வெளியீடு, சஞ்சிகை வெளியீடு, நூற்றாண்டு விழா, முத்தமிழ் விழா போன்ற ‘ஐந்து சைபர்களில்’ எழுதி வாங்கும் நிகழ்வுகளின் போது, பாடசாலைகளின் ஆண்டவர்களே, மனிதவுருக் கொண்டு வீதிகளில் இறங்கி விடுவதும் உண்டு. இவ்வாறான மாதம் மும்மாரி பொழியும் அமோக விளைச்சலையும் மீறி, “ இந்தப் பாடசாலையை எனது சொந்தக் காசில் நடத்தினேன் அல்லது நடத்துகிறேன்” என்று எதிர்வாதம் புரியும் எலும்பு எந்தவொரு பாடசாலை நிர்வாகியின் நாக்குக்கும் தேவையேயில்லை இந்நாளில்.

பெருமழை பொழிந்த நாளில் குருவின் வயல் வரப்பினை அடைக்க முயன்று தன்னையே அணையாக கொடுத்து விடியும் வரை உடல் வாட்டும் குளிரிலும், மழையிலும் நனைந்து பணிவிடை செய்த குருகுல மாணவனுக்கு முற்றிலும் எதிர் மாறாக , ஒவ்வொரு நாளும் பாடசாலை முடிந்து போகும் போதும் ஒவ்வொரு நீர்க்குழாயாக முறித்து உடைத்து விட்டுப் போகும் கல்லூரிகளின் மாணவர்களை கேட்டுப்பாருங்கள்?

“ஏன் எங்கட காசில வாங்கினது தானே? ஒழுங்கா தண்ணியும் வாறேல்லை பிறகேன் சும்மா?” என்பான் திருப்பி. ‘எங்கட காசு தானே” அவன் பழகுகின்ற கூடாவொழுக்கமொன்றுக்கான நியாயப்படுத்தல் காரணத்தினைக் கொஞ்சம் பின்நோக்கிப் பார்த்தால் பொறுப்பில்லாதவனாக அந்த மாணவனை வளரவிடும் தவறு,“கைநீட்டிக் காசு வாங்கிய” குற்றத்தின் வார்ப்பில்லையா?

“ஏழே முக்கால் வரை வெங்காயத்துக்கு தண்ணீர் பாய்ச்சி விட்டு பாய்ந்தோடிப் பாடசாலை வருபவர்களாகவும், பின்னேரம் பாடசாலை முடிந்தவுடன் தந்தையின் பலசரக்குக் கடையில் பழப்புளி உருட்டுபவர்களாகவும்” ‘இரவு வீட்டுப்பாடம் இருக்கின்ற போதிலும், கிழிந்த வலைக்கு சிக்கெடுத்துத் தைத்துக் கொடுப்பவனாகவும், பொருளாதார பங்குதாரர்களாக விளைந்த பிள்ளைகளாக தங்கள் மணித்துளிகளைச் சிக்கனம் செய்யும் பதின்ம வயது ஞானிகள் பலரைக் கண்டது வடபுலத் தமிழ்ப் பூமி.

பாடசாலைக்கால பருவக் கவர்ச்சிக்கு ‘ பொன்னாபரணம் வாங்கிப் பரிசளிக்கும் ஆடம்பரர்கள், ஆயிரம் பேரை உதாரணம் காட்டுவதன் மூலம், அடுத்த வேளை பஸ் பயணச்சீட்டுக்காசு ‘கன்ரீனில் கறுப்புத் தேநீரோடு திருப்திப்பட்டுக் கொள்ளும் அற்புதன்’ ஒருவனின் பொறுப்புணர்ச்சியை குறைத்து மதிப்பிட்டு விடாதீர்கள் எம் ‘மாண்பு மிகுக்களே’!

தங்கையின் , தம்பியின் முதலாம் தர அனுமதிக்காக நீங்கள் நாக்கில் நரம்பினைத் தொலைத்து விட்டு ஏற்றிக் கேட்டும் ஏலத் தொகையினை திரட்டிக் கொடுப்பதற்குள் அவனது முழுவாரப் பாடசாலை நாள்கள் புதைந்து மீளாமல் போகலாம்! முக்கியமானதொரு பாடப்பரப்பு புரியாமல் போகலாம். இரண்டுதடவைக்குப் பின்னரே விளங்கும் பௌதிகவியல் பரிசோதனையொன்று, பெயர் தெரியாமலே போகலாம். அவசரமாய் கொடுக்க வேண்டிய ஒப்படை ஒன்றுக்காய் அவன் தலை குனிந்து தண்டனை வாங்கலாம்!

“ கல்வி” என்ற ஒற்றைச் சொல்லுக்காய் தமிழன் கால் வலிக்க ஓடும் ஆர்வத்தை ஏன் அவப்பிரயோகம் செய்ய வேண்டும் ‘டொனேஷன்’ களின் பெயரால்? ‘படிப்புக்காக’ என்று உச்சரிக்கும் போதே , தோள்களில் வலிந்ததொரு விறைப்பை ஏற்படுத்தி நிமிர்ந்து நிற்கின்ற தந்தைமாரை ஏன் “காசுப்பிசாசின்” காலடியில் குனிந்து தொழக் கேட்கின்றீர்கள்?

‘ ‘இருக்கின்ற இதைக்கூடத் தொலைத்து விடக்கூடாது. ” என்று இறுதி மரக்கிளையைப் பற்றிப்பிடித்து தொங்கும் ஒட்டுமொத்த தமிழினத்தையும் உயிருறுஞ்சும் ஈனச்செயலை, ஏதோ இறுமாந்த புகழுடன் காரியமாக்குவதில் எதற்கு இவ்வளவு அற்ப திருப்தி? “ பற்றுச்சீட்டுக் கொடுத்தால் , முறைப்பாடு செய்வோம் என்று- இந்தமுறை வங்கிக்கணக்கில் போடச்சொல்லி வைப்புச்சீட்டையும் நிரப்பியே கொடுத்தார்கள் ” என்று வயிற்றிலடித்துச் சொல்லுமளவுக்கு , இல்லாதவன் என்று தெரிந்தவர்களுக்குக் கூட இலவசக் கல்வியை ‘ இலவசமாகவே’ கொடுக்க ஏன் இளகவில்லை தரங்களால் எழுதப்படும் உங்கள் பதவிகள்?

“ இருநூறு மாணவர்களே தேவைப்படும் ‘குளத்தடி’ ஆரம்பப் பாடசாலைக்கு, இரண்டாயிரம் விண்ணப்பங்களாம்”, “கொக்குவில் பக்கம் இராணுவ சிபாரிசிலும் அனுமதி விண்ணப்பங்கள் வந்திருக்காம்” “இந்த முறை இருபதினாயிரம் ஆக்கியாச்சாம்”, ‘ பிந்திக் கொடுத்த விண்ணப்பங்களுக்கு பத்து கூடக் கொடுத்தால் சரிவருமாம்” இந்த வசனங்களோடு தான் தொடங்கும் குழந்தையொன்றின் கல்விப் பயணம் எந்தளவுக்குச் சிறந்து விடும்? முதல் நாள் பள்ளி வளாகத்தில் அம்மாவின் விரல்களை விடுவிக்க மறுத்து , அழுதழுது கரைந்து உருகும் ஒவ்வொரு சொட்டுக் கண்ணீரும், அவன் எதிர்காலத்துக்கும் சேர்த்து இழக்கப்படும் வசந்தத்தின் துளிகள் தானே?

அச்சடித்த அரச தாளுக்குக் கொடுக்கும் மதிப்பினை அழகிய குழந்தைச் சிரிப்புக்காக மாற்றி நிறுக்கும் ‘மனிதம்’ மட்டும் படித்த பட்டதாரிகளுக்காக பசியோடு திறந்திருக்கின்றன பாடசாலைக் கதவுகள்! ★

# சக்தியின்றி சாந்தி இல்லை

வலிமை ஒருவருக்கு நம்பிக்கையைத் தரமுடியும். வலிமையே ஒருவருக்குப் பேராற்றலை அளிக்க முடியும். வலிமை தான் உள்ளிருக்கும் ஆத்ம ஜோதியை உணர்த்த முடியும். அதனால் நீங்கள் உடலை வலிமைப்படுத்த வேண்டும்.

சிங்கத்தின் வலிமையை வேறு ஒரு சிங்கத்தால் தான் உணர முடியும். சிங்கத்தின் வலிமை சிறு நரிக்குத் தெரியாது. இந்த உடல் என்பது ஆடையை மாற்றுவது போல் மாறிக் கொண்டேயிருக்கிறது.

மரணம் என்பது சிறுபிள்ளை விளையாட்டு போன்றதுதான். இதில் அச்சப்படுவதற்கோ, சஞ்சலம் கொள்வதற்கோ அவசியம் ஏதுமில்லை. இந்த உடல் எமக்கு அளிக்கப்பட்டிருப்பது ஏன்? உண்பதற்கும் உறங்குவதற்குமா? கேளிக்கைகளில் ஈடுபட்டு வாழ்வை முடிப்பதற்கா? மற்றவர்களின் சொத்துக் களை அபகரித்துச் செல்வச் சீமான் என்று பெயர் எடுப்பதற்கா? வஞ்சகம் புரிந்து செல்வத்தை வளைப் பதற்கா?

இதற்கெல்லாம் அளிக்கப்படவில்லை இந்த உடல். எமது சகோதர மக்களுக்காக உழைக்க வேண்டும்: அவர்கள் அறியாமையைப் போக்க முயல வேண்டும்: அவர்களுக்குத் துன்பம் வந்தால் உதவிக்கரம் கொடுக்க வேண்டும். இவையெல்லா வற்றுக்கும் மேலாக உள்ளிருக்கும் ஆத்ம ஜோதியை இந்தப் பிறவியிலேயே காண வேண்டும். இதற்காகத் தான் இந்த உடல் அளிக்கப்பட்டிருக்கிறது. இந்த உடம்பில் சக்தி இருந்தால் தான் இந்தச் சாதனை களைப் படைக்க முடியும்.

இதை நீங்கள் கண் மூடித்தனமாக நம்ப வேண்டியதில்லை. அனுபவரீதியாக அறியுங்கள். நீங்கள் ஓர் ஆத்மா என்ற எண்ணம் கொண்டு உங்கள் அன்றாட வேலைகளில் ஈடுபடுங்கள். அப்போது அந்த அற்புத மாற்றத்தை நீங்கள் அறிந்து கொள்வீர்கள்.

சட்டத்தரணி ஒருவர் தன்னை ஆத்மாவாகக் கருதினால் அவருடைய வாதத்திறமை அற்புதமாக மாறும். மாணவ, மாணவியர் தங்களை ஆத்மாவாகக் கருதினால் அதிக மதிப்பெண்களைப் பெறுவார்கள். ஆசிரியர், கவிஞர், நீதிபதி, டாக்டர், நிர்வாகி மற்றும் அனைவருக்கும் இதே சிறப்புகள் கிடைக்கும்.

முதல் படியாக நீங்கள் இதனைப் பரீட்சித்துப் பாருங்கள். தெய்வ நிலையை அடைவது பின்பு வரட்டும். முதலில் உங்கள் வறுமை நிலையினை மாற்றிக் கொள்ளுங்கள்.

உங்களுக்கு நீங்களே தான் உதவிக் கொள்ள முடியும். வானத்திலிருந்து பணம் கொட்டாது. எல்லா இரகசியமும் உங்களிடம் இருக்கிறது. நீங்கள் தூக்கத்திலிருந்து விழித்துக் கொள்ளுங்கள். புலம்பல்கள் வேண்டாம். ... மற்றவர்களைக் கண்டு பொறாமையும் தேவையில்லை.. சுயநலத்துடன் எழுந்து நில்லுங்கள். ... பலவீனம் தான் உங்களைக் கறையான் போல் அரித்துக் கொண்டிருக்கிறது.

பட்டினியால் வாடுபவனிடம் போதனைகள் செய்வதென்று அவனை அவமானப்படுத்துவதாகும். முதலில் அவனுக்கு அடிப்படைத் தேவைகள் தேவை.

குழி விழுந்த கண்களுடன், உடலில் சக்தியற்று இருப்பவன் நடைப்பிணமாகவே வாழ்வை முடிப்பான். சக்தி இருந்தால் தான் சாந்தி வரும். நிம்மதி வரும். தெளிவு வரும். முதலில் உடம்பைப் பலப்படுத் துங்கள்.அதன் பின்னர் ஆன்மிக நூல்கள் முன்னைக் காட்டிலும் உங்களுக்கு அதிக பலன் தருவதைக் காண்பீர்கள்.

உடலில் சக்தியில்லாதவன் எந்தக் காரியத்தையும் உருப்படியாகச் செய்து முடிக்க முடியாது. இந்த உலகம் கோழைகளுக்கோ, பலவீனர்களுக்கோ ஏற்படுத்தப்படவில்லை. பலமுள்ள வீரன் இங்கே ஆச்சரியமிக்க வெற்றிகளைப் பெறுகிறான்.

முடியாது..முடியாது.. என்ற சொல்லும் குழுக்கள் இந்த நாட்டுக்குப் பாரமானவர்கள். முடியாது என்ற சொல்கிறவன் உடல் பலவீனமானவனாக இருப்பான்.

உடலில் சக்தியிருந்தால் எல்லா நன்மைகளும் உங்க ளைத் தேடிவரும்.

இந்த உண்மையை நீங்கள் மறக்கக் கூடாது. உங்களுடைய எல்லாத் தேவைகளையும் உங்களால் நிறைவேற்ற முடியும். நீங்கள் சக்திமிக்க மகரிஷிகளின் வாரிசுகள். காலத்தின் கோலத்தால் அவற்றை நீங்கள் மறந் திருக்கலாம் அந்த மகரிஷிகளின் சக்தியில் இலட்சத்தில் ஒரு பங்காவது இப்போது உங்களிடம் இருக்கத்தான் செய்கிறது.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# மறைக்கல்விப் போதனை வழங்கும் உரும்பிராய் புனித மிக்கேல் ஆலயம்



(கடந்தவாரத்தொடர்ச்சி.....)

**எஸ்.யேசுதாஸ்**

''சாணேற முழம் சறுக்கும்' என்பது போல கோயில் கட்டுமானப்பணிகள் அரைகுறையாக இருந்த போது அந்த வருடம் டிசெம்பரில் பெய்த கடும் மழையினால் அனைத்தும் இடிந்து விழுந்து சேதமாயின. அயராத முயற்சியின் பயனாக மீண்டும் அந்த அத்திபாரத்தின் மேல் ஒரு கோயில் அமைக்கப்பட்டது. இதுவே படிப்படியாக பரிணாம வளர்ச்சி கண்டு இன்றைய புனித மிக்கேல் ஆலயமாகத் திகழ்கிறது.

மறை போதகத்துடன் கல்வி, சமூக முன்னேற்றத்திற்காகவும் தன்னை அர்ப்பணித்து உழைத்த நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் 1942 ஆம் ஆண்டு ஜனவரி 22 ஆம் திகதி காலமனார். அவரோடும், அவரைத் தொடர்ந்தும் ஆலயத்தை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்ல அருட்தந்தையர்களான பிலிப், சுவாம்பிள்ளை, மரியாம்பிள்ளை, மதுரநாயகம், இராசநாயகம், நீக்கிலாப் பிள்ளை, குலாஸ், பாலசுந்தரம், அந்தோனிப்பிள்ளை, ஸ்பம்பதி, ஜெலாண்ட ஆகியோர் பணியாற்றினார்.

உரும்பிராய் தனிபங் குத் தளமாக ஆயரால் 1962 இல் அறிவிக்கப்பட்டு முதல் பங்குத் தந்தையாக பணிபுரிந்தார். அருட் திரு பெனற் கொண்சன்ரைன் அடிகளார். அவர் ஆலய கட்டுமானப் பணிகளில் பெரும் பங்காற்றினார். கோவிற் காணிகளில் சில பகுதிகளை விற்றும், குடும்பத்துக்கொரு வெங்காய முடிச்சை காணிக்கையாகப் பெற்றும், கரோல் மற்றும் நிகழ்ச்சிகள் மூலமும், நிதியினைத்திரட்டி கட்டடப் பணிகளை மேற்கொண்டார். சேமக்காலையை சீரமைத்ததும் மே மாதத்தில் கொண்டாடப்பட்ட திருவிழாவைசெப்ரெம்பர் மாதத்திற்கு மாற்றியமையும் இவரது பணிக் காலத்தில் நடைபெற்றன.

**அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளாரின் முயற்சியுடன் கடந்த ஆண்டு ''வைகறை' என்றும் பெயரில் கணினிப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பங்கைச் சேர்ந்த 5 ஆலய மாணவர்களுக்கும் இங்கே கணினிப் பயிற்சி வழங்கப்படுகிறது.**

இந்தப் பகுதியில் கட்டடத்துறையுடன் தொடர்புடைய பல்வேறு தொழிலாளர்கள் வசித்து வருகின்றனர். அவர்களது உடல் உழைப்பும், சிரமதானப் பணிகளும், தொழில் அனுபவமும் ஒன்று சேர்ந்து அமையப்பெற்ற ஒற்றுமைப் பங்களிப்பின் சின்னமாக புனித மிக்கேல் ஆலயம் அழகுறத் திகழ்கிறது. ஆன்மிகத்துடன் கலைத்துறையிலும் ஈடுபாடு கொண்ட அருட்திரு நீ.மரியசேவியர் அடிகள் 1966 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக பொறுப்பேற்று பெரியோர் முதல் சிறுவர் வரை மறை அறிவை ஊட்ட உழைத்தார். அத்துடன் திருப்பாடுகளின் காட்சியை மனித நடிப்புடன் கூடிய அரங்கியல் நிகழ்வாக முதன் முதலில் அடிகளார் காட்சிப்படுத்தியது உரும்பிராய் பங்கில் தான். இதுவே திருமறைக் கலாமன்றத்தின் தோற்றுகைக்கு கால்கோள் ஆனது. இவர் இறை அழைத்தலில் குருக்கள், துறவிகள் உருவாக அடித்தளமிட்டு இறைபற்றை வளர்த்தார்.

தற்போது மன்னார் ஆயராக விளங்கும் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை இங்கே பங்குத் தந்தையாக இருந்த 1972-1974 ஆண்டு காலப்பகுதியில் ஆலய கட்டுமானத்தின் பணிகள் முழு வீச்சுடன் இடம்பெற்றன. உணவுக் கூப்பனுக்குக் கிடைத்த உலர் உணவுப் பொருள்களை மக்கள் ஆலயத்திற்கு வழங்கினர். அந்தப் பணத்துடன் ஆயர் மேதகு தியோகுப்பிள்ளை ஆண்டகையின் பண உதவியையும் பெற்று மக்களின் கடின உழைப்புடன் பெரும் பகுதி பூர்த்தி செய்யப்பட்டது.

1974 ஆம் ஆண்டு பொறுப்பேற்ற அருட்திரு ஜெயசேகரம் அடிகளார் முடிவுறாத வேலைகளை முற்றுப் பெறச் செய்து ஆயரின் பங்களிப்புடன் பங்குக் குருவின் பணிமனையையும் கட்டுவித்தார். 1978 இல் அருட்திரு வ.பிலிப் அடிகளார் காலத்தில் மின்னிணைப்பு ஏற்படுத்தப்பட்டது. தொடர்ந்து பங்குத் தந்தையர்களாக அருட் திரு நேசநாயகம், பற்றிக் ஞானபிரகாசம், செல்வராசா நேசராசா, அன்ரனிதாஸ், அருள்நேசன், அன்ரனிபாலா ஆகியோர் கடமையாற்றினர். அன்ரனிபாலாவின் முயற் சியால் கோபுரம் கட்டப்பட்டது.

கானல் பகுதியாக நீண்டு பரந்த ஆலய வளவை நிழல் தரு மரங்களால் பசுமையாக்கி அழகுபடுத்தியதுடன் ஆலயத்திற்கு மின் விசிறிகளையும் அருட்திரு செபநேசத்தினம் அடிகள் தமது பணிக் காலத்தில் (2005, 2008) அமைத்தார். அத்துடன் அவரால் அமைக்கப்பட்ட ஞானப் பிரகாசர் கல்விக்கூடம் விடுமுறைநேர இலவசக் கல்வியை மாணவர்களுக்கு இன்று வரை வழங்கிவருகிறது. இந்த அறிவூட்டும் முயற்சியில் உள்ளூர் ஆசிரியர்கள் ஈடுபட்டுள்ளனர்.

நீர்வேலி பரலோகமாதா ஆலயம், அச்செழு யூலனூர் கென்றியரசர் ஆலயம் குப்பிளான் இராயப்பர் ஆலயம், கோண்டாவில் செபஸ்தியார் ஆலயம் என்பவற்றை உள்ளடக்கிய இந்தப் பங்கின் பங்குத் தந்தையாக அருட்திரு. வ.யூட் நிக்சன் அடிகளார் 2008 ஆம் ஆண்டு முதல் பணியாற்றி வருகிறார். மக்களை ஆன்மிக வழியில் இட்டுச் செல்ல செபமாலைப் பேரணி நற்கருணைப் பேரணி, மகா ஞானொடுக்கம் என்பவற்றை சிறப்புற நடத்தியுள்ளார். யுத்தத்தால் சேதமடைந்த ஆலய சுற்றுமதில் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது.

அமலமரித் தியாகிகள் சபையின் மாகாண முதல்வர் அருட்திரு போல் நட்சத்திரம் அடிகளாரின் முயற்சியுடன் கடந்த ஆண்டு ''வைகறை' என்றும் பெயரில் கணினிப் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்தப் பங்கைச் சேர்ந்த 5 ஆலய மாணவர்களுக்கு இங்கே கணினிப் பயிற்சி வழங்கப்படுகிறது.

உரும்பிராய் மண்ணில் ஞானப் பிரகாசர் அடிகள் விதைத்த கத்தோலிக்க விசுவாசம் வளர்ச்சி பெற்று பெருவிருட்சமாக மாறி இன்று 400 இற்கும் மேற்பட்ட குடும்பங்களைக் கொண்ட கத்தோலிக்க கிராமாக மிளிர்கிறது. இங்கிருந்து பல குருக்கள், அருட்சகோதரிகள் இறை பணியில் இணைந்துள்ளனர். அருட்பணி ஆர்.ஸ்ரலின், அருட்பணி எம்.டேவிற், அருட்திரு ஜெயச்சந்திரன் (அமதி) ஆகிய குருக்களும் பல அருட்சகோதரிகளும் உரு வாக்கம் பெற்றுள்ளனர். பல்வேறு இடர்கள், சவால்கள், எதிர்ப்புக் களையும் வென்று பகைவர்களையும் அன்பால் அரவணைத்து, தீயோனின் ஆட்சியை அழித்து, தூயோனின் வழியில் மக்களை அழைத்துச் செல்லும் அதிதூதரான புனித மிக்கேல் வல்லமையுடன் இங்கிருந்து தமது பரிந்துரையால் அருள் வளங்களைப் பொழிந்து வருகிறார். (முற்றும்)



திருகோணமலையில் ஒல்லாந்தர் காலத்தில் இயங்கிவந்த அரச நிர்வாகக் கட்டடம் கடற்படை நூதனசாலையாக மாற்றியமைக்கப்பட்டு நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் திறந்து வைக்கப்பட்டது.

## மீன், நீரியல் வளங்களைப் பாதுகாக்க கடற்படையுடன் இணைந்து திட்டம்

### கடற்றொழில் நீரியல் வள பிரதி அமைச்சர் சொல்கிறார்

கொழும்பு,பெப்.5

மீன்பிடித்துறைக்குப் பயன்படுத்தப்படும் தடை செய்யப்பட்ட சகல உபகரணங்களையும் கைப்பற்றுவதற்கு கடற்படையுடன் இணைந்து விசேட திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கடற்றொழில் நீரியல் வள பிரதி அமைச்சர் சரத்குமார குணரத்ன தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தத் திட்டத்தினூடாக சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களை முற்றாக ஒழிக்க திட்டமிட்டுள்ளோம்.

**தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் பாவனையால் டொல்பின்கள் உட்பட மீன் வளம் அழிந்து வருகிறது.**

கற்பிட்டி, பத்தாங்குண்டுவ பகுதியில் சட்டவிரோத மீன்பிடி உபகரணங்களைக் கொண்டு மீன்பிடித்ததில் பெரும் எண்ணிக்கையான டொல்பின் மீன்கள் இறந்தன.

இந்தச் சம்பவத்தை அடுத்து 15 மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். அதனைத் தொடர்ந்து சட்டவிரோத மீன்பிடி உபகரணங்கள் அனைத்தையும் கைப்பற்றுவதற்கு கடற்றொழில் நீரியல் வள அமைச்சு தீர்மானித்துள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்களை கைப்பற்றுவதற்காக மூவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தை முன்னெடுப்பது தொடர்பில் கடற்படையுடன் பேச்சு நடத்தப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் பாவனையால் டொல்பின்கள் உட்பட மீன் வளம் அழிந்து வருவதோடு, நீரியல் வளமும் தேமடைந்து வருகிறது.-என்றார். (ச)

## இலங்கையரில் 30 வீதமானோர் உடற் பருமன் காரணமாக பாதிப்பு

கொழும்பு,பெப்.5

இலங்கையின் சனத்தொகையில் 30 வீதமானவர்கள் உடற் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளமை ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது.

உடற் பருமன் பல்வேறு நோய்கள் ஏற்படுவதற்கு காரணமாக அமையும் என்று சுகாதார அமைச்சின் தொற்றா நோய்கள் பிரிவு பணிப்பாளர் தலத்தா லியனகே தெரிவித்தார்.

உயரத்துக்கு அமைய இருக்க வேண்டிய நிறை குறித்து கவனம் செலுத்தும் போது நாட்டில் 30 வீதமானவர்கள் உடற் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கலோரி அதிகமுள்ள உணவு வகைகளை மக்கள் அதிகம் உட்கொள்வதே இந்த நிலைமைக்கான காரணம் என்றுஅவர் குறிப்பிட்டார்.

உடற்பருமனால் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் இருதய நோய் மற்றும் நீரிழிவு நோயால் பீடிக்கப்படுவதற்கான சாத்தியம் அதிகமுள்ளது என்றும் மக்கள் அதிகளவில் கலோரி அடங்கிய உணவு வகைகளை உட்கொள்ள பழக்கப்பட்டுள்ளமை சுகாதாரத்துக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ளது என்றும் தெரிவித்தார். (ச)

## 3 மாதங்களில் வாழ்வெழுச்சித் திட்டத் திணைக்களம்

கொழும்பு,பெப்.5

வாழ்வெழுச்சித் திட்ட (திவிநெகும) திணைக்களம் மூன்று மாதங்களில் ஆரம்பிக்கப்பட உள்ளது என்று சமுர்த்திப் பணிப்பாளர் ஜீ.பி. திலகசிறி தெரிவித்தார். வாழ்வெழுச்சித் திட்ட திணைக்களத்தை ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்று அவர் குறிப்பிட்டார்.

சமுர்த்தி வங்கிகள் வாழ்வெழுச்சித் திட்ட வங்கிகளாக மாற்றம் செய்யப்படவுள்ளன. சமுர்த்தி நிறுவனத்தில் கடமையாற்றியவர்கள் வாழ்வெழுச்சித் திட்டத் திணைக்களத்தின் கீழ் உள்வாங்கப்படவுள்ளனர் என்று அவர் கூறினார். (ச)

# போரைக் காரணம் காட்டி நாடு சுரண்டப்படுகின்றது

## சரத் பொன்சேகா குற்றச்சாட்டு

கொழும்பு,பெப்.5

போரைக் காரணம் காட்டி நாடு சுரண்டப்படுகிறது என்று முன்னாள் இராணுவத்தளபதி சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

காலியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தாவது:-

போர் காரணமாக நாட்டை அபிவிருத்தி செய்ய முடியாது என்று கூறுகின்றனர். போர் இடம்பெற்ற காலத்தில் சீனாவிடமிருந்தே ஆயுதங்கள் கொள்வனவு செய்யப்பட்டன.

அனைத்து ஆயுதங்களும் கடன் அடிப்படையிலேயே



பெற்றுக்கொள்ளப்பட்டன. அந்தக் கடன்கள் நான்கு தலைமுறைகள் வரையில் செலுத்த நேரிடும்.

அதனால் 2012 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரையில் கடன் செலுத்த வேண்டியுள்ளது. போரைக் காட்டி நாடு சுரண்டப்பட்டது. தற்போது உலக சமூகத்திடம் கடன் பெற்றுக் கொள்ளப்படுகின்றது.

போர் இடம்பெற்ற காலத்தில் ஒரு பீரங்கி தோட்டாவின் விலை 250 டொலர்களாகும். எனினும் இந்த அரசு ஒரு தோட்டாவுக்காக 650 டொலர் செலுத்துகின்றது.

போர் இடம்பெற்ற காலத்தில் பீரங்கித் தோட்டாவின் விலை 50 டொலர்களினால் மட்டுமே உயர்வடைந்தது.

கடந்த ஆண்டில் மட்டும் குறித்த பீரங்கித் தோட்டாவின் விலையை 400 டொலர்களினால் அதிகரித்துள்ளனர்.

இந்த அனைத்துச் சுமைகளையும் நாட்டு பொதுமக்களே சுமக்க நேரிடும்.-என்றார்.(ச)

## சிறார்கள் போஷாக்கு இன்மையால் பாதிப்பு

கொழும்பு,பெப்.5

நாட்டின் 30 வீதமான சிறார்கள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இலங்கை போஷாக்கு நிபுணர் சங்கத்தின் தலைவர் ரேனுக டி சில்வா தெரிவித்தார்.

போஷாக்கு நிபுணர்கள் சங்கத்தின் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

தாய்மார்களில் மூன்றில் ஒரு பகுதியினர் இரத்தச் சோகையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டார்.

மக்களின் போஷாக்கு நிலைமையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். குறிப்பாக சிறுவர்களின் போசாக்கு நிலைமை குறித்து கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## சிகிரியா எகிப்தின் பிரமிட் தொழில்நுட்பத்தை ஒத்தது

### பக்கிங்ஹாம் பல்கலைக்கழக விஞ்ஞானி தகவல்

கொழும்பு,பெப்.5

உலகின் எட்டாவது அதிசயம் என்று கூறப்படும் சிகிரியா, எகிப்து நாட்டின் பிரமிட் கோபுர தொழில் நுட்ப அமைப்பை ஒத்ததாக அமைந்துள்ளது. இவ்வாறு பிரிட்டன் பக்கிங்ஹாம் பல்கலைக்கழகத்தின் நட்சத்திர உயிரியல் விஞ்ஞானக் கல்விப் பிரிவின் பணிப்பாளர் பேராசிரியர் சந்ரா விக்ரமசிங்ஹ தெரிவித்தார்.

அண்மையில் பொலநறுவை,அரலகங்வில பிரதேசத்தில் விழுந்ததாகக் கூறப்படும் எரி நட்சத்திரச் சிதைவுகளை பரிசோதனைக்கு உட்படுத்தும் நோக்கில், அந்தப் பிரதேசத்துக்கு வருகை தந்த அவர் சிகிரியாவிலும் ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்ட பின்பே இவ்வாறு கூறினார்.

எகிப்து நாட்டின் பிரமிட் கோபுரங்களைப் போன்றே, இலங்கையில் சிகிரியா குன்றும் நட்சத்திர அறிவியல் தொடர்பான அறிவைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

வடகிழக்குத் திசையை நோக்கி சிகிரியா அமைக்கப்பட்டிருப்பதானது, நட்சத்திர அமைப்பினை அனுசரித்தே என்பது இதன் மூலம் நிரூபணமாகியுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.



இதேவேளை கடந்த காலங்களில் நாட்டின் சில இடங்களில் பெய்த வர்ண மழை தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் பொருட்டு, இந்தக் குழுவினர் சிகிரியா குன்றின் உச்சியிலமைந்துள்ள நீர்த் தடாகத்திலிருந்து பரிசோதனைக்கென மாதிரி நீரையும் தம்முடன் எடுத்துச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## ஒழுக்கத்தை மீறும் பிரதேச செயலர்களை கண்டுபிடிக்க புதிய செயற்றிட்டம்

கொழும்பு,பெப்.5

பிரதேச செயலர்களின் முறைகேடுகளை கண்டுபிடிப்பதற்கான புதிய செயற்றிட்டத்தை ஆரம்பிக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. ஒரு சில பிரதேச செயலர்கள் தமது பதவிக்குப் பொருந்தாத செயற்பாடுகளில் ஈடுபடுவதாக முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று அமைச்சின் செயலர் பி.பி.அபேகோன் தெரிவித்தார்.

அதன் காரணமாக பிரதேச நிர்வாக நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்வதில் தடைகள் ஏற்படுகின்றன என்று அவர் கூறினார்.

பிரதேச செயலர்களின் முறைகேடுகள் தொடர்பான தகவல்களை பொது நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சின் விசாரணைப் பிரிவிடம் சமர்ப்பிக்க முடியும் என்று அவர் அறிவித்துள்ளார்.

ஒழுக்கத்தை மீறும் பிரதேச செயலர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

தருவது வித்தியா

# இன்றைய நாள்

## உங்களுக்கு எப்படி?

**மேடம்:** பழைய பிரச்சினைகள் தலைத் தூக்கும். உதவி செய்வதாக வாக்குக் கொடுத்தவர்கள் சிலர் இழுத்தடிப்பார்கள். பண விடயத்தில் கண்டிப்பாக இருங்கள். திடீர் நண்பர்களை வீட்டிற்குள் அழைத்து வர வேண்டாம். உத்தியோகத்தில் போட்டி அதிகரிக்கும்.

**இடபம்:** வெளியூர் பயணங்கள் திருப்தி கரமாக இருக்கும். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். அலுவலகத்தில் மதிக்கப் படுவீர்கள். வழக்குகளிலிருந்த தேக்க நிலை மாறும். ஆடம்பரச் செலவுகளைக் குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**மிதுனம்:** பிரியமானவர்களை கலந்தாலோசித்து முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். பணம் தேவையான அளவு புரளும். உறவுகள் மத்தியில் மதிக்கப்படுவீர்கள். அரசியல்வாதிகளின் நட்பு கிடைக்கும். நீண்ட நாளாக நினைத்திருந்த காரியத்தை இப்பொழுது செய்து முடிப்பீர்கள்.

**கடகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். பணம் புரளும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். நட்பு வட்டாரம் விரிவடையும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள். வேலையாள்களின் ஆதரவு கிடைக்கும்.

**சிங்கம்:** புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும். தெளிவான முடிவுகளை எடுத்து அருகிலிருப்பவர்களை அசத்துவீர்கள். ஆன்மீகத்தில் நாட்டம் அதி கரிக்கும். வெளிவட்டாரத்தில் மதிப்பு, மரியாதை கூடும். மாணவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும்.

**கன்னி:** பணவரவு திருப்திகரமாக இருக்கும். அரச காரியங்களில் வெற்றியுண்டு. நல்லவர்களின் நட்பு கிடைக்கும். வியாபாரத்தில் போட்டிகளை முறியடிப்பீர்கள். பயணங்கள் மகிழ்ச்சி தரும்.

**நாளை**

தை -24 புதன்கிழமை 06.02.2013
திதி: ஏகாதசி மு.இ. 09.33 வரை
நட்சத்திரம்: கேட்டை சித்தம் மு.ப. 11.32 வரை
சுபநேரம்: 05.05- 09.35 வரை
ராகுகாலம்: 12.35- 02.05 வரை

**துலாம்:** எதிலும் அவசரப்பட வேண்டாம். கடனாகக் கொடுத்த பணம் கைக்கு வரும். கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். நவீன சாதனங்கள் வாங்குவீர்கள். வியாபாரம், உத்தியோகத்தில் திருப்தி உண்டாகும்.

**விருச்சிகம்:** உங்களை அறியாமலேயே தாழ்வு மனப்பான்மை தலை தூக்கும். உறவினர், நண்பர்களை பகைத்துக் கொள்ளாதீர்கள். சில விடயங்களுக்கு அனுபவ அறிவைப் பயன்படுத்துவது நல்லது. தெளிவான முடிவுகள் எடுக்க முடியாமல் திணறுவீர்கள்.

**தனுசு:** சின்ன சின்ன வேலைகளையும் அலைந்து முடிக்க வேண்டி வரும். பணப்பற்றாக் குறையால் பிறரிடம் கைமாற்றாக வாங்க வேண்டி வரும். அரச காரியங்கள் இழுபறியாகும். வியாபாரத்தில் கடினமாக உழைத்து லாபம் பெறுவீர்கள்.

**மகரம்:** மன நிறைவுடன் காணப்படுவீர்கள். சகோதர, சகோதரிகளால் நன்மையுண்டு. உத்தியோகத்தில் மதிக்கப்படுவீர்கள். பால்ய நண்பர்களைச் சந்தித்து மகிழ்வீர்கள். வியா பாரத்தில் மிகுதிகளை அதிரடியாகச் செயற்பட்டு வசூலிப்பீர்கள்.

**கும்பம்:** மறைமுகப் போட்டிகளுக்கு பதிலடி தருவீர்கள். பயணங்களால் ஆதாயம் உண்டு. நண்பர்களின் வருகையால் வீட்டில் மகிழ்ச்சியுண்டு. பிரபலங்களின் உதவி கிடைக்கும். அயல் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**மீனம்:** பணவரவு திருப்தி தரும். நேர்மறை எண்ணங்கள் பிறக்கும். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் மேலதிகாரி உதவுவார்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 9 | | | 5 | 4 | | |
| 3 | | | 9 | 7 | 2 | | | 1 |
| 1 | | | | 3 | | | | |
| 7 | | 3 | | 2 | 9 | | 5 | 4 |
| | 5 | | | 1 | | | 6 | |
| 8 | 2 | | 5 | 4 | | 7 | | 9 |
| | | | | 9 | | | | 6 |
| 4 | | | 2 | 5 | 3 | | | 8 |
| | | 7 | 4 | | | 3 | | |

## நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 9 | 3 | 2 | 7 | 5 | 6 | 4 | 8 |
| 8 | 2 | 5 | 6 | 4 | 9 | 7 | 1 | 3 |
| 4 | 7 | 6 | 3 | 1 | 8 | 2 | 9 | 5 |
| 9 | 4 | 8 | 1 | 6 | 3 | 5 | 7 | 2 |
| 3 | 5 | 2 | 4 | 9 | 7 | 8 | 6 | 1 |
| 6 | 1 | 7 | 8 | 5 | 2 | 4 | 3 | 9 |
| 5 | 3 | 9 | 7 | 2 | 6 | 1 | 8 | 4 |
| 2 | 6 | 4 | 9 | 8 | 1 | 3 | 5 | 7 |
| 7 | 8 | 1 | 5 | 3 | 4 | 9 | 2 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.


# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

திருமதி

## சொர்ணபுஷ்பம் பஞ்சலிங்கம்

தோற்றம் -19.04.1933

மறைவு -06.01.2013



அன்பின் சிகரமாய்......
எல்லோர் மனதிலும் இடம்பிடித்த
எம் பாசமிகு அன்னையே........

கடந்த 06.01.2013 ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்த எங்கள் தாயாரின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் 03.02.2013 நடைபெற்றது. இன்று(05.02.2013) செவ்வாய்க்கிழமை ஆத்ம சாந்திப் பிரார்த்தனை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் மறைவுச் செய்தியறிந்து நேரில் வருகை தந்து ஆறுதல் மொழி கூறியோருக்கும், கடிதம்,தொலைபேசி,தந்தி, தொலைநகல் மூலம் ஆறுதல் படுத்தியோருக்கும்,கண்ணீர் அஞ்சலிகள், பனர்கள்(ஒக்ஷன் வீடியோ நிறுவன உரிமையாளர்-நந்தாவில்) வெளியிட்டோருக்கும், மலர்வளைய அஞ்சலி செலுத்தியோருக்கும்,பலவழிகளில் எமக்கு உதவியோருக்கும், பிற இடங்களில் இருந்து வந்தோருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

லிங்கமகால்
தாவடி வடக்கு, கொக்குவில்

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(C/6205)(5.6.7)

# மு.காவை பிளவுபடுத்தும் நோக்கம் என்னிடமில்லை

## அமைச்சர் பஷீர் தெரிவிப்பு

மட்டக்களப்பு,பெப்.5

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியை பிளவுபடுத்தும் நோக்கில் தாம் செயற்படவில்லை என்று உற்பத்தி மற்றும் உற்பத்தித்திறன் அமைச்சர் பஷீர் சேகுதாவூத் தெரிவித்துள்ளார்.

பஷீரின் அமைச்சுப் பதவி குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளர் பஷீர் சேகுதாவூத் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக பதவியேற்றுக்கொண்டதன் பின்னர் கட்சிக்குள் சர்ச்சை ஏற்பட்டுள்ளது. அதனையடுத்து, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதியுயர்பீட கூட்டம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் வரலாற்றில் இணைத் தலைவர்களாக இருந்தவர்கள் மாத்திரமே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக இருந்துள்ளனர். ஏனைய சந்தர்ப்பங்களில் தலைவர் மாத்திரமே அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்துள்ளார்.

இந்தநிலையில், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் அல்லாமல் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் என்ற வரலாற்றுச் சாதனையை நான் படைத்துள்ளேன். அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை நான் பெற்றுக்கொண்டதன் ஊடாக கட்சியை ஒருபோதும் காட்டிக்கொடுக்கவில்லை. இந்தக் கட்சியை அழிக்கும் நோக்கிலோ, அல்லது கட்சியைப் பிளவு படுத்தும் நோக்கிலோ ஒரு போதும் செயற்படவில்லை.- என்றார்.

இதேவேளை அமைச்சரவை அமைச்சராக பஷீர் சேகுதாவூத் பதவியேற்றமைக்கு கூட்டத்தில் அவருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என்று பலர் எதிர்பார்த்திருந்தனர்.

எனினும், அமைச்சர் பஷீர் சேகுதாவூத்துக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பில் எதுவுமே பேசப்படவில்லை என்று தெரியவந்துள்ளது. (ச)

## ஒலுவில் கடலில் மீட்கப்பட்ட
# வெளிநாட்டவர்களுக்கு விசேட சுகாதார சேவை



ஒலுவில்,பெப்.5

ஒலுவில் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த வேளை இலங்கை கடற்படையினரால் காப்பாற்றப்பட்ட பங்களாதேஷ், மியன்மார் நாடுகளின் பிரஜைகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மீட்கப்பட்ட வெளிநாட்டவர்களின் சுகாதார நிலைமைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதற்காக விசேட குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

இதுவரை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்படி 8 பேர் உணவு மற்றும் தண்ணீர் அருந்தாமையின் காரணமாக மயக்கமுற்ற நிலையில் உள்ளனர்.

பாதிக்கப்பட்ட பலர் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை அவர்களுக்கு மலேரியா தொற்று பரிசோதனைகளும் மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (ச)

## பிடிபட்டான் கொள்ளைக்காரன்


சுமார் 32 பிரதேசங்களில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையிட்டுள்ளார்

கண்டி,பெப்.5

நாட்டின் பல பாகங்களில் சுமார் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான மாணிக்கக் கற்கள் மற்றும் நகைகள் உட்பட பல பொருள்களை கொள்ளையிட்டதாகக் கூறப்படும் ஒருவரைக் கண்டி பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கண்டிப் பிரதேசத்துக்கு ஹெரோயின் போதைப் பொருளை விநியோகிக்கும் பிரதான நபரே இவர் என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கண்டி, கட்டுகஸ்தோட்டை, பேராதனை, கடுகண்ணாவை, மாவனெல்லை, கேகாலை உட்பட சுமார் 32 பிரதேசங்களில் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் பெறுமதியான பொருள்களை அவர் கொள்ளையிட்டுள்ளார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை கண்டி நீதிமன்றத்தில் பொலிஸார் முன்னிலைப்படுத்தியபோது, அவரை எதிர்வரும் 12ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (ச)



மின் பாவனையாளர் சேவை நிலையம் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கிண்ணியாவில் திறந்துவைக்கப்பட்டது. இந்த நிலையத்தை மின் சக்தி பிரதி அமைச்சர் பிரேமலால் விஜேசேகர, திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக் ஆகியோர் கலந்துகொண்டு திறந்து வைத்தனர்.

## ஜனாதிபதி வருகையையொட்டி உணவகங்களில் பரிசோதனைகள்

அம்பாறை,பெப்.5

ஜனாதிபதியின் வருகையையொட்டி ஒலுவில், தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள குடிதண்ணீர், உணவு வகைகள், குடிபானங்கள் யாவும் மக்களின் பாவனைக்கு உகந்தவையா? இல்லையா? என்று அடையாளம் காண்பதற்கான பரிசோதனைகள் நேற்று திங்கட்கிழமை நடைபெற்றன.

தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்திலுள்ள அனைத்து உணவகங்களும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

குறிப்பிட்ட பரிசோதனைகளை அட்டாளைச் சேனை பிர தேச சுகாதாரக் குழுவினர் மேற்கொண்டுள்ளனர்.

தென்கிழக்கு பல்கலைக்கழக வளாகத்திலும், அதனைச் சூழவுள்ள உணவகச் சாலைகளிலும் மக்களின் உணவுத் தேவைகளுக்காக விற்பனை செய்யப்படுகின்ற, செய்யப்படவுள்ள அனைத்து உணவு வகைகளும் பரிசோதனை செய்யப்பட்டன.

ஒலுவில் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தில் இன்று செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள முப்பெரும் விழாவில் பிரதம விருந்தினராக ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(ச)

## கிழக்கில் தேசத்துக்கு மகுடம் வேலைத்திட்டப் பணி ஆரம்பம்

மட்டக்களப்பு,பெப்.5

'தேசத்துக்கு மகுடம்' தேசிய வேலைத் திட்டத்தின்கீழ் கிழக்கு மாகாணத்தில் அபிவிருத்திப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாயிகளின் நன்மை கருதி இத்திட்டத்தின்கீழ் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள விவசாயிகள் நெல் சந்தைப்படுத்தல் தொடர்பில் எதிர்நோக்கிவந்த சிக்கல் நிலைக்கு இந்தத் திட்டத்தின் மூலம் விமோசனம் வழங்கப்படவுள்ளது.

## மாவடியோடை பாலம் புனரமைப்பு

மட்டக்களப்பு,பெப்.5

மட்டக்களப்பு, செங்கலடி பிரதேச செயலர் பிரிவிலுள்ள மாவடியோடை பாலத்துக்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தாலும், குளங்கள் திறக்கப்பட்டதாலும் மாவடியோடை பாலத்தின் இரு பக்கங்களும் முழுமையாக சேதமடைந்திருந்தன. இந்த நிலையிலேயே பாலத்துக்கான புனரமைப்புப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தப் பாலத்தை கமநல அமைப்புக்களும், விவசாயத் திட்ட முகாமைத்துவ குழுவினர்களும் இணைந்து புனரமைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## அதாவுல்லாவின் பணிகளை யாரும் விமர்சிக்க முடியாது

### அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினர் சொல்கிறார்

மட்டக்களப்பு,பெப்.5

முஸ்லிம் அரசியலில் அமைச்சர் அதாவுல்லாவின் சமூக நலன் கருதிய அபிவிருத்தித் திட்டங்களை யாரும் விமர்சிக்க முடியாது.

இவ்வாறு அக்கரைப்பற்று மாநகரசபை உறுப்பினர் அஸ்மி ஏ. கபூர் தெரிவித்தார்.

தென் கிழக்கு பிரதேச சட்டத்துறை மாணவர்களுடனான கலந்துரையாடலில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஆதாரமற்ற முக்கியத்துவமல்லாத அறிக்கைகள் வெளியிடுவதை முஸ்லிம் அரசியல்வாதிகள் தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அறிக்கைகளை வெளியிடுவதால் அவை சமூக மேம்பாட்டுக்கான விடயத்தில் பாதிப்பை ஏற்படுத்தப் போவதில்லை.

அம்பாறை மாவட்டத்தில் அக்கரைப்பற்று மாநகர சபை, பிரதேச சபை தவிர ஏனைய பெரும்பாலான உள்ளூராட்சி சபைகள் அரசுடன் பங்காளியாக இருக்கின்ற முஸ்லிம் காங்கிரஸிடம் உள்ளது. இவ்வாறிருந்தும் பொத்துவில், அட்டாளைச் சேனை, இறக்காமம் கல்முனை ஆகிய பகுதிகளுக்கு அமைச்சரால் மாறுபட்ட முறையில் சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோல் மாகாண சபை அமைச்சர் உதுமாலெப்பையால் அட்டாளைச்சேனையிலும் ஏனைய பிரதேசங்களிலும் அபிவிருத்திப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆனால் கிழக்கில் நாங்கள் ஆட்சியின் பங்குதாரர்கள் என்று கூறுபவர்களால் எதைச் சாதிக்க முடிந்தது?-என்றார். (ச)

# கல்முனை பிரதேசத்தில் 21 டெங்கு நோயாளர்கள்

## தடுக்க வெற்றுக் காணிகள் முற்றுகை நடவடிக்கை



கல்முனை,பெப்.5

கல்முனைப் பிரதேசத்தில் கடந்த மூன்று வாரங்களுக்குள் 21 டெங்கு நோயாளர்கள் இனம் காணப்பட்டுள்ளனர்.

அண்மையில் பெய்த அடை மழையைத் தொடர்ந்து கல்முனைப் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. கடந்த மூன்று வார காலப் பகுதியில் 21 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். அவர்களில் கல்முனைக்குடி பிரதேசத்தில் 16 பேரும், மருதமுனை பிரதேசத்தில் 5 பேர்களும் உள்ளடங்குகின்றனர்.

கல்முனைப் பிரதேசத்தில் டெங்கு நோயாளர்கள் தொடர்ந்து இனங்காணப்பட்டு வருவதால், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் குடியிருப்பற்ற வெற்றுக் காணிகளைக் கண்டறிந்து முற்றுயிடும் வேலைத் திட்டம் ஒன்றையும் முன்னெடுதுள்ளது.

குடியிருப்புகளற்ற தனியாருக்குச் சொந்தமான வெற்றுக் காணிகளிலுள்ள குப்பைகள் மற்றும் உபகரணங்களில் நீர் தேங்கி நிற்பதனாலேயே இங்கு டெங்கு நோய் பரவுகின்றது என்று கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.எல்.எம். ரயீஸ் தெரிவித்தார்.

தற்போது வெற்றுக் காணிகள் முற்றுகை வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தி உள்ளதுடன், இந்தக் காணி சொந்தக்காரர்களுக்கு அறிவித்தல்களையும் விடுத் துள்ளோம் என்று அவர் கூறினார்.

மூன்று நாள்களுக்கு இடையில் காணிகள் சுத்திகரிக்கப்பட்டு சீர்செய்யப்படாவிடின் அவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்படும் என்று அவர் குறிப்பிட்டார். (ச)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சத்தியம் செய் மொழிபெயர்ப்பாளராகப் பதவி நியமனம்

இன்பர்சிட்டி பருத்தித்துறையைச் சேர்ந்த

## இராஜதுரை வான்மதி



அவர்கள்,சத்தியம் செய் மொழிபெயர்ப்பாளர் (Sworn Translator)(தமிழ்,ஆங்கிலம்) பரீட்சையில் சித்திபெற்று யாழ்ப்பாணமாவட்ட நீதிமன்றத்தில் யாழ்.மாவட்ட பிரதம நீதிபதி அ.அ.ஆனந்தராஜா அவர்கள் முன்னிலையில் 31.01.2013 வியாழக்கிழமை அன்று சத்தியம் செய் மொழிபெயர்ப்பாளர் என்ற அரசால் அங்கீகரிக்கப் பட்ட பதவிக்கான உறுதியுரையினைப் பெற்று நியமனம் பெற்றுக் கொண்டார் இவர் மேன்மேலும் வாழ்வில் சிறந்து விளங்கவும் வாழ்த்துகின்றோம்.

இவரைப் பாராட்டி வாழ்த்துவோர்:
தந்தை ம.இராஜதுரை,
தாய் இ.அழகம்மா,
தம்பி இ.உதயராஜா,
மாமா சோ.சிவஞானசுந்தரம்,
மாமி சி.வீரமணி,
மற்றும் உறவினர்கள், நண்பர்கள்

"ஆனந்தபவனம்", போறூர்ட் முன் ஒழுங்கை,
இன்பர்சிட்டி, பருத்தித்துறை.

Wishes

(C/6215)(6.7:11)

# வாகனம் விற்பனைக்கு



**No. LJ-xxxx**
**(ISUZU 350)** 14½ ,நீள Body கொண்ட Japan கூலர் மொடல் கொண்ட வாகனம் நம்பிக்கையான பாவனையாளர்களுக்கு வாடகையாக வருடக் குத்தகைக்கு கொடுக்கப்படும்.

தொடர்பு-0775081793

(27729)(3.6)

# மக்லியோட் வைத்தியசாலை, இணுவில் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலை, மானிப்பாய் வைத்தியசாலை ஞாயிறு ஆராதனை

இணுவில் மக்லியோட் வைத்தியசாலையும், மானிப்பாய் கிறீன் ஞாபகார்த்த வைத்தியசாலையும் இணைந்து நடத்தும் ஞாயிறு ஆராதனை இணுவில் தென்னிந்திய திருச்சபை ஆலயத்தில் 10.02.2013 பிற்பகல் 4.00 மணிக்கு (ஞாயிற்றுக் கிழமை) நடை பெறும். அனைவரும் ஆராதனையில் பங்கு பற்றி சிறப்பிக்குமாறு அன்புடன்வேண்டுகின்றேன்.

Medical Superintendent
வைத்திய மேலதிகாரி.

(29153)(6.7.4)

# மரண அறிவித்தல்

## கோபாலு இராசரத்தினம்

[Chartered Management Accountant,chief Accountant Ministry of Trading and Shipping,Vice President(Finance)National Insurance Corperation,முன்னாள் திட்ட இணைப்பாளர்,ஞானசம்பந்தர் கலை மன்றம் பருத்தித்துறை.]



பருத்தித்துறை, ஆத்தியடியைப் பிறப் பிடமாகவும் புலோலி கிழக்கை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வசித்து வந்தவருமான கோபாலு இராசரத்தினம் 02.02.2013 சனிக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் குகநாயகியின் அன்புக் கணவரும், குகராஜன், குணராஜன், குலராஜன், தேவகி, குமண ராஜன்,குபேரராஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (06.02.2013) புதன்கிழமை Toranto Canada வில் அஞ்சலிக்காக வைக்கப் பட்டு 07.02.2013 வியாழக்கிழமை இறுதிக் கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(சி/6214(5-6-7)

தகவல்:
நிர்வாகம்,
ஞானசம்பந்தர் கலை மன்றம்.

# வாகனம் விற்பனைக்கு

உழவு இயந்திரம் , JCB ஆகியன உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:077 4115 605, 0775384992.

(29154)(6.7.4)

# கிளிநொச்சியில் கடை வாடகைக்கு உண்டு

தொண்டமான் நகர் உதிர வேங்கை வைரவர் கோயில் A9 வீதியில் நீர், மலசலகூட வசதியுடன் கூடிய கடை வாடகைக்கு உண்டு.

★ஹோட்டல் நடத்துவதற்கு உகந்தது.

தொடர்பு:024 5683692.

(27654)(6.7.4)

# வீடு வாடகைக்கு உண்டு

மாவத்தை ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு.

தொடர்பு:077 0426196.

(29158)(6.7.4)

# கண்ணீர் அஞ்சலி

## எம்.கே.ஜீவகதாஸ்



(முன்னாள் செயலாளர் வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்)

கடந்த சனிக்கிழமை காலமான ஊடகவியலாளர் **எம்.கே. ஜீவகதாஸின்** மரணச்செய்தி கேட்டு கவலையடைகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(27731)(6.7.4)

யாழ்ப்பாணம்.

தகவல்:
வட இலங்கைப் பத்திரிகையாளர் சங்கம்.

# அறிவித்தல் V.S.P

மூலப் பொருளின் (எள்ளு) விலை அதிகரிப்பினால் எமது தயாரிப்பான **V.S.P.** நல்லெண்ணெயின் விலையை 05/02/2013 இல் இருந்து ஒரு போத்தல் (750ml) 500/= ரூபாவாக அதிகரிப்பு செய்கின்றோம் என்பதை விற்பனையாளர்களுக்கும் பாவனையாளர்களுக்கும் மிகவும் மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.


**PARIMALA STORES**
26-A,Manipay Road,Jaffna.
T.P0212229165,0212224135

(C/6219)(3.8)

# மரண அறிவித்தல்

## பொன்னையா பாலசிங்கம்

(இளைப்பாறிய உயர் வருமானவரி உத்தியோகத்தர்)



வல்வெட்டியை பிறப்பிடமாகவும் நீர்வேலி, கொழும்பு ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா பாலசிங்கம் 03.02.2013 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா-செல் லம்மா தம்பதியரின் அன்பு மகனும் கமலாவின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான கந்தையா, செல்வரட்ணம் மற்றும் சிவக்கொழுந்து ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பாலராஜ்,கௌசலா, ராஜாநந்தன்,ஜயந்தி ஆகியோ ரின் பாசமிகு தந்தையும், வாசுகி, மதியழகன், சகுந்தலா, தயாபரன் ஆகியோரின் அன்பு மாமனும், ஆதித்தன், அபிநயா, மைதிலி, அக்ஷயா, றொஷானா, ஷனாயா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் மகிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக இன்று(05.02.2013) செவ்வாய்க்கிழமை வைக்கப்பட்டு நாளை (06.02.2013) புதன்கிழமை பிற்பகல் 4.00மணியளவில் தகனக் கிரியைக்காக கல்கிசை பொது மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர, நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


C 13/2/2, Desoysapura Flats,
Moratuwa.
011 262 6035

(சி/5894)(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.

# 4 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

*மலர்வு:*
05.08.1951
*உதிர்வு:*
05.02.2009





## திருமதி எட்வேட் அன்ரன் மேரி அஞ்சலீனா

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
குடும்பத்தின் ஒளி விளக்காய் எங்களை வழிநடத்திய தெய்வமே....
ஆண்டுகள் நான்கு முடிந்ததம்மா உங்கள் நினைவுகள் நீங்காதம்மா
எங்கள் கண்ணீர்ப்பூக்களால் அர்ச்சித்து ஆண்டவன் அடியில்
உங்கள் ஆத்ம சாந்தி வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.

(சி5893) (2-6.7)




பெரும்பாலும் மேகக் கூட்டத்துடன் கூடிய காலநிலை நிலவும்.

## நவநாள் வழிபாடு

கொழும்புத்துறை,பெப்.5

தும்பளை புனித லூர்து அன்னை ஆலய வருடாந்த பெருவிழா கடந்த சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

நவநாள் வழிபாட்டுப் பூஜை தினமும், மாலை 4.30 மணிக்கு நடைபெறுகின்றது.

எதிர்வரும்10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை நற்கருணை விழாவும், மறுநாள் திங்கட்கிழமை காலை 5.30 மணி முதல் திருப்பலியும், திருநாள் திருப்பலி காலை 7 மணிக்கும் இடம்பெறும்.

திருவிழாவுக்கு வருகை தரும் யாத்திரிகர்களின் வசதி கருதி பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து விஷேட போக்குவரத்து வசதிகள் செய்யப்பட்டுள்ளதாக பங்குத் தந்தை அருட்திரு யோண் மௌலிஸ் அடிகள் தெரிவித்துள்ளார். (3-135)

## இடிந்து விழும் நிலையில் நாயன்மார்கட்டு மதகு

கொழும்புத்துறை,பெப்.5

நாயன்மார்கட்டு குளத்தின் அருகே செல்லும் கனகரட்ணம் வீதியில், குளத்தின் நீர் வெளியேறும் பிரதான கால்வாயின் மதகின் ஒரு பகுதி சேதமடைந்து காணப்படுகிறது.

அரியாலைப் பகுதியுடன் நாயன்மார்கட்டு, புதிய செம்மணி வீதி, கல்வியங்காடு பகுதிகளை இணைக்கும் பிரதான போக்குவரத்துப் பாதையாக இந்த வீதி பயன்படுத்தப்படுகிறது.

மதகின் அரைவாசிப் பகுதி உடையும் நிலையில் தாழ்ந்து காணப்படுவதால் சிறிய வாகனங்கள் தவிர்ந்த பாரவூர்திகள் பயணிப்பதில் பெரும் ஆபத்துக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

அதேவேளை அந்த இடத்தில் மின்வெளிச்சம் இன்மையால் இரவு நேரங்களில் பயணிக்கும் வாகனங்கள் உடைந்த பகுதியின் மேல் சென்று முற்றாக இடிந்து விழுந்து விபத்துக்களைச் சந்திக்கக்கூடிய ஏதுநிலை காணப்படுகிறது.

தற்போது கட்டடப் பொருள்கள் மற்றும் பெரும் சுமைகளை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் மாற்று வழிகளைப் பயன்படுத்தி நீண்ட தூரம் சென்று வர வேண்டியுள்ளதாக சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

மிகவும் பழமையான இந்த மதகுப் பாலத்தை விரைவில் புனரமைத்து போக்குவரத்தை சீர் செய்ய, உரியவர்கள் கவனமெடுக்க வேண்டுமென மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (3-135)

## மெய்வன்மைப் போட்டிகள்

தென்மராட்சி, பெப்.5

கொடிகாமம் கெற்பேலி அ.த.க. பாடசாலை இல்ல மெய்வன்மைப்போட்டி நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம்பெறும்.

அதிபர் பொ. நடேசலிங்கம் தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.ஸ்ரீஸ்கந்தமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக ஆசிரிய ஆலோசகர் து.செல்வராசாவும் கலந்துகொள்வர். (3-9)

* * *

தென்மராட்சி, பெப்.5

கொடிகாமம் நாவற்காடு கணபதிப்பிள்ளை வித்தியாலய இல்ல மெய்வன்மைப் போட்டிகள் நாளைமறுதினம் வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

அதிபர் திருமதி வளர்மதி கபிரியேற்பிள்ளை தலைமையில் நடைபெறும் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு.கிருஷ்ணகுமார் கலந்துகொள்வார். (3-9)

### சாவகச்சேரி பொதுச் சந்தையில்

## மீன் விற்பனைப் பகுதிக்குள் அதிகரிக்கும் திருட்டுகள்

தென்மராட்சி, பெப்.5

சாவகச்சேரி பொதுச் சந்தையின் மீன் விற்பனைப் பிரிவுக்குள் அடிக்கடி திருட்டுகள் இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சந்தையில் மக்கள் அதிகமாகக் கூடும் வேளையில் மீன் விற்பனைப் பிரிவுக்குள் நடமாடும் திருடர்கள் பொதுமக்களிடம் பேர்ஸ் மற்றும் கைபேசி போன்றவற்றை அபகரித்துச் செல்வதாக தெரிவிக்கப்பட்டது. கடந்த வாரம் மீன் விற்பனைப் பிரிவுக்குள் மீசாலையைச் சேர்ந்த ஒருவரின் பேர்ஸ் திருடப்பட்டு அதனுள் இருந்த 18 ஆயிரம் ரூபா பணம் அபகரிக்கப்பட்டது. பேர்ஸ் அந்தப் பகுதியில் உள்ள கிணற்றின் அருகில் போடப்பட்டிருந்தது.

நேற்றுமுன்தினம் மீன் சந்தைக்குள் பெண் ஒருவர் கைப் பையினுள் வைத்திருந்த கையடக்கத் தொலைபேசியில் பேசிவிட்டு கைப் பையினுள் அதனை வைத்துள்ளார். மீனை வாங்கிக் கொண்டு வெளியில் வந்து அழைப்பு எடுப்பதற்கு பார்த்தபோது தொலைபேசி காணாமற் போயிருந்தமை கண்டு அதிர்ச்சியடைந்தார்.

மீன் சந்தைக்கு வரும் பொதுமக்கள் தாம் கொண்டு வரும் கைப் பைகளை அவதானமாக வைத்திருக்கும்படி அறிவுறுத்தப்படுகின்றனர். (3-9)

## சிறுத்தீவு லூர்து அன்னைக்கு கெபித் திருவிழா திருப்பலி

குருநகர், பெப்.5

சிறுத்தீவில் அமைந்துள்ள புனித லூர்து அன்னையின் கெபித் திருவிழாத் திருப்பலி எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்குத் தந்தை வண.பிதா ஆர்.எக்ஸ். நேசராஜா அடிகளார் அறிவித்துள்ளார்.

ஆலயம் சேதமடைந்து பற்றைகளால் மூடப்பட்ட நிலையில், குருநகர் புனித யாகப்பர் ஆலயப் பங்கினால் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு திருவிழாவுக்கு பக்தர்கள் செல்வதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குருநகர் கடற்கரையிலிருந்து வள்ளங்கள் மூலம் சிறுத்தீவுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. (3-51)

## சவூதிக்கு பணிப்பெண்களை அனுப்புவது இடைநிறுத்தம்

சவூதி அரேபியாவுக்கு பணிப்பெண்களை அனுப்பும் நடவடிக்கைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. இலங்கையின், வெளிநாட்டு தொழில் வாய்ப்பு முகவரகம் இதனை அறிவித்துள்ளது.

சவூதி அதிகாரிகளால் உத்தரவாதம் வழங்கப்படும் வரை, அங்கு பணிப்பெண்களை அனுப்புவது இடைநிறுத்தப்படுவதாக முகவரகம் குறிப்பிட்டுள்ளது.

சவூதியில் தற்போது 5 இலட்சம் இலங்கையர்கள் தொழில் புரிந்து வருகின்றனர்.

இந்தநிலையில் சவூதியில் இலங்கையின் பணிப்பெண்கள் தொடர்ந்தும் சித்திரவதைகளுக்கு உட்பட்டு வருவதன் காரணமாகவே அங்கு புதிய பணிப்பெண்களை அனுப்புவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு தொழில்வாய்ப்பு முகவரகம் குறிப்பிட்டுள்ளது. (3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம்
07.05.1933

மறைவு
06.01.2013

## அமரர் கனகரட்ணம் இராஜேந்திரம்

(ஓய்வுபெற்ற பிரதேச தபால் அத்தியட்சகர்)

## Mr.Kanagaratnam Rajendaram

(Rtd., Divisional Superintendant of Post Offices)

*கனகமும் நவமும் ரத்தினமாய் கை கோர்த்து*
*இராஜனாய் இந்திரனாய் உம்மை பெற்றெடுக்க*
*அழகாய் ஆனந்தமாய் சுந்தரியை மணமுடித்து*
*சுந்தர மதியும் சுமதியும் ஸ்ரீ லோகமாய் பெற்றெடுத்தீர்!*

*வசந்தத்தின் ஒவ்வொரு கல்லுமும் கதை சொல்லும்*
*வண்ணமாய் சொரியும் பூக்கள் பாடும் ராகம்*
*ஆசையாயும் வீட்டை வடிவமைத்துக் கடைசியாய் வாழ்ந்து*
*ஆறத்துயருக்காய் அறுவரையும் வரவழைத்தீர்!*

*எப்படி ஐயா முடிந்தது நோயின்றி நொடியின்றி*
*சொந்தமாய் சுயசரிதை எழுதி, நாள் குறிக்க?*
*இயன்றவரை மனவலிமையுடன் உடல் நலம் காத்தீர்!*
*இருதயம் இறுக்கமாய் இறுதியாய் இறக்கும் வரை!*

*ஜீவனாய் சுஜிதனும் சாந்தமாய் சஞ்சீவனும்*
*பண்பாய் பத்மினியும் தவமாய் துவாவும்*
*நிறைவாய் நிறஞ்சனும் தீபமாய் பிரதீபனும்*
*வீணையாய் பிரவீனாவும் மதுரமாய் மதுராவும்*

*சுகமாய் சுஹாசும் வேதமாய் நிவேதாவும்*
*நேசத்துடன் அபிஷேகும் உங்களைத் தேட*
*வசந்தத்தின் வாசலில் பூக்கள் சொரிந்துாங்கள்*
*ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!!!*

(27730) (2.6.7)

*எங்கள் அப்பாவின் திடீர் பிரிவுச் செய்திகேட்டு உடன் விரைந்து உரிமையுடன் கை கொடுத்த அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் இறுதி நிகழ்வுகளையும், கிரிகைகளையும் ஒழுங்குபடுத்த உதவிய அனைவருக்கும் எமது நன்றிகள். இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்கள், அனுதாபச் செய்திகளை தந்தி, கடிதம், குறுந்தகவல் மற்றும் மின் அஞ்சல் மூலம் அனுப்பியவர்கள், தொலைபேசி மூலம் எம் துயரை பகிர்ந்து கொண்டவர்களுக்கும் நன்றிகள். செவ்வாய்க்கிழமை, இன்று (05-02-2013) அன்று மதியம், எமது இல்லத்தில் நடைபெற இருக்கும், அந்தியேட்டிக்கிரியை நிகழ்வுகளில் பங்குபற்றுமாறு உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.*

அழகானந்தசுந்தரி (மனைவி), பிள்ளைகள் :- சுமதி, லோகேந்திரா, ஸ்ரீதர், மதிவதனி, சுந்தரவதனி.

**'வசந்தம்', கந்தஉடையார் ஒழுங்கை, புலோலி மேற்கு, பருத்தித்துறை**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பும்

தோற்றம்
11.07.1942

மறைவு
06.01.2013



## வைத்திலிங்கம் நாகராஜா

(நாகரட்ணம்)

**கடந்த 06.01.2013 (ஞாயிற்றுக்கிழமை) சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர் வைத்திலிங்கம் நாகராஜா அவர்களின் ஆத்மசாந்திக் கிரியை இன்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை பிரான்ஸில் அன்னாரின் மகளின் இல்லத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.**

**இலங்கையில் அன்னாரின் இல்லத்தில் 10.02.2013 (ஞாயிற்றுக்கிழமை) நடைபெறும் ஆத்மசாந்தி பிரார்த்தனையில் கலந்துகொண்டு, அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.**

தகவல்:
குடும்பத்தினர்
0033164775832 (பிரான்ஸ்)

சோமசுந்தரம் (சின்னத்துரை)
0774528837
வைத்திலிங்கம் வீதி, பெரியமாவடி,
சாவகச்சேரி. (மீசாலை புதிய புகையிரத நிலைய வீதி)

# பண மோசடி குற்றச்சாட்டில் ஒருவர் கைது

யாழ்ப்பாணம்,பெப்.05

வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி பலரிடமிருந்து ஒன்றரைக்கோடி ரூபா பணத்தைப் பெற்று மோசடி செய்த குற்றச்சாட்டில் போதகர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கோப்பாய் பகுதியைச் சேர்ந்த போதகர் ஒருவரே இவ்வாறு நேற்று முன்தினம் பிற்பகல் யாழ்.பொலிஸ் நிலையத்தை அண்மித்துள்ள இடத்தில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பல மாதங்களாகப் பலரிடமிருந்து இலட்சக் கணக்கில் பணத்தைப் பெற்றுவிட்டு அவர்களை ஏமாற்றி மோசடி செய்தார் என அவர் மீது குற்றஞ்சுமத்தப்பட்டுள்ளது.

அவருக்கு எதிராகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளின் அடிப்படையில் இதுவரை ஒன்றரைக்கோடி ரூபா வரை மோசடி செய்யப்பட்டுள்ளதாக ஆரம்ப விசாரணையில் தெரியவந்துள்ளது. (த-4)

# கிணற்றில் விழுந்து மூதாட்டி சாவு

யாழ்ப்பாணம்,பெப்.05

கிணற்றில் வீழ்ந்த மூதாட்டி நீரில் மூழ்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் கந்தர்மடம் அம்மன் கோயில் வீதியை அண்மித்து நேற்று திங்கட் கிழமை இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த மருதலிங்கம் இராஜலக்சுமி (வயது-70) என்ற மூதாட்டியே உயிரிழந்தவராவார்.

அவரது சடலம் பரிசோதனை மற்றும் விசாரணைகளுக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (த-4)

# எரிகாயத்துக்கு உள்ளான யுவதி சாவு

யாழ்ப்பாணம்,பெப்.05

வீட்டில் உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளான யுவதி ஒருவர் ஆபத்தான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவேளை இடைவழியில் உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் அளவெட்டி வடக்கில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது.

இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த கருணாநிதி கம்சினி(வயது-19) என்பவரே உயிரிழந்தவராவார்.

யுவதி ஆபத்தான நிலையில் வைத்தியசாலைக்கு கொண்டு செல்லலப்பட்டார். அங்கு பரிசோதனை மேற்கொண்ட போது அவர் உயிரிழந்து விட்டமை தெரியவந்தது.

விசாரணைகளின் பின்னர் சடலம் நேற்றுக்காலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)


## விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ள TenWheeler LJ.xxxx தொடர் இலக்கமுடைய கொன்ரையினர் விற்பனைக்குண்டு.

தொடர்பு- 0778925868,0779985970

(29231)(3.6)

## தவறிவிட்டது

ஐயனார் கோயில் வீதி, கொக்குவில் மேற்கு என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி இராசதுரை மனோரஞ்சிதம், என்பவரது தேசிய அ.அட்டை (487622540X) விசேட அ.அட்டை என்பன 20.12.2012 அன்று கொக்குவிலுக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்கண்ட முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு-0213207013 (29150)(3.6)

## வாடகைக்கு உண்டு

ஐயனார் கோயில் வீதி(தட்டாதெரு சந்தி) யில் அமைந்துள்ள ரமணன் கட்டடப் பொருள் விற்பனை நிலையத்திற்கு அருகில் உள்ள கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு- 0779742504,0212229296

(C/6224)(3.6)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111


## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்
Y.S.ஜெலீபன்
அவர்களின் பாசமிகு மாமியார்
**அமரர் நேசமலர் தேவராஜா**
அவர்களின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
வலயக்கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

(c/6225)(8.6.16)

## மரண அறிவித்தல்

### திருமதி இராசலக்சுமி மருதலிங்கம்



20/2 (8/1), அம்மன் வீதி, கந்தர் மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசலக்சுமி மருதலிங்கம் நேற்று (04.02.2013) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் கந்தர்மடத்தைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான திரு.திருமதி அரியரத்தினம் (இந்திரன் மில்) அவர்களின் மூத்த புதல்வியும் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி ராமுப்பிள்ளை அவர்களின் மருமகளும் மருதலிங்கத்தின் (மருதம் என்ரபிறைஸஸ், உரிமையாளர்) அன்பு மனைவியும் சுஜாதா (ஜேர்மனி), சுஜீவன் (தனுஸ்கபே, மருதம்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் தர்மராசா (ஜேர்மனி), அனுதினி ஆகியோரின் அன்பு மாமியும், ஆர்த்திகா, ஆரணியா (ஜேர்மனி), அபிநயா, துக்ஷிகா, தனுஷ் ஆகியோரின் அன்பு பேர்த்தியும் அருளானந்தம் (கனடா), கிளி, பவானி, இந்திரன் (கனடா), யோகேஸ்வரன் (ஜேர்மனி), ஜெகன் (கனடா) ஆகியோரின் சகோதரியும் சிவசம்புவின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 1 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

20/2 (8/1), அம்மன் வீதி,
கந்தர் மடம், யாழ்ப்பாணம்.
தொ.பே:- 0212226661

தகவல்:
குடும்பத்தினர்.


## குருக்கள் குடும்பம் தேவை

நயினாதீவு மலையின் நாயனார் (ஐயனார்) ஆலயத்திற்கு நிரந்தர குருக்கள் குடும்பம் தேவை, மேலதிக வருமானம் உண்டு. வீட்டுவசதி செய்துதரப்படும். சம்பளம் பேசித்தீர்மானித்துக் கொள்ளலாம்.

தொடர்பு - ஆலய முகாமைத்துவ முகாமையாளர்
V.R.K இரத்தின சபாபதி J.P, விவாகப்பதிவாளர்
60, கலட்டியம்மன் வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 0212225919,0213201864

தொடர்பு - ஆலய அறங்காவலர் சபைத்தலைவர்
முத்தையா மகாலிங்கம்.
8 ஆம் வட்டாரம் ,நயினாதீவு.
T.P. 0213210597, 0213212227

(29213)(6.16.12)


## மரண அறிவித்தல்

### நேசராசா நேசமலர்



பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும்,சிவன் புது வீதி , நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட நேசராசா நேசமலர் நேற்று (04.02.2013) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நேசராசாவின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான திருச்செல்வம்-ஆனந்தம் தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சிவக்கொழுந்து-பார்வதி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற ரமேஸ்குமார் மற்றும் சிந்துஜா (ஆசிரியர், யாழ்/ இந்து மகளிர் கல்லூரி), ரஜிக்குமார் (விற்பனை மேற்பார்வையாளர், எலிபன்ற் ஹவுஸ்), தனுஜா ஆகியோரின் பாசமிகு தாயாரும்,ஜெலீபன் (முகாமைத்துவ உதவியாளர், வலயக்கல்வி அலுவலகம், யாழ்ப்பாணம்.), றொனால்ட்,கலிஸ்ரா ஆகியோரின் மாமியும், யுகராஜா, காலஞ்சென்ற பத்திநாதர் மற்றும் ஜேசுதாசன் (பிரதான முகாமையாளர், இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்), ஞானமலர், லில்லிமலர் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற பத்மராசா மற்றும் நவமலர், புஸ்பமலர் ஆகியோரின் மைத்துனியும் விதுஷகான், ஜதுஷிகன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை பி.ப.2.00 மணியளவில் நல்லூர் புனித ஆசீர்வாதப்பர் தேவாலயத்தில் (சென்.பெனடிக்ற்) நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

34,சிவன் புது வீதி,நல்லூர்.
தொ.பே.: 021 568 8899

(29162)
(5-6-7)

தகவல்:
குடும்பத்தினர்.


## டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

உங்கள் வீடுகளில் உடைந்த பிளாஸ்ரிக் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றிலிருந்து மீண்டும் புதிய பொருள்கள் செய்து தரப்படும்.
உடைந்த கழிவுப் பொருள்கள் கொள்வனவு செய்யப்படும்.
இல. 06, [illegible]
கிளை: இல. 30/27, [illegible]
Tel: 021 222 8680, 0775925088, 0750407430


## விநாயகர் சனசமூக நிலையம்

கைதடி தென்கிழக்கு, விநாயகர் சனசமூக நிலையத்தின் 66 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு விநாயகர் சனசமூக நிலையத்தினால் விநாயகர் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் தென்மராட்சி ரீதியாக பின்வரும் போட்டிகள் நடாத்தப்படுகின்றன.

1.கரப்பந்தாட்டம் செற்அப்
2.கிரிக்கெற்
3.தாச்சிச் சுற்றுப் போட்டி

மேற்படி போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் விளையாட்டுக் கழகங்கள் எதிர்வரும் 12.02. 2013 செவ்வாய்க்கிழமைக்கு முன்னர் பதிவு செய்து கொள்ளுமாறு பணிவுடன் வேண்டிக் கொள்கின்றோம்.

நிர்வாகம்.
தொடர்பு:0750405949,
077 5834883.

(29157)(6.7.4)

## மரண அறிவித்தல்கள்

### சண்முகவடிவேல் காந்தாரம்மா



வட்டுக்கோட்டை வடக்கு, கலைநகரைப் பிறப்பிடமாகவும் அராலிவடக்கு,வட்டுக்கோட்டையை வசிப்பி டமாகவும் கொண்ட திருமதி சண்முகவடிவேல் காந்தாரம்மா (கட்டையம்மா) ஞாயிற்றுக்கிழமை (03.02.2013) காலமானார்.

அன்னார் ஆறுமுகம் சண்முகவடிவேலின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான செல்லையா குமரவேல்- நாகமுத்து தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-செல்லம்மா தம்பதியரின் மருமகளும், வீரநாகேஸ்வரி, ஜெயராணி,உதயராணி ஆகியோரின் அன்புத் தாயும், சுப்பிரமணியம், கவிதாசன், சந்திரகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற தேவ ராசா,புவந்திரன் மற்றும் பூலோக சுந்தரம்பிள்ளை, தெய்வேந்திரம்பிள்ளை, முருகையா, இன்பமலர் (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும், தணிகாசலம் பிள்ளை, சுப்பிரமணியம், மகமாரியம்மா,புனிதவதியம்மா, பரமகுரு நாதன், நிஸ்மலகுணம், காலஞ்சென்றவர்களான சிவலட்சுமி, இராஜேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (06.02.2013) புதன்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் அராலி வடக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை.

(29161)(5-6-7)

தகவல்:
ஆ.சண்முகவடிவேல்
(கணவர்)

## சின்னட்டி முருகையா

### (சின்னத்தம்பி)



விசவிட்டி,அளவெட்டி மேற்கு, அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட சின்னட்டி முருகையா நேற்று (04.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சின்னட்டி - நாகமுத்து தம்பதியரின் கனிஷ்ட மகனும், காலஞ்சென்றவர்களான தம்பிமுத்து -செல்லம்மா, சின்னத்தம்பி -செல்லம்மா தம்பதியரின் மருமகனும்,காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புக்கணவரும், சர்மிலா, சயந்தன் (பிரான்ஸ்) , சாருஜன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், தர்ம சீலனின் அன்பு மாமனாரும், அபிராம், அனுராம்,அஜிராம் ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ் சென்றவர்களான மாரிமுத்து, இலட்சுமி, மீனாட்சி, தம்பிமுத்து, பசுபதி, சின்னம்மா,செல்லையா,நாகம்மா மற்றும் சின்னத்துரை,சின்னக்கிளி ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம், செல்வரட்ணம், புஸ்பராணி, அழகேஸ்வரி, காலஞ்சென்ற கனகரட்ணம் மற்றம் கனகம்மா, பவளம், சிவராசா, குணரட்ணம், நாகேஸ்வரி,புவனேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், வசீகரன், விமலச்சந்திரன்,லிங்கேஸ்வரி காலஞ்சென்றவர்ளான சரஸ்வதி, முத்துக்குமார், குணரட்ணம் மற்றும் குமுதினி, சிவயோகேஸ்வரி, குமரேசர், தியாகலிங்கம் ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(05.02.2013) செவ்வாய்க் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப.11.00 மணியளவில் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி மேற்கு,அளவெட்டி.
தொ.பே:075 242 4318,077104 0719.

(29160)(6.7.4)

தகவல்:
குடும்பத்தினர்.

## 18 ஆம் ஆண்டு நினைவலைகள்

அமரர்

**சுப்பிரமணியம் குமாரசாமி**

**(குட்டி)**




ஊருக்கு ஒளியீந்த உதய நிலாவே
யாருக்கும் நன்மை செய்த நாயகனே
பாருக்கு பண்பு சொன்ன பாலகனே-எம்
சீருக்குச் சிரித்து நின்ற தெய்வமே -அப்பாவே
பாசத்துடன் எமைவளர்த்து
பண்புடன் வாழ வழிகாட்டிய - அப்பாவே
எங்குற்றாய் என்று தேடுகின்றோம் பதிலில்லை
தங்கம் பதிந்தவுன் தனிமுகத்தைக்
- காணவில்லை
18 ஆண்டுகள் சென்றாலும் உன் முகம்தான்
- மறந்திடுமோ அப்பா
ஆறவில்லை எம் துயரம் அப்பாவே
உங்கள் ஆத்மசாந்தியடைய
- பிராத்திக்கின்றோம்

குடும்பத்தினர்.
அம்மன் கோவிலடி
கச்சாய் தெற்கு கொடிகாமம். 0213735981

அன்னை மடியில் 18.12.1957 | அம்மன் அடியில் 26.01.1995

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



வையத்துள் வாழ 31.03.1942

வானுறையும் தெய்வம் 06.01.2013

## அமரர் அரியகுட்டி செல்வரத்தினம்

கடந்த 06.01.2013 ஞாயிற்றுக்கிழமை அமரத்துவமடைந்த எமது குலவிளக்கின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (05.02.2013) செவ்வாய்க் கிழமை காலை 6 மணிக்கு கசூரினா புனித தீர்த்தக்கரையிலும், வீட்டுக்கிருத்திய கிரியைகள் அவரது காரைநகர் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் வருகைதந்து அவரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அழைக்கின்றோம்.

அத்துடன் அன்னாரின் மரணச் செய்தியறிந்து வைத்தியசாலைக்கு வந்து ஆறுதல் கூறி உதவி புரிந்தோருக்கும், நேரில் வந்து ஆறுதல் தந்தும், தொலைபேசிமூலம் ஆறுதல் கூறியோருக்கும் கண்ணீர் அஞ்சலி, மலர் வளையம் செலுத்தியோருக்கும், காரைநகர் வலந்தலை இளையோர் அமைப்புக்கும், பேரப்பிள்ளையான ஜனார்த்தனனின் நண்பர்களுக்கும் வேறு பல வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். **- மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**இலகடி, காரைநகர்.** (C/6223) (2.6.7)

## மரண அறிவித்தல்

## சுந்தரம் சபாநாயகம்

(ஓய்வுபெற்ற சிவில் விமானசேவை உத்தியோகத்தர்)



கரணவாய், சிற்றம்பாதியைப் பிறப்பிடமாகவும், நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுந்தரம் சபாநாயகம் (ஓய்வுபெற்ற சிவில் விமானசேவை உத்தியோகத்தர்) நேற்று (04.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் ஞானேஸ்வரியின் அன்புக் கணவரும் ஸ்ரீதரன், ரமணீதரன் (பிரான்ஸ்), கிரிதரன் (ஜேர்மனி), ஹரிதரன், சசிதரன் ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணிக்கு அவரின் இல்லத்தில் (கரணவாய்) நடைபெற்று பூதவுடல் வெல்லன் கிரி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிற்றம்பாதி,
கரணவாய், கரவெட்டி.

(27732-6-16)

தகவல்:
ச.ஹரிதரன்
(மகன்).

advt@uthayan.com
0215671111

# மரண அறிவித்தல்



## செல்லையா சுப்பிரமணியம் (குட்டி)

(நிரூ யாழ்.டீசல் எஞ்சினியர்ஸ் யாழ்ப்பாணம்)

ஏழாலையைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சுப்பிரமணியம் நேற்று முன்தினம் (03.02.2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா-நேசம்மா தம்பதியரின் அன்பு மகனும், புனிதவதி (இராசாத்தி)யின் அன்புக் கணவரும், Dr.அபிரா, சுகந்தன்(பொறியியலாளர்), சாரங்கன் (பொறியியலாளர்), சோபிகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கணநாதன் (கணினியியல்), துஷ்யந்தி (மருத்துவவியல்) ஆகியோரின் அன்பு மாமனும், ஆதிநாத்தின் அன்புப் பேரனும், பாக்கிநாதன், செல்லமணி, தங்கராணி, சிவலிங்கம், நாகேஸ்வரி, யோகராசா, யோகேஸ்வரி, சூரியமலர், சிவசாமி, உதயராஜா, காலஞ்சென்றவர்களான சரஸ்வதி, வேலையா ஆகியோரின் அன்புச் சகோதரரும், மணிரதி, அருணாச்சலம், யோகராணி, கிருஷ்ணவேணி, சந்திரபோஸ், நந்தினி, காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், கந்தசாமி, அன்னபூரணம், ஐயம்பிள்ளை, துரைராஜா, சகுந்தலா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 2.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
*0212223826,*
*மகள் (லண்டன்) -00144786929081 9,*
*மனைவி (இந்தியா) -0091444285620 6.*

167/10, கோயில் வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம்.

## இ.போ.ச.கரப்பந்து இறுதியாட்டம்:

# யாழ்.அணி அதிரடி கவிழ்ந்தது வயம்ப




யாழ்ப்பாணம்,பெப். 5

இலங்கை போக்குவரத்துச் சபையின் 55ஆவது நிறைவையொட்டியும் அகில இலங்கைப் போக்குவரத்துச் சபையின் 21ஆவது விளையாட்டு விழாவின் ஓர் அங்கமாகவும் நடைபெற்ற ஆண்களுக்கான கரப்பந்தாட்டத்தில் யாழ்.பிராந்திய அணி சம்பியனானது.

**இரண்டாவது சுற்றை இழந்த வெறியோடு களமிறங்கிய யாழ்.பிராந்திய அணி வீரர்களின் ஆட்டத்தில் அனல் பறந்தது. எதிரணியை திக்குமுக்காட வைக்கும் வகையில் யாழ்.வீரர்கள் புள்ளிகளை தொடர்ச்சியாகக் குவித்தனர்.**

யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்த இறுதியாட்டத்தில் யாழ்.பிராந்திய அணியை எதிர்த்து வயம்ப பிராந்திய அணி மோதிக் கொண்டது.

5 சுற்றுக்களைக் கொண்ட ஆட்டத்தில், முதலாவது சுற்றை யாழ்.பிராந்திய அணி 25:14 என்ற புள்ளிகள் அடிப்படையில் இலகுவாக கைப்பற்றியது.

ஆனால் இரண்டவாது சுற்றில் வயம்ப பிராந்திய அணி தன்னுடைய முழுத் திறமையையும் பிரயோகித்து ஆடியது. பரபரப்பாக நடைபெற்ற இரண்டாவது சுற்றின் இறுதிக் கட்டத்தில் அடுத்தடுத்து புள்ளிகளைக் குவித்தது வயம்ப அணி. அந்த அணி இரண்டாவது சுற்றை 25:23 என்றபுள்ளி அடிப்படையில் தனதாக்கியது.

ஆயினும் அதற்குப் பின்னர் வயம்ப அணியின் வல்லமை யாழ்.பிராந்திய அணியிடம் எடுபடவில்லை. இரண்டாவது சுற்றை இழந்த வெறியோடு களமிறங்கிய யாழ்.பிராந்திய அணி வீரர்களின் ஆட்டத்தில் அனல் பறந்தது. எதிரணியை திக்குமுக்காட வைக்கும் வகையில் யாழ்.வீரர்கள் புள்ளிகளை தொடர்ச்சியாக குவித்தனர்.

இத்தகைய அசுர ஆட்டத்தின் பயனாக மூன்றாவது சுற்றை 25:15 என்ற புள்ளி அடிப்படையிலும், நான்காவது சுற்றை 25:19 என்ற புள்ளிகள் வித்தியாசத்திலும் யாழ்.பிராந்திய அணி சுவீகரித்துக் கொண்டது. இதனால் 3:1 என்ற ரீதியில் போட்டி யில் வெற்றியீட்டி சம்பியன் கிண்ணத்தையும் யாழ்.பிராந் திய அணி தனதாக்கியது.

இந்த நிகழ்வில் சிறிலங்கா சுதந்திர தொழில்சங்கத்தின் செயலாளரும், இலங்கை போக்குவரத்துச் சபையின் விளையாட்டு அவையின் சிரேஷ்ட உப தலைவருமான நிமால் அபயஸ்ரீ, இலங்கை போக்குவரத்துச் சபையின் விளையாட்டு அவையின் பொதுச் செயலாளர் என்.ஜீ. விமலதாஷ, ரஜரட்டை பிரதம பிராந்திய முகாமையாளர் மேர்வின் பெர்னாண்டோ, கொழும்பு பிராந்திய பிரதம முகாமையாளர் திலக் விக்கிரமசிங்க, வடபிராந்திய பிரதம முகாமையாளர் எஸ்.ஏ. அஸ்கர், இலங்கை போக்குவரத்துச் சபையின் விளையாட்டு அவையின் உப தலைவர் ஏ.எம்.எம். சந்திரஸ்ரீ, இலங்கை போக்குவரத்துச் சபையின் விளையாட்டு அவையின் நலன்புரி உத்தியோகத்தர் நிலந்த புஸ்பகுமார ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (ங-23)

## இன்றைய ஆட்டங்கள்



இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகம் யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தும் தாச்சிப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை மோதவுள்ள அணிகளின் விபரங்கள் வருமாறு:-

பிற்பகல் 3மணி

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் வி.க.

எதிர்

மயிலிட்டி வள்ளுவர் வி.க.

★ ★ ★

கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலருக்குமான உதைபந்தாட்டம் மற்றும் கபடி போட்டிகள் இன்று செவ்வாய்க்கிழமை வட்டக்கச்சி விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளன. இதில் குறித்த பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கழகங்கள் பங்குபற்றவுள்ளன.

★ ★ ★

ஆர்.இராசேஸ்வரன், மகிதரனின் ஆதரவுடன் யாழ். உதைபந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான மகிந்தன் வெற்றிக் கிண்ணத்துக்கான 7பேர் பங்குபற்றும் விலகல் முறையிலான பொங்கல் விழா உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று செவ்வாய்க்கிழமை யாழ்.துரையப்பாவிளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டத்தில் பங்கு கொள்ளவுள்ள அணிகளின் விவரங்கள் வருமாறு.

பி.ப 3.45மணி

விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகம்

எதிர்

பாரதி விளையாட்டுக் கழகம்

பி.ப 4.45மணி

அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகம் (நீலம்)

எதிர்

ஊரெழுறோயல் விளையாட்டுக் கழகம் (ங-23-228)

## அராலி ஜேம்ஸ் வெற்றிக்கிண்ண உதைபந்தாட்ட முடிவுகள் சில

வலி.வடக்கு,பெப்.05

அராலி ஜேம்ஸ் விளையாட்டுக் கழகம் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுசரணையுடன் வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தி வரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:-

மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகத்துக்கும் குப்பிளான் விக்னேஸ்வரா விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே நடைபெற்ற ஆட்டத்தில் இரு அணிகளும் சமபலத்தோடு மோதின. ஆயினும் இறுதியில் மூளாய் வளர்மதி விளையாட்டுக் கழகம் 2:1 என்ற கோல் கணக்கில் குப்பிளான் விக்கினேஸ்வரா விளையாட்டுக் கழகத்தை வெற்றி கொண்டது.

அராலி ஏ.எல். விளையாட்டுக் கழகத்துக்கும், அராலி கலைவாணி விளையாட்டுக் கழகத்துக்கும் இடையே மற்றொரு ஆட்டம் நடைபெற்றது. இதில் அராலி ஏ.எல் விளையாட்டுக் கழகம் 1:0 என்ற கோல் கணக்கில் கலைவாணி விளையாட்டுக் கழகத்தை வீழ்த்தியது.

இன்னொரு ஆட்டத்தில் தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழகமும் அராலி சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

இந்த ஆட்டத்தில் ஆரம்பத்திலிருந்தே நாமகள் விளையாட்டுக் கழக வீரர்கள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கினர். அந்த அணி வீரர்களின் கோல் மழையால் எதிரணி வீரர்கள் திகைத்துப் போயினர். இதனால் நாமகள் விளையாட்டுக்கழகம் இந்த ஆட்டத்தில் 4:0 என்ற கோல் கணக்கில் சில்வெஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை தோற்கடித்தது. (ங-86)

## சத்தியன் சாதனைச் சதம்; கொக்குவில் இந்து வெற்றி

வலி.வடக்கு, பெப்.05

கொக்குவில் இந்துக் கல்லூரி வீரன் சத்தியன் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் விளாசிய 169 ஓட்டங்களின் துணையோடு கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இன்னிங்ஸ் வெற்றி பெற்றது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான கிரிக்கெட் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயமும் மோதிக்கொண்டன.

இதில் முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 8 இலக்குகளை இழந்து 289 ஓட்டங்களைப்ள பெற்றுக் கொண்டது.

இதில் அபாரமாக ஆடிய சத்தியன் 21 பவுண்டரிகள், 7 சிக்ஸர்கள் அடங்கலாக 145 பந்துகளில் 169 ஓட்டங்களைப் பெற்றார். 2013 ஆம் ஆண்டில் பாடசாலை மட்டத்தில் இடம்பெற்ற போட்டி ஒன்றில் 150க்கு மேற்பட்ட ஓட்டங்களைப் பெற்ற முதலாவது வீரர் என்ற சாதனையை இவர் படைத்தார். சத்தியனோடு இணைந்தாடிய லிங்கநாதன் 42 ஓட்டங்களையும், பிரதாப் 28 ஓட்டங்களையும், சிலோஜன் 25 ஓட்டங்களையும் பெற்றார்கள்.

பந்து வீச்சில் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சதீசன், டினாளன் ஆகியோர் தலா 2 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி சகல இலக்குகளையும் இழந்து149 ஓட்டங்களையே பெற்றது.


இதில் டினாளன்72 ஓட்டங்களையும், இந்துஜன் 24 ஓட்டங்களையும், ஜசிந்தன் 14 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் சிலோஜன், பங்குஜன் ஆகியோர் தலா 3 இலக்குகளைக் கைப்பற்றினார்கள்.

இரண்டாவது இன்னிங்ஸுக்காக தொடர்ந்தும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தை துடுப்பெடுத்தாடுமாறு கொக்குவில் இந்து அணி பணித்தது.

அதற்கமைய தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணி கொக்குவில் இந்துவின் எதிர்கொள்ள முடியாமல் சகல இலக்குகளையும் இழந்து 56 ஓட்டங்களைப் பெற்றது. இதில் தனுஜன் 15 ஓட்டங்களைத் தமது அணி சார்பாகப் பெற்றார்.

பந்துவீச்சில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி சார்பில் பபிதரன் 4 இலக்குகளையும், பங்குஜன் 3 இலக்குகளையும், சிலோஜன் 2 இலக்குகளையும் கைப்பற்றினார்கள். (ங-86)



யாழ்.மாவட்ட விளையாட்டுத் துறை அதிகாரியாகப் பணியாற்றி அண்மையில் ஓய்வுபெற்ற திருமதி எ.எப்.ஜே. றூபசிங்கத்துக்கு யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம், யாழ்.மாவட்ட வலைப்பந்தாட்ட மத்தியஸ்தர் சங்கம் என்பன இணைந்து சேவைநலன் பாராட்டு விழா ஒன்றை கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடத்தின.

இதன்போது திருமதி எ.எப்.ஜே. றூபசிங்கத்துக்கு பிரபல வர்த்தகர் லயன் ஈ.எஸ்.பி. நாகரத்தினம் பொன்னாடை போர்த்தி நினைவுச் சின்னம் வழங்கினார். (ங-23)

# பாகிஸ்தான் படுதோல்வி

தென்னாபிரிக்காவுக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள பாகிஸ்தான் அணிக்கும், தென்னாபிரிக்க அணிக்குமிடையிலான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் தென்னாபிரிக்க அணி 212 ஓட்டங்களால் இலகுவான வெற்றியைப் பெற்றுக்கொண்டுள்ளது.





ஜொஹன்னர்ஸ்பேர்க்கில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி ஜக் கலிஸின் 50 ஓட்டங்கள், பஃப் டு பிளெஸிஸின் 41 ஓட்டங்களின் துணையோடு 253 ஓட்டங்களைப் பெற்றது.

பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ் 4 இலக்குகளையும், உமர் குல், ஜுனைட் கான் இருவரும் தலா 2 இலக்குகளையும், யுனிஸ்கான் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.



பாகிஸ்தான் அணி தனது முதல் இன்னிங்ஸில் 49 ஓட்டங்களுக்குச் சகல இலக்குகளையும் இழந்திருந்தது. இதில் அந்த அணி சார்பாக 2 வீரர்கள் மாத்திரம் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றிருந்தனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெயன் 6 இலக்குகளையும், ஜக் கலிஸ், வேர்ணன் பிலாந்தர் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றியிருந்தனர்.

தனது இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 3 இலக்குகளை இழந்து 275 ஓட்டங்களைப் பெற்றுத் தனது இன்னிங்ஸை இடைநிறுத்தி பாகிஸ்தானுக்குத் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை வழங்கியது.

தென்னாபிரிக்க அணி சார்பாக ஏபி.டி.வில்லியர்ஸ் ஆட்டமிழக்காது 103 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களையும், கிரேம் ஸ்மித் 52 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக உமர் குல் 2 இலக்குகளையும், சயீட் அஜ்மல் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

480 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஆரம்பத்தில் போராடியபோதிலும், நேற்று இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்தது. இறுதியில் சகல இலக்குகளையும் இழந்த பாகிஸ்தான் 268 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 211 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மிஸ்பா உல் ஹக் 64 ஓட்டங்களையும், அசத் சபீக் 56 ஓட்டங்களையும், நசீர் ஜம்ஷெத் 46 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 5 இலக்குகளையும், வேர்ணன் பிலாந்தர், மோர்னி மோர்கல் ஆகியோர் தலா 2 இலக்குகளையும், ஜக் கலிஸ் ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக தென்னாபிரிக்காவின் டேல் ஸ்ரெய்ன் தெரிவானார். (ந)

## உதைபந்திலும் சூதாட்டம்?

ஐரோப்பாவிலும் உலகெங்கிலும் உதைபந்தாட்டப் போட்டிகளில் ஆட்ட நிர்ணய சூதாட்டங்கள் பெருமளவில் நடந்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் பொலிஸார் கண்டறிந்துள்ளனர்.

ஐரோப்பாவில் மட்டும் கிட்டத்தட்ட 400 போட்டிகளில் சூதாட்டங்கள் நடந்துள்ளதாகச் சந்தேகம் இருப்பதாக யூரோபோல் என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் பொலிஸ் சுட்டிக்காட்டியுள்ளது.

அதே அளவான எண்ணிக்கை கொண்ட 'மட்ச்-ஃபிக்சிங்' சூதாட்டங்கள் ஆபிரிக்கா, ஆசியா மற்றும் லத்தீன் அமெரிக்க நாடுகளிலும் நடந்துள்ளதாக பல நாடுகளையும் சேர்ந்த பொலிஸ் அதிகாரிகளை உள்ளடக்கிய யூரோபோல் தெரிவித்துள்ளது.

உலகக் கிண்ணப் போட்டித் தொடர், ஐரோப்பிய சம்பியன் கிண்ணத்துக்கான தொடருக்குத் தகுதி-காண் போட்டிகள் மற்றும் ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக்கில் நடந்த போட்டிகள் எனப் பல்வேறு போட்டிகளின்போது இத்தகைய ஆட்ட நிர்ணய சூதாட்டங்கள் நடந்துள்ளதாக நம்பப்படுகிறது.

அணிகள் மற்றும் போட்டிகளுக்கான அதிகாரிகள், விளையாட்டு வீரர்கள் மற்றும் பல குற்றக் கும்பல்கள் என இந்தச் சூதாட்டங்களில் 400 க்கும் அதிகமானவர்கள் ஈடுபட்டுள்ளனர் என்று விசாரணை நடத்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

நீண்டகாலமாக நடந்துவந்த இந்த விசாரணைகள் மூலம் ஏற்கனவே பலருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந)

## இலங்கை வீரர்களுக்கு உயர்ந்த விலை



சென்னையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஐ.பி.எல். தொடருக்கான வீரர் ஏலத்தில் இலங்கை வீரர்கள் இந்த முறையும் அதிக தொகை கொடுத்து வாங்கப்பட்டனர். வழமைபோலவே ஏலத்தில் ஆஸ்திரேலிய வீரர்கள் அதிகளவில் கவனத்தை ஈர்த்திருந்த போதிலும், இலங்கை வீரர்களான அஜந்த மெண்டிஸ், திஸர பெரேரா, சச்சித்திர சேனநாயக்க ஆகியோர் உயர்ந்த பெறுமதிக்கு விலை கொடுத்து வாங்கப்பட்டனர்.

இலங்கை வீரர்களில் அஜந்த மெண்டிஸ், 725,000 அமெரிக்க டொலர்களுக்கு பூனே வொரியர்ஸ் அணியால் வாங்கப்பட்டார். திஸர பெரேரா 675,000 அமெரிக்க டொலர்களுக்கு சண்றைசர்ஸ்-ஹைதராபாத் அணியாலும், சச்சித்திர சேனநாயக்க கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியால் 625,000 அமெரிக்க டொலர்களுக்கு வாங்கப்பட்டனர்.

ஏனைய வீரர்களான ஜீவன் மெண்டிஸ் 50,000 மெரிக்க டொலர்களுக்கு டெல்லி டேர்டெவில்ஸ் அணியாலும், அகில தனஞ்சய 20,000 அமெரிக்க டொலர்களுக்கு சென்னை சுப்பர் கிங்ஸ் அணியாலும், குஷால் ஜனித் பெரேரா 20,000 அமெரிக்க டொலர்களுக்கு ராஜஸ்தான் ரோயல்ஸ் அணியாலும் வாங்கப்பட்டனர்.

இலங்கை வீரர்களில் உபுல் தரங்க, ரங்கன ஹேரத், டினேஷ் சந்திமால், பிரசன்ன ஜெயவர்தன, கௌஷால் சில்வா, டில்ருவான் பெரேரா, நுவான் பிரதீப், தம்மிக்க பிரசாத் ஆகியோர் விலைபோகவில்லை.

இந்த ஏலத்தில் ஆஸ்திரேலிய வீரரான கிளென் மக்ஸ்வெல் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும், இன்னுமொரு ஆஸ்திரேலியரான கேன் ரிச்சர்ட்ஸன் 70,000 அமெரிக்க டொலர்களுக்கும், இந்திய வீரரான அபிஷேக் நாயர் 675,000 அமெரிக்க டொலர்களுக்கும் அணிகளால் வாங்கப்பட்டனர்.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற இந்த ஏலத்தில் மொத்தமாக 37 வீரர்கள் அணிகளால் விலைக்கு வாங்கப்பட்டிருந்தனர். (ந)

# ஒன்றுபட்ட திறமையால் வென்றோம்

இந்தியாவில் இடம்பெற்றுவரும் மகளிர் உலகக்கிண்ணப் போட்டிகளில் உலகச் சம்பியனான இங்கிலாந்து அணிக்கெதிராகப் பெறப்பட்ட வெற்றி அணியின் ஒட்டுமொத்தச் சிறப்பான பெறுபேறு என்று இலங்கை மகளிர் அணியின் தலைவி ஷஷிகலா சிரிவர்தன தெரிவித்துள்ளார்.

இந்தப் போட்டியில் இங்கிலாந்து அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 238 ஓட்டங்களைப் பெற்றபோதும் அதனை நம்பிக்கையோடு துரத்திய இலங்கை அணி இறுதிப் பந்தில் வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

இந்த நிலையில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இலங்கை மகளிர் அணித்தலைவி ஷஷிகலா சிரிவர்தன,

"இந்த இலக்குத் துரத்தலே எங்கள் அணி அதிக ஓட்டங்களை வெற்றிகரமாகத் துரத்திய சந்தர்ப்பம். இவ்வாறான வெற்றிகரமான இலக்குத் துரத்தல் இங்கிலாந்து போன்ற அணிக்கெதிராக இலகுவானதல்ல.

இந்த வெற்றிக்கு இலங்கை அணியின் ஒட்டுமொத்த அணியும் சிறப்பான பெறுபேற்றை வெளிப்படுத்தியமையே காரணம்.



11 வீராங்கனைகளில் 7, 8 பேரின் திறமை வெளிப்பாடுகளின் துணையோடே இந்த வெற்றியைப் பெற்றுக் கொண்டோம்.

இதற்கு முன்னரும் இலங்கை அணி சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி வந்த போதிலும், ஒட்டுமொத்த அணியும் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்துவது இதற்கு முன்னர் இலங்கை அணியில் காணப்படவில்லை. இந்த வெற்றிதொடர்பாக அணியின் வீராங்கனைகள் அனைவரும் மிகவும் மகிழ்ச்சியும் நம்பிக்கையும் பெற்றுள்ளனர்" - என்று தெரிவித்தார். (ந)

# மாணவியைக் கற்பழித்த ஒலிம்பிக்வீரருக்கு சிறை



ஜப்பானில் கல்லூரி மாணவியைக் கற்பழித்ததாக ஒலிம்பிக் பதக்க வீரருக்கு நீதிமன்றம் 5 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது.

ஜப்பானின் ஜூடோ வீரர் மஸாத்தோ உசிஸ்ஷிமா, அந்நாட்டு ஜூடோ விளையாட்டுக் கூட்டமைப்பின் தேசிய பயிற்சியாளராக உள்ளார்.

இவர் 2004 ஆம் ஆண்டு ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியிலும், 2008 ஆம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றார்.

33 வயதான இவர், குப்ஷு ஒகூ பல்கலைக்கழகத்தில் ஜூடோ பயிற்சி பெற்று வந்த 19 வயது மாணவியைக் கடந்த 2011 ஆம் ஆண்டு டோக்கியோவில் ஹோட்டல் ஒன்றில் மது குடிக்க வைத்து, போதை மயக்கத்தில் இருந்தபோது கற்பழித்தார் என்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இவர் மீது டோக்கியோ நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கில் நேற்றுமுன்தினம் நடந்த விசாரணையில் உசிஸ்ஷிமாவுக்கு 5 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது.

தண்டனையை எதிர்த்து மேன்முறையீடு செய்யவுள்ளதாக மஸாத்தோ உசிஸ்ஷிபா கூறினார். (ந)

## பெருமை அடைகின்றோம்



எனது தந்தை, தாய், குடும்பத்தினர் நினைவாக உருத்திரபுரத்தில் அமைக்கப்பட்ட பேருந்து நிலையத்தை இன்று திறந்துவைக்கும் கிளிநொச்சி தொகுதியை தனி மாவட்டமாக்கியவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவரும் ஆகிய

### வீ.ஆனந்தசங்கரி

ஐயா அவர்கள் இன்றைய நிகழ்வில் கலந்துகொள்வதையிட்டு நாம் பெருமையடைகின்றோம்.

இவரின் காலத்தில் தமிழர்கள் சுயநிர்ணய உரிமையுடன் வாழ தீர்வு கிடைக்க வேண்டுமென எல்லாம் வல்ல ஐயப்பனை வேண்டுகின்றேன்.

லாக்காசிலோவ், பிரான்ஸ்
தொ.பே:- 0669268867
ஆறுமுகம் தியாகராஜா


## Physics Group Class

Thanichi Lane, Arasady Road.

K.Selvan B.Sc (Hons)

Day Class — பௌதீகவியல்

செவ்வாய், புதன், வியாழன் (4.30 - 5.30 p.m)

ஆரம்பம் : 06/02/2013 (புதன்) 4.30

(29238)(16.12)

## வாடகைக்கு

மல்லாகம் சந்திக்கு அருகில் மக்கள் வங்கி முன்பாக புதிதாக அமைக்கப்பட்டு முடியும் தறுவாயில் உள்ள ஒவ்வொன்றும் 46X20,46X27 விஸ்தீரணம் உள்ள இரு கடைகளைக் கொண்ட கட்டடம் வாடகைக்கு விடப்படவுள்ளது. வங்கி அல்லது காட்சியறைகளுக்குப் பொருத்தமானது. விசாலமான வாகனத்தரிப்பிடம் உள்ளது.

(29236)(6.16.12) தொடர்புகளுக்கு

0777305853, 0213218081

## Computer Repair and Services

உங்கள் இடங்களுக்கு வந்து

Computer Repairs, Formating, Software Installation, Networking செய்து தரப்படும்.

075-2414146

## ஞானோதய அக்கடமி

-சாவகச்சேரி- -கொடிகாமம்

(இரு இடங்களிலும்)

மாவட்டநிலையில் முன்னணிப் பெறுபேறுகளைப் பெற்ற எமது மாணவச் செல்வங்களை வாழ்த்தி

A/L Day Class

ஆரம்பம்

06.02.2013(புதன்) at 9.00 a.m

கலை, வர்த்தகப்பிரிவுகள்

* எமது திறமையும் அனுபவமும் வாய்ந்த ஆசிரியர் குழாம்
* கலைப்பிரிவில் மாவட்டநிலை 02 உட்பட முன்னணிப்பெறுபேறுகளைப் பெற்ற 30இற்கு மேற்பட்ட எமது மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதிக்கு தகைமை பெற்றுள்ளனர் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.

(29251)(8.6.16)

## உயர் கணக்கியல் கல்லூரி

சித்தன்கேணி

A/L 2013 DAY CLASS

கலை/ வர்த்தகப் பிரிவு

வர்த்தகப் பிரிவு

| | |
|---|---|
| பொருளியல்:- | திரு. M.C. சுதாகரன் |
| வணிகக்கல்வி:- | திரு. S.K. பாலசபேஷ் |
| கணக்கீடு:- | திரு.M.R. ரோஜிந்தன் |

கலைப்பிரிவு

| | |
|---|---|
| தமிழ்:- | உங்கள் ஆசிரியர் |
| வரலாறு: | S.S. தாஸ் |
| அரசியல்:- | M. அசோக் |
| புவியியல்:- | K. ரஜீவன் |
| நாடகமும் அரங்கியலும்:- | K. மங்களேஸ் |
| இந்துநாகரிகம், இந்துசமயம்:- | திரு.K.S. ரமணன் |
| மனையியல்:- | S. தபோதினி |
| ஆங்கிலம்:- | திரு.P. வினோதன் |

ஆரம்பம்

06.02.2013 புதன் காலை 7.00 மணி.


## மரண அறிவித்தல்

### நாகப்பர் நாகேசு

நயினாதீவைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நாகப்பர் நாகேசு நேற்று (04.02.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நயினாதீவு சல்லிபரவை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

6ஆம் வட்டாரம்,
வங்களாவெளி, நயினாதீவு.

தகவல்:
குடும்பத்தினர்.

C 6229

## மரண அறிவித்தல்கள்

### செல்வரத்தினம் சின்னத்தங்கம்



கைதடி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வரத்தினம் சின்னத்தங்கம் நேற்று (04.02.2013) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான வேலாயுதர் சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, அன்னம்மா, நடராசா மற்றும் துரைராஜா பொன்னம்மா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம், அம்பலவாணர், அன்னலட்சுமி மற்றும் கண்மணி, இலகுப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும் குமாரசாமி, நாகேஸ்வரி, குருயோகசரஸ்வதி, காலஞ்சென்ற அரியமலர், அருளானந்தம், பத்மநாதன், சிவதரன், சிறிதரன், கவிதரன் ஆகியோரின் ஆசை அம்மாவும் கிருபாகரன், பாமினி ஆகியோரின் ஆசை மாமியும் ஆவார்.


அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (05.02.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊரியான் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கைதடி தெற்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்.

### நடராசா அருணாசலம்



யாழ்ப்பாணம்,மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், நாமகள் லேன் கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும், தற்போது கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா அருணாசலம் கடந்த (02.02.2013) சனிக்கிழமை கனடாவில் காலமாகிவிட்டார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நடராசா- இரத்தினம் தம்பதியரின் அன்புப்புதல்வரும், காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி -செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும்,நாகரத்தினத்தின் அன்புக் கணவரும்,காலஞ்சென்ற மகாலட்சுமியின் சகோதரனும் காலஞ்சென்ற இரத்தினகுமார் மற்றும் அருணகுமார் (அருணா-U.K), ராஜ்குமார் (ராஜ்-கனடா), நந்தகுமார் (U.K), நிமலகுமார் (U.K) ஆகியோரின் அன்புத் தந்தையும், தபோதினி (U.K), மேகலா (கனடா), குமுதினி (U.K), தர்சினி (U.K) ஆகியோரின் மாமனும், ஜனனி, கஜானன், வினுசா, விதுசன், மகிசா,கனிசா,ஸ்ரீத்திக் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் (10.02.2013) ஞாயிற்றுக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ராஜ்(கனடா)
197,LA ROCCA AVE
WOOD BRIDGE (ONT)
L4H 2M3 CANADA T.P:0019056537501

தகவல்:
மதி 0777 046628

(4/6210)(6.7.4)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05.02.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.